662

குண்டூசி

மே 1948, எட்டு அணா

OFFICE OF THE REGISTRAR OF
5 JUN
MA

தி சிட்டாடல் பிலிம் கார்ப்பரேஷன் லிட், மதராஸ். 10

வெளியிடத் தயார்!

P. S. கோவிந்தன்
காளி N. ரத்னம்
R. பாலசுப்ரமணியம்
T. K. சம்பங்கி
K. K. பெருமாள்
M. G. சக்ரபாணி
ஸஹாதேவன்
M. E. மாதவன்
V. M. ஏழுமலை

★

வரலக்ஷ்மி
P. S. சிவபாக்கியம்
ஸரஸ்வதி
C T. ராஜகாந்தம்
M. M. ராதாபாய்

முதலியோர் நடித்த

சேலம் ஜெயப்பிரகாஷ் பிக்சர்ஸின் அற்புதச் சித்திரம்

போஜன்

நடனம்:

ஸ்ரீமதிகள் தாராசௌத்ரி, லலிதா & பத்மினி

சூபர்விஷன்: **T. R. சுந்தரம்**, B.A., B.Sc., (Leeds)

டைரெக்ஷன்: **L. S. ராமச்சந்திரன்** ஸ்டுடியோ: மாடர்ன்

பாட்டு: **P. R. ராஜகோபாலய்யர்** சங்கீதம்: **G. ராமநாதன்**

விபரங்களுக்கு:

ஜெயப்பிரகாஷ் பிக்சர்ஸ்,

எக்ஸ்டென்ஷன் சேலம்.

குண்டூசி

தமிழ் நாட்டின் அதிக
விநியோகமுள்ள கலைப்
— பத்திரிகை —

பிரதி மாதம் வெளிவரும்

சந்தா விவரம்

உள் நாடு

வருஷ சந்தா	... ரூ.	6
ஆறுமாத சந்தா	... ரூ.	3
தனிப் பிரதி	அணா	8

இலங்கை

வருஷ சந்தா	... ரூ.	6
தனிப் பிரதி	சதம்	50

வெளி நாடு

வருஷ சந்தா	... ரூ.	
தனிப் பிரதி	அணா	1

விளம்பர விகிதங்கள்

(ஒரு தட்வைக்கு)

அட்டை

முன் பக்கம்	... ரூ,	450
கடைசி பக்கம்	ரூ.	250
2&3-ம் பக்கம்	ரூ,	150

சாதாரணப் பக்கம்

ஒரு பக்கம்	... ரூ.	75
அரைப் பக்கம்	... ரூ.	40
1/3 பக்கம்	... ரூ.	30
கால் பக்கம்	... ரூ.	25

வர்ண விளம்பரங்களுக்கு
25% அதிகம்

இந்த ஊசியில்

வெளியூர் தியேட்டர்கள்	தலையங்கம்	5
உள்ளது உள்ளபடி	"ஜடாயு"	6
ஞான சௌந்தரி	பட விமர்சனம்	9
(வால்) நரக்காதலர்கள்	கேலிச் சித்திரம்	11
எம். எஸ், சுந்தரிபாய்	மூவர்ணப் படம்	13
குமாரி ருக்மணி	ஆர்ட் படம்	14
குமாரி ருக்மணி	வாழ்க்கை வர்ணனை	15
ராமதாஸ்	பட விமர்சனம்	21
குண்டூசியைக் கேளுங்கள்		23
செய்திப் படங்கள்		31
பொது ஜனம் பேசுகிறார்		39
நுனிப் புல்	"வெட்டுக்கிளி"	43
என்ன ஆச்சர்யம்!	கே, மஹாதேவன்	47
கேட்பாரில்லை	"மார்ஸ்"	50
விசித்திர வனிதா	பட விமர்சனம்	52
எம். வி. ராஜம்மா	ஆர்ட் படம்	55
ராஜம்மா. மஹாலிங்கம்	ஆர்ட் படங்கள்	56
இது செய்தி		57
இயற்கை நடிப்பு!	தமாஷ் சித்திரம்	61
புஸ்தகப் பொழுது	விமர்சனம்	65
பிரம்ம லோகம்	படச் செய்திகள்	66
குண்டூசி டைரி		68

கட்டுரையாளர்களுக்கு :

"குண்டூசி"க்கு கேள்விகள், நேயர்களின் அபிப்பிராயங்கள், வெளியூர் சினிமா நிகழ்ச்சிகள், சினிமா சம்மந்தமான விகடத் துணுக்குகள், சித்திரங்கள், கட்டுரைகள், கதைகள் இவையெல்லாம் வரவேற்கப் படுகின்றன. எழுதி அனுப்புபவைகளை காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் சுத்தமாக எழுதி அனுப்ப வேண்டும். அங்கிகரிக்கப்படாதவைகளை திரும்பப் பெற விரும்புகிறவர்கள் ஸ்டாம்பு வைத்தனுப்ப வேண்டும். கட்டுரையாளர்களுடன் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ளுவது சாத்தியமில்லை.

"குண்டூசி", 246, தம்பு செட்டி தெரு, சென்னை 1.

349
JL
NWm, 211, NH7
1948.1.9

போட்டி வெற்றி சுலபம்

ரூ. 5000*

போட்டி
N. 66

இந்தக் கட்டத்தில் 9 முதல் 24 வரையிலுள்ள எண்களை இடமிருந்து வலமும், மேலிருந்து கீழும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 66 வரும்படி அமைக்கவும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கலாம்.

கடைசி தேதி :

முந்திய விடை
L. 58

9	22	16	11
19	8	14	17
12	15	21	10
18	13	7	20

உங்கள் விடைகளை 5-6-48க்குள் தபாலில் போடவேண்டியது

15-6-48 ல் சரியான விடை வெளியிடப்படும்.

I, II பரிசுதாரர்களுக்கு தந்தியடிக்கப்படும், எல்லோருக்கும் பரிசு ஜாபிதா அனுப்பப்படும்.

5 பரிசுகள், ரூ. 2,000, 1,000, 800, 650, 550

மதராஸ் ரிலையன்ஸ் பாங்கில் சீல் செய்து டிபாஸிட்டில் வைத்துள்ள விடைக்கு எண்ணுக்கு எண் கட்டத்திற்கு கட்டம் சரியான விடைக்கு முதற் பரிசும், முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு 2-ம் பரிசும், முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு 3-ம் பரிசும், முதல் இரண்டு எண் சரியான விடைக்கு 4-ம் பரிசும், முதல் எண் மாத்திரம் சரியான விடைக்கு 5-ம் பரிசும், அளிக்கப்படும்.

போட்டிகள் அடிக்கடி நடைபெறும். விவரங்கள் இனும்

பிரவேசக் கட்டணம் : 1 விடைக்கு ரூ. 1-0-0; 6 க்கு ரூ. 5-0-0 மாத்திரம்.

எத்தனை விடைகள் வேண்டுமானாலும் சாதாரண காகிதத்தில் தயாரித்து டீ கட்டணத்துடன் அனுப்பவும். பரிசு ஜாபிதாவுக்காக உங்கள் அட்ரஸ் எழுதிய கவர் ஒன்று வைக்கவும். டீ கட்டணத்தொகையை மணியார்டர் மூலமாக அனுப்பவும். உங்கள் அட்ரஸை M. O. கூபனிலும், கவரிலும் தவருமல் குறிக்கவும்.

★ நிகர வசூல் ரூ. 5000 க்குக் குறைந்தால் பரிசுகளின் தொகையும் அதற்கேற்றாற்போல் குறைத்து பகிர்ந்து அளிக்கப்படும். எல்லா விஷயங்களுக்கும் எங்கள் தீர்ப்பே முடிவானது போட்டியில் கலந்து கொள்பவர்கள் மேற்படி விதிகளை ஏற்றுக்கொண்டதாகவே பாவிக்கப்படும். மற்ற விதிகள் வழக்கம்போல்.

லக் & கோ., Firm No. 1564(od. Govt. Regd. 43/23, ஈஸ்வரன் தெரு, மதராஸ் 17.

பட்டை 1
ஊசி 8

மே
1948

குண்டூசி

ஆசிரியர்
பி.ஆர்.எஸ்.கோபால்

வெளியூர்த் தியேட்டர்கள்

சென்ற மூன்று நான்கு மாதங்களாக "பொதுஜனம் பேசுகிறார்" பகுதியில் தியேட்டர்களைப் பற்றிய புகார்களே பிராதான்யம் வகிக்கின்றன. இவைகளிலிருந்து வெளியூர் தியேட்டர்களில் பல எவ்வித மோர்சமான நிலைமையில் இருக்கின்றன என்பதை அறியலாம்.

டிக்கெட் வாங்குவதற்கு குண்டர்களின் இடையூறுகள், டிக்கெட் கள்ள விற்பனை, தியேட்டருக்குள் காலிகளின் அட்டூழியம், விசிறிகளிருந்தும் அவைகளை ஓட்டாமல் சிக்கனம் செய்தல், காலதாமதமாகப் படங்களை ஆரம்பித்தல், இன்னும் இது மாதிரி தங்கள் ஊர்த் தியேட்டர்களில் உள்ள குற்றம் குறைகளையெல்லாம் ஏராளமான நேயர்கள் எழுதிவருகின்றனர். நாமும் சில முக்கிய நகரங்களுக்குச் சென்றிருந்தபோது, பல தியேட்டர்களை "தியேட்டர்கள்" என்று சொல்ல முடியாத மோசமான நிலையில் இருப்பதை நேரில் கண்டு வந்தோம்.

ஒரு சினிமாத் தியேட்டர் எவ்விதமாக அமைக்கப்பட வேண்டும்; என்னென்ன சுகாதார வசதிகள் இருக்க வேண்டும் என்பதை சினிமாச் சட்டம் விவரிக்கிறது. ஆனால் வெளியூர் தியேட்டர்கள் சிலவற்றைப் பார்த்தபோது, இவ்விதச் சட்டமொன்று அமுலில் இருக்கிறதா என்றே சந்தேகம் ஏற்படலாயிற்று. அநேக தியேட்டர்காரர்கள், ஒன்று சட்டத்தை ஏமாற்றி வருகிறார்கள்; அல்லது அந்தந்த ஊர் அதிகாரிகள் அசிரத்தையாயிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

சென்னை சர்க்கார் இனியும் சும்மா இருக்கக் கூடாது. தங்கள் அதிகாரிகள் மூலம் இம்மாகாணத் தியேட்டர்களைப் பார்வையிடச் செய்து, சினிமாச் சட்டத்தை தயை தாட்சிணியமின்றி அமுல் செலுத்தும்படி செய்ய வேண்டும். சுகாதார வசதிகளில்லாத தியேட்டர்களுக்கு லைசென்ஸை ரத்து செய்ய வேண்டும். தகுந்த போலீஸ் பாதுகாப்பை அளித்து குண்டர்களின் அட்டூழியங்களை ஒழிக்க வேண்டும். பொதுஜன நன்மையை உத்தேசித்து சர்க்கார் இவைகளை உடனே செய்வார்கள் என்று நம்புகிறோம்.

உள்ளது உள்ளபடி

சுமார் ஒரு வருஷ காலத்திற்கு முன் தென்னிந்திய சினிமா ஊழியர்கள் ஒரு சங்கத்தை ஸ்தாபித்துக் கொண்டது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். இச் சங்கத்தின் முதல் வருஷாந்திர மஹாநாடு இம்மாதம் 14-ந்தேதியன்று சென்னை மஹாஜன சபா ஹாலில் நடைபெற்றது. ஸ்ரீ. ஸ்ரீனிவாஸ ராவ் கடவுள் வணக்கம் பாடினார். ஸ்ரீபாத சங்கர் கொடியை ஏற்றி வைத்தார் ஸ்ரீ. கே. எஸ். கோபாலகிருஷ்ணன் தான் வரவேற்பு கமிட்டித் தலைவர். ஸ்ரீ வி. நாகய்யாவால் திறந்து வைக்கப்பட்ட இம் மஹாநாட்டிற்கு, ஸ்ரீ. டி. எஸ். ராமானுஜம் தலைமை வகித்தார்.

சர்க்காரும் சினிமாவும்

இந்த மஹாநாட்டில் இரண்டு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. சினிமாத் தொழிலை தேசிய மயமாக்குவதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் போட்டிருக்கும் திட்டம் அவ்வளவுக்காவது இந்திய சினிமாத் தொழிலை நம் சர்க்கார் தேசிய மயமாக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் கேட்டுக் கொள்கிறது. சினிமாத் தொழில் விஷயத்தில் சர்க்கார் தகுந்த அக்கரை செலுத்தாமலிருந்து வருகிறார்கள். அவர்கள மட்டும் இத்தொழிலை தேசிய மயமானதாக்க முற்பட்டு விட்டால்: பிறகு இத்தொழில் வேகமாக முன்னேறி, நாட்டுக்கும மக்களுக்கும் நல்ல பயனை அளிக்கும் என்பது நிச்சயம்.

விடுமுறைச் சட்டம்

சமீபத்தில், சென்னை தியேட்டர் ஊழியர்களுக்கும், முதலாளிகளுக்கும் ஏற்பட்ட தகராறு மத்தியஸ்தம் செய்யப்பட்டு, வாராந்திர விடுமுறை, சம்பள உயர்வு, முதலியவை பற்றிசிபார்சு செய்யப்பட்டதில்லவா? இந்தமத்தியஸ்தக் கோர்ட்டின் சிபாரிசை சென்னை தியேட்டர்காரர்கள்சரிவர அமுலுக்குக் கொண்டு வரவேண்டு மென்றும், இந்த சிபாரிசை சென்னை நகர தியேட்டர்காரர்களைப் போலவே மாகாணத் தியேட்டர்காரர்கள் அனைவருமே அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரும்படி சட்டம் இயற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு இன்னொரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இவ்விரண்டும் வரவேற்கபப்ட வேண்டிய தீர்மானங்களாகும்.

கலையா, தொழிலா ?

சினிமா ஒரு கலையா, தொழிலா என்பது பற்றி நெடுநாளாக சர்ச்சை இருந்து வருகிறது. பட முதலாளிகள் "சினிமா ஒரு தொழில் தான்" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவந்திருக்கிறார்கள். கலா ரஸிகர்களோ "இது ஒரு கலை" என்று கதறி வந்திருக்கிறார்கள். சினிமாவை ஒரு தொழிலாகக் கருதியபின், அந்த ரீதியில் சினிமாத் தொழிலாளர்கள் தொழில் சங்கங்களை ஏற்படுத்திக் கொள்வதையோ, தங்கள் குறைகளை போக்கிக் கொள்வதற்காக தொழிற் சங்க முறைகளை கையாளுவதையோ சினிமா முதலாளிகள் ஆட்சேபிப்பதற்கில்லை. "மற்ற தொழிலாளிகள் போல சினிமாத் தொழிலாளர்களும் நடந்து கொண்டால் சினிமாத் தொழில் குட்டிச் சுவராகி விடும்" என்ற ஞானோதயம் அவர்களுக்கு இப்பொழுது தான் ஏற்படுகிறது. சினிமாவை ஒரு கலையாகவும், அதில் ஈடுபட்டவர்களை கலைஞர்களாகவும் கருதி நடந்திருந்தால் இந்த ஆபத்தெல்லாம் ஏற்பட்டிராதல்லவா ?

நாகய்யா உபதேசம்

மேற்படி மஹாநாட்டில் ஸ்ரீமான் நாகய்யா பேசியபோது, "வேலை நிறுத்தங்கள் செய்வதால் முதலாளிக்

கும் தொழிலாளிக்கும் இடையே உள்ள மனஸ்தாபம் அதிகரிக்கிறதே தவிர தீர்ந்து போவதில்லை. ஆதலால் வேலை நிறுத்தமில்லாமல் குறைகளை நீக்கிக் கொள்ளுவதற்கு வேறு சக்தி வாய்ந்த முறையைக் கண்டுபிடிக்க வேண்டும்'' என்று கூறினர். ஸ்ரீ. நாகய்யா கூறியது மிக உண்மையான பேச்சு. சினிமாக் கலை நன்கு முன்னேறி வரவேண்டுமானல் அதில் ஈடுபட்டுள்ள அனைவருடைய ஒத்துழைப்பும் பரிபூரணமாய் இருந்தாக வேண்டும். அவ்வித ஒத்துழைப்பு இல்லாமற்போனல் இக்கலை அடியோடு பாழாகிவிடும். இதை சினிமாத் தொழிலாளர்களும், முதலாளிகளும் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். முதலாளிகளாக உள்ளவர்கள் சினிமாத் தொழிலாளர்களின் நியாயமான குறைகளை நீக்கி, வேலை நிறுத்தம், மனக்கசப்பு முதலியவைகள் ஏற்படாமல் தடுப்பதுதான் புத்திசாலித்தனமாகும்.

விடுமுறை ஏற்பாடு

தியேட்டர் ஊழியர்களுக்கு வாரத்தில் ஒரு தினம் விடுமுறை விட வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டதின் விளைவாக சென்னை நகரத் தியேட்டர்கள் அனைத்தும் பிரதி திங்கட் கிழமைகளில் மூடப்பட்டன அல்லவா? இது போல எல்லாத் தியேட்டர்களும் ஒரே நாளில் மூடப்படுவதை ஆட்சேபித்து பல மூலைகளிலிருந்தும் கூக்குரல் கிளம்பியதல்லவா? இதற்கு இப்பொழுது ஒரு விமோசனம் ஏற்பட்டு விட்டது. நகரத் தியேட்டர்காரர்கள் இனி விடுமுறை விடுவதற்காக தியேட்டர்களை மூடுவதில்லை யென்றும் விடுமுறை விடும் அன்று புதிய நபர்களை வைத்துக் கொண்டு காட்சிகளை நடத்துவது என்றும் தீர்மானித்து, அதை அமுலுக்கும் உடனே கொண்டுவந்திருக்கின்றனர். காலதாமதமாகச்செய்யப்பட்டதென்றாலும் இது மிகவும் பாராட்டத் தக்க தீர்மானம் என்பதில் ஆட்சேபனையில்லை. இதற்காக நகரதியேட்டர்காரர்களைப் பாராட்டுகிறோம்.

சினிமாவுக்கு பண உதவி

சென்ற சில மாதங்களாக சினிமாத் தொழில் அநுபவித்து வரும் கஷ்டம் சொல்லத் தரமல்ல. இப்பொழுது இருந்து வரும் குழப்பமான நிலைமை இதற்குமுன் எப்பொழுதுமே இருந்ததில்லை. யுத்த காலத்தில் சினிமாத் தொழில் எவ்வளவு அமர்க்களப்பட்டதோ அவ்வளவுக்கு இப்பொழுது ஒடுங்கிப் போய்க் கிடக்கிறது. "தற்போதைய படவுலகில் எல்லாம் இருக்கிறது; ஆனல் பணம்தான் இல்லை" என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

பத்து வருஷங்களுக்கு முன், "சினிமாத் தொழில் ஒரு லாபகரமான தொழில். இதற்குப் பண உதவி செய்ய பாங்குகளும், தனவந்தர்களும் முற்படவேண்டும்'' என்று பேசுவதும், எழுதுவதும், தீர்மானங்களை நிறைவேற்றி வைப்பதும் வழக்கம். அதே நிலைமைதான் பத்து வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுது மீண்டும் நிலவ ஆரம்பித்திருக்கிறது.

இடைக்காலத்தில் தனவந்தர்களும் பாங்குகளும் இத் தொழில் விஷயத்தில் தைரியங் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக பண உதவி செய்ய முற்பட்டனர். யுத்த காலத்திலோ இத் தொழில் இருந்த "செழிப்பில்" மயங்கிப் பல பாங்குக்காரர்கள் நம் பட முதலாளிகளுக்கு ''ஓவர் டிராப்ட்''டுகளை அளிக்கக் கூட முற்பட்டனர். ஆனல் ''கிண்டி ரேஸ்'' மனப்பான்மையுடன் யுத்த காலத்தில் இத் தொழிலில் இறங்கிய பலருக்குக் கொடுத்த கடன் திரும்பி வரவில்லையாம். சமீபத்தில் இரண்டு பாங்குகள் 'திவால்' ஆனதற்குக் கூட இதுதான் காரணமென்று சொல்லப்படுகிறது. இதன்

விளைவாக, பட முதலாளிகளுக்குக் கடன் கொடுத்திருந்தவர்களெல்லாம் அதைத் திருப்பிக்கேட்கவும், சினிமாத் தொழிலில் தற்போது காணப்படும் நெருக்கடி ஏற்படலாயிற்று. சில நாடோடிப் பட முதலாளிகளின் முன் யோசனையற்ற செய்கைகளின் விளைவாக, நியாயமான முறையில், நின்று நிலைத்துப் படம் தயாரித்துக் கொண்டிருப்பவர்களுக்குக் கூடப் பண உதவி கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது.

நிலைமை மாறவேண்டும்

தற்போது கணக்கெடுத்துப்பார்த்தால், இரண்டு லக்ஷம், மூன்று லக்ஷம் என்று பணத்தைச் செலவழித்துவிட்டு, இருபது அல்லது முப்பதினாயிரம் ரூபாய்களைச் சமாளிக்க முடியாததால், படத்தைமுடிக்கமுடியாமலோ, அல்லது முடித்த படத்திற்கு பிரதிகள் எடுக்க முடியாமலோ, அல்லது விநியோகிக்க முடியாமலோ, அநேக படமுதலாளிகள் தவிப்பதைக் காணலாம். இத்தகைய படமுதலாளிகளுக்கு மொத்தம் நாலு லக்ஷ ரூபாய்களை யாராவது உதவ முற்பட்டால் சுமார் ஒரு டஜன் படங்கள் உடனே வெளி வந்துவிடக்கூடும். ஆனால் முன்பெல்லாம் ஒரு படத்திற்கே பத்து லக்ஷரூபாய்களை உதவ முன்வந்த பண முதலாளிகள், இப்பொழுது பத்துப் படத்திற்குச் சேர்த்து ஒரு லக்ஷரூபாய்களை உதவத் தயாராயில்லை. இந்த மோசமான நிலைமை நீடிக்குமானால் படத்தொழில் அடியோடு படுத்துவிடும்.

ஜெயப்பிரகாஷின் "போஜன்" தமிழ்ப் படத்தில் எஸ். வரலக்ஷ்மி.

பிலிம் பாங்க்

இவ்வளவு வருஷ அநுபவங்களுக்குப் பிறகும் இத்தொழில் வெளிப் பண உதவியையே எதிர் பார்த்துக் கொண்டு நடக்குமானால், மழையை நம்பிக் கொண்டு நெல் விதைத்தது போலவேதான் முடியும். இனியாவது சரியான திட்டங்களுடன், "தன் கையே தனக்கு உதவி" என்ற கொள்கையுடன் முன்னேற வேண்டும். பட முதலாளிகள்ஒன்றுசேர்ந்து ஒரு பிலிம் பாங்கை ஸ்தாபித்து நடத்தலாம். இந்த பாங்க் படத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும் பண உதவி செய்யலாம். நம் பட முதலாளிகள் மட்டும் ஒற்றுமைப் பட்டு விட்டால் பிலிம் பாங்க் மட்டுமா; இன்னும்எவ்வளவோ காரியங்களைச் சாதிக்கலாம். ஆனால் அவர்களிடம் இந்த ஒற்றுமை ஏற்படுமா என்பது தானே கேள்வி!

காந்திஜி ஞாபகார்த்த நிதி

காந்திஜி ஞாபகார்த்த நிதிக்குப் பணம் வசூலிப்பதற்காக தென்னிந்திய பிலிம் சேம்பர் ஒரு பிரத்தியேகக் கமிட்டியை அமைத்திருப்பதற்காக சந்தோஷிக்கிறோம். சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு காந்திஜியிடமும் தேசத்திடமும் உள்ள பற்றுதலைக் காட்டுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். சினிமா மூலம் கொள்ளையாக சம்பாதித்தவர்கள், சம்பாதிப்பவர்கள் எத்தனையோ பேர்களிருக்கிறார்கள். இவர்கள் தாராள மனது வைத்தால் இந்த நிதிக்குவேண்டிய தொகை பூராவையும் சினிமாத் தொழில் ஒன்றே கொடுத்துவிட முடியும் என்பது உண்மை. இது விஷயத்தில் படத்தொழிலில் சம்பந்தப்பட்ட நம்மவர்கள் தாராளமாய்நன்கொடை அளிப்பார்கள் எனஎதிர்பார்க்கிறோம்.

ஞானசௌந்தரியில் கான விருந்து

நாடகக் கதை நல்ல படமாக வருகிறது

"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்" என்று சொல்லுவார்கள். அது நிஜமோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு நல்ல ஸ்டுடியோவில் வேலை செய்யும் புத்திசாலியான ஒரு "கிளாப் ஸ்டிக் பையன்" கூட சில வருஷ ஊழியத்திற்குப் பின்னர் ஒரு நல்ல டைரெக்டராகி விட முடியும் என்று நான் கூறுகிறேன். இதுபோல முன்பே சிலர் கேமிராமென்களாகவும், ஒலிப்பதிவாளர்களாகவும், டைரெக்டர்களாகவும் மாறிப் புகழுடன் விளங்குகின்றனர். அவ்வளவெதற்கு; ஜனாப். எப். நாகூரைத்தான் எடுத்துக் கொள்ளுங்கள். அவர் நியூடோன் ஸ்டுடியோ ஆரம்பித்தபோது அதில் ஒரு சாதாரண ஊழியராய்ச் சேர்ந்தார். பிறகு செட்டிங்ஸ் மாஸ்டராகவும், ஆர்ட் டைரெக்டராகவும் மாறி பல படங்களில் தம் திறமையைக் காட்டியிருப்பதோடு நியூடோனுக்கும் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார். இத்தகைய அநுபவசாலி இப்பொழுது டைரெக்டர்—படமுதலாளியாக மாறி ஒரு படத்தைத் தயாரித்து வெளியிட்டிருப்பது எனக்கு சந்தோஷத்தை அளிக்கிறது. அவருடைய முதன் முயற்சியான விட்டாடல் "ஞான சௌந்தரி" ஒரு அழகான படமாக அமைந்துவிட்டதோ அதைவிட அதிக சந்தோஷத்தை அளிக்கிறது.

ஞானசௌந்தரி ஒரு கிறிஸ்தவ மதப் பிரசாரக் கதையாகும். இருந்தபோதிலும் கிறிஸ்தவர்களல்லாத நம் நடிகர்களால் அது மேடையில் நடிக்கப்பட்டு ஒரு பிரபல நாடகமாக விளங்கிவந்தது. முன்பு ஒரு முறை சினிமாப் படமாகவும் எடுக்கப்பட்டு வெளி வந்திருக்கிறது.

இக்கதை இவ்வளவு பிரபலம் அடைந்ததற்கு முக்கிய காரணம், அதில் எல்லோரும் விரும்பக் கூடிய சில நல்ல அம்சங்கள் பொருந்தியிருப்பதுதான். தர்மர் என்ற அரசன் தன் ஏக புத்திரியான (தாயை இழந்த) ஞானசௌந்தரியை தன் கண்ணிலும் மேலாகக் கருதி வளர்த்து வருகிறான். அவளது நலனைக் கருதியே லேனாளை இரண்டாந் தாரமாக மணந்து கொள்ளுகிறான்.

லேனாள் ஆரம்பத்தில் ஞானசௌந்தரியை அன்புடனேயே கவனித்து வருகிறாள். ஆனால் ஆரோக்கியம் என்ற தாதி அவள் மனதில் துர் எண்ணங்களைப் புகுத்தி, ஒருநாள் மன்னன் வேட்டைக்குப் போயிருக்கும் போது, ஞான சௌந்தரியைக் காட்டிற்குக் கொண்டுபோய் கொன்றுவிட ஏற்பாடு செய்கிறாள். ஆனால் கொலையாளிகள் மனமிரங்கி, இரு கைகளை மட்டும் வெட்டி எடுத்துக் கொண்டு, ஞானசௌந்தரியை உயிருடன் காட்டில் விட்டுப போகிறார்கள்.

கையை இழந்து தவித்த அவளை மற்றொரு தேச இளவரசனை பிலேந்திரன் சந்தித்து, அவளைக் காப்பாற்றுகிறான். பின்னர் அவள்மீது காதல் கொண்டு, அவளைத் தன் தேசத்திற்கு அழைத்துச் சென்று, மணந்து கொள்ளுகிறான். அவளுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன.

தர்மரின் தேசத்தின்மீது எதிரிகள் படை எடுக்கின்றனர். பிலேந்திரன் அவருக்கு உதவியளிக்கப் போகிறான். அந்த சமயத்தில், ஞான சௌந்தரி உயிருடனிருந்ததை அறிந்த லேனாள், பிலேந்திரன் தன் மனைவிக்கு எழுதிய கடிதத்தை மாற்றி எழுதி, ஞான சௌந்தரியையும், அவளுடைய இரு குழந்தைகளையும் காட்டில் கொண்டு போய் விடும்படிச் செய்கிறாள்.

பிலேந்திரன் தன் தேசத்திற்குத் திரும்பியதும் நடந்தவைகளை அறிகிறான். மனைவி மக்களைத் தேடிக் கொண்டு காட்டுக்குப் போகிறான். இதற்கிடையில், கையில்லாமல் கொடுங் கஷ்டங்களுக்கு உட்பட்டபின் ஞான சௌந்தரி கன்னி மேரியின் கருணையினால் வெட்டுண்ட கைகளை மீண்டும் பெறுகிறாள்.

பிலேந்திரனும், ஞானமும் சந்தித்து சந்தோஷத்துடன் காடு திரும்புகின்றனர். பிறகு எல்லோரும் தர்மரின் ராஜ்யத்திற்குச் செல்கின்றனர். ஞான சௌந்தரி இறக்கவில்லையென்பதையும், தன்னை விரோதிகளிடமிருந்து காப்பாற்றிய பிலேந்திரனை அவள் மணந்து கொண்டிருப்பதையும் அறிந்த தர்மர் குதூகலமடைகிறார். லேனாளின் சூழ்ச்சிகள் வெளியாகின்றன. அவளை தர்மர் மன்னிக்கிறார். இத்துடன் கதை இனிது முடிகிறது.

இந்தக் கதையை தயாரிப்பாளர்கள் விறுவிறுப்பு கெடாமல் படத்தில் சித்திரித்திருக்கின்றனர். அநாவசியமான சில்லரை விஷயங்களை படம் பார்ப்பவர்களின் யூகத்திற்கே விட்டு விட்டு அடுத்த கட்டத்திற்குத் தாவிச் செல்வதைப் படத்தில் பல இடங்களில் காணலாம். இந்தப் பாய்ச்சல் காரணமாக படத்தில் சில மனமுருக்கும் முக்கியக் கட்டங்கள் சப்பென்று உள்ளன. உதாரணமாக, ஞான சௌந்தரி கை வெட்டப்பட்டவுடன் தவிப்பதும், மீண்டும் காட்டில் குழந்தைகளுடன் விடப்பட்டுத் தவிக்கும் போதும் நமக்கு மயிர் சிலிர்ப்பு ஏற்படவில்லை. இக்கட்டங்களை நாடக மேடையில் எவ்வளவோ நன்கு நடிக்கப் பார்த்திருக்கிறோம்.

படத்தின் பிற்பகுதியில் முற்பகுதியைவிட இந்தப் பாய்ச்சல் அதிகமாயிருக்கிறது. காட்டில் சந்தித்த பிலேந்திரனையும் ஞான சௌந்தரியையும், அடுத்த காட்சியில் தர்மரின் அரண்மனையில் சந்திக்கிறோம். அவர்களுடன் பிலேந்திரனின் பெற்றோர்களும் இருப்பதன்மூலம், பிலேந்திரன் ஞான சௌந்தரியுடன் தன் அரண்மனைக்குச் சென்று விட்டு தர்மரின் ராஜ்யத்திற்கு வந்திருக்கிறான் என்று நாம் ஊகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

படத்தில் விறுவிறுப்பு கெடாமல் இருப்பதற்காக சில்லை விஷயங்களை விட்டு விடுவது தவறல்ல. ஆனால் ஒரு முக்கிய சம்பவத்திலிருந்து இன்னொரு சம்பவத்திற்கு மாறும்போது இடைச் சம்பவங்களை அதி சுருக்கமாகவோ, அல்லது "குறிப்புகள்" மூலமாகவோ காட்ட வேண்டியது அவசியமாகும்.

இப்படத்தின் முக்கிய அம்சமாக விளங்குவது சங்கீதம். நல்ல மெட்டுகளில் இனிமையாகப் பாடச் செய்து, செவிக்கினிய விருந்தளிக்கின்றனர். ஆனால் சில பாட்டுகள் பொருத்தமில்லாத இடங்களில் பாடப்படுவது படத்தின் ஓட்டத்தைப் பாதிக்கிறது.

டைரெக்ஷன் விஷயத்தில், எப். நாகூரையும், ஜோஸப் தளியத் ஜூனியரையும் பாராட்ட வேண்டியதே. சில சில்லரைக் குறைபாடுகள் இருந்த போதிலும், அவைகளை நாம் பொருட்படுத்தாதபடி செய்ய வேறு பல நல்ல அம்சங்கள் உள்ளன. முதல் படத்திலேயே அவர்கள் இவ்வளவு வெற்றி பெற்றிருப்பதற்காக சந்தோஷிக்கிறேன்.

படத்தில் வசனங்கள் நல்ல தமிழில் உள்ளன. இதற்குப் பொறுப்பாளியான நாஞ்சில்நாடு டி. என். ராஜப்பாவுக்கு பழமொழிகளிலும், பிராசங்களிலும் அதிக விருப்பம் என்று தெரிகிறது. பாத்திரங்களின் தரத்திற்கு ஏற்றபடி வசனங்கள் அமையவில்லை.

இப்படத்திற்குப் பலர் பாடல்கள் இயற்றிக் கொடுத்திருக்கின்றனர். எஸ். வி. வெங்கட்ராமனின் சங்கீத டைரெக்ஷனும், வாத்திய கோஷ்டியினரின் ஒத்துழைப்பும் நன்கு சோபித்திருக்கின்றன.

படத்தில் கதாநாயகியாக நடிக்கும் எம். வி. ராஜம்மா தம் முந்தின படங்

(வால்)நரக் காதலர்கள்

கள் எல்லாவற்றையும் விட நன்றாக நடித்திருக்கிறார். வசனங்களைப் பேசுவதில் அபிவிருத்தி காணப்பட்டாலும், வசனங்களை அவர் பல் இடுக்கு வழியாகப் பேசுவதைத் திருத்திக் கொள்ள வேண்டும். சோகரச நடிப்பில் இன்னமும் பிரமாதமாய் நடிக்கத் தவறி விட்டார் என்று சொல்ல வேண்டும். அவர் பாடியிருக்கும் பாட்டுகள் இனிமையா யிருக்கின்றன. அவற்றுள் "விதியிதுவோ" என்ற பாட்டு முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது. வேஷப் பொருத்தம் நூற்றுக்கு நூறு பொருந்தியிருக்கிறது.

டி. ஆர். மஹாலிங்கத்திடம் ரஸிகர்கள் எதிர்பார்ப்பது இனிய சங்கீதம். அந்த எதிர்பார்ப்பு இப்படத்தில் வீண் போகவில்லை. அவர் ரஸிகர்களுக்கு ஆனந்தம் ஏற்படும் வகையில் புதிய மெட்டுகளில் பாடியிருக்கிறார். அதோடு கூட தம் பாகத்தை உணர்ச்சியுடன் நடித்திருக்கிறார். அவருடைய பாட்டுகள் படத்தின் வெற்றி அம்சங்களுள் முதன்மையாயுள்ளது,

மாற்றாந் தாயின் வேஷத்தில் பி. எஸ். சிவபாக்கியம் தோன்றுகிறார். அவருடைய தோற்றத்தை மேக்கப் மூலம் அடியோடு மாற்றி யிருப்பது போற்றத் தக்கது. அவருக்கு எளிதான வசனங்களைக் கொடுத்திருக்கலாம். கரடுமுரடான வசனங்களை இவர் மனனம் செய்து ஒப்பிக்கும் போது நம் பொறுமை சோதிக்கப்படுகிறது. நடிப்பு பரவாயில்லை.

பி. ஆர். மங்களம் தாதியின் வேஷத்தில் தோன்றி, 'வெடுக் வெடுக்'' கென்று பேசி வெளுத்து வாங்குகிறார். சில இடங்களில் டி. ஏ. மதுரத்தின் ஞாபகம் நமக்கேற்படுகிறது.

தர்மராகத் தோன்றுபவர் டி. பாலசுப்ரமண்யம். ஆரம்பப் பகுதியில் சுமாராக நடித்திருக்கிறார். இவர் பேச்சுகள் ஒரே இரைச்சலாய் பதிவாகியுள்ளன.

பிலேந்திரனின் தகப்பனாராக நடிப்பவர் ஸி. வி. நாயகம் என்ற புதிய நடிகர். அவரது தோற்றமும் குரலும் கம்பீரமாய் இருக்கிறது. சம்பாஷணைகளை கச்சிதமாகவும், த்வனி ஏற்றத் தாழ்வுகளுடனும் பேசியிருக்கிறார். கண்களை மூடிக் கொண்டு கேட்டால் "சிறுகளத்தூர் சாமாவோ?" என்ற சந்தேகம் ஏற்படும். பிலேந்திரனின் தாயாராக நடிக்கும் சாரதாம்பாளும் பரவாயில்லை. பால ஞான சௌந்தரியாக நடிக்கும் பேபி ராஜாமணியின் நடிப்பும், ஆட்டமும், பேச்சும் மனதைக் கவர்கின்றன.

படத்தில் ஹாஸ்ய அம்சம் விசேஷ பங்கு பெறவில்லை. பி. ஜி. வெங்கடேசன், புளிமூட்டை ராமசாமி, பபூன் ஷண்முகம் ஆகியோரை வைத்துக் கொண்டு செய்திருக்கும் முயற்சியும் சோபிதமாயில்லை.

இப்படத்தில் லலிதா, பத்மினி இவர்களின் நாட்டியமும் இருக்கிறது, இந்த நடன அம்சம் படத்திற்கு திருஷ்டிப் பரிஹாரம் போல் இருக்கிறது,

படத்தின் ஸெட்டிங்ஸ் விஷயத்திலும், ஆடையாபரண விஷயங்களிலும் மிகுந்த கவனம் செலுத்தியிருப்பது பாராட்டத்தக்கது. ஸ்டுடியோ வேலைகளும், ஒளிப்பதிவும் நன்கு செய்யப்பட்டிருக்கின்றன. ஒலிப்பதிவில் மட்டும் சில இடங்களில் கவனக் குறைவு தென்படுகிறது. பின்னணி ஒலிகள் ஆங்காங்கே பொருத்தமாய் அமைக்கப்பட்டுள்ளன. கதாநாயகன் தன் காதலியைத் தேடிக் கொண்டு காட்டுக்குப் போகும் போது கடும் மழை, புயல், மின்னல் இவை யெல்லாம் தோன்றி மறைவது பழங் காலப் போக்கையே காட்டுகிறது. ஞானத்திற்கு கைகளை அளிப்பதற்காக கன்னி மேரி தோற்றமளிக்கும் கட்டத்தை கேமிராமென் ஜாஜ் வல்லியமான ஒளிவீச்சுடன் தயாரித்திருக்கிறார்.

மொத்தத்தில், ஞான சௌந்தரி நிறைய பொழுது போக்கு அம்சங்களும், இனிய சங்கீதமும், நல்ல நடிப்பும் கூடிய ஒரு சிறந்த படமாகும். அது வெற்றிகரமாய் ஓடி நிறைய வசூலை அளிக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

—பி. ஆர். எஸ்,

'பிறர் மகிழத் தான் மகிழும்' எம். எஸ். சுந்தரிபாய் சந்திரலேகா'வில் நாடோடிப் பெண்ணாய் வந்து நம்மை யெல்லாம் நகைக்கவைக்கிறார்.

குமாரி ருக்மணி

வாழ்க்கை வர்ணனை

கொல்லன் மகன் கொல்லனுகவும், தச்சன் மகன் தச்சனுகவும், குயவன் மகன் குயவனுகவும், கைக்கோளன் மகன் கைக்கோளனுகவும் தொழிலை மேற்கொள்ளுவது சகஜமான விஷயமாகும். அது போலவே நடிகன் மகன் நடிகனுகவும், நடிகையின் மகள் நடிகையாக ஆவதும் ஆச்சரியப் படத்தக்க விஷயமே அல்ல என்று கூறுகிறேன். உதாரணத்திற்கு வேண்டுமானுல், நடிகனுக்குச் சின்னப்பாவையும், நடிகைக்கு குமாரி ருக்மணியையும் கூறலாம்.

ஒரு காலத்தில் "நுங்கம்பாக்கம் ஜானகி" என்று சொன்னுல், "ஓ! பரத நாட்டியம் ஆடுகிறுரே; அவர் தானே?" என்று குழந்தை கூடத் திருப்பிக் கேட்கும். அந்த ஜானகி அம்மாளின் ஏக புத்திரி தான் குமாரி ருக்மணி. பரத நாட்டியக் கச்சேரிகளில் புகழ் பெற்றிருந்த ஜானகி அம்மாள், தமிழ்ப் படங்கள் தோன்றிப் பிரபலம் அடையவே, அவைகளில் நடிக்க ஆசை கொண்டு, **சீதா வன வாசம்** என்ற தமிழ்ப் படத்தில் நடிக்க முற்பட்டார். அச்சமயத்தில் கல்கத்தா ஸ்டுடியோக்களில் பல தமிழ்ப் படங்கள் தயாராகி வந்தன. **சீதா வனவாசம்** ஒன்றில் மட்டும் நடிப்பதற்காக கல்கத்தா சென்ற ஜானகி அம்மாளுக்கு **லலிதாங்கி, ஹரிச்சந்திரா, மாயா பஸார்** ஆகிய மற்றும் மூன்று படங்களிலும் வேஷம் கிடைத்தது. இதன் பின்னர் **ஜலஜா, வாலிபர் சங்கம், தமிழ்த் தாய், பாக்ய லீலா** ஆகிய நான்கு பம்பாய்ப் படங்களிலும், கோயமுத்தூர் படமான **பூலோக ரம்பை** படத்திலும் அவரை நீங்கள் காணலாம்.

"தாய் எட்டடி என்றுல், குட்டி பதினறடி தாண்டும்" என்பார்கள். அது ருக்மணி விஷயத்தில் ரொம்ப உண்மையாயிருக்கிறது. பரத நாட்டியத்திலும் சரி; சினிமா நடிப்பிலும் சரி; ருக்மணி தம் தாயாரைப் போல் பன்மடங்கு புகழையும் பணத்தையும் சம்பாதித்துக் கொண்டு விட்டார். அதுவும் அதி பால்ய வயதிலேயே அவர் சினிமாவுலகில் ஒரு கிராக்கி

திண்டேசி



மிகுந்த நக்ஷத்திரமாகி விட்டது உண்மையில் ஆச்சரியப் படத்தக்க விஷயமாகும்.

"குமாரி ருக்மணி ஒரு பிறவி நடிகை" என்று சொன்னால் ஒரு வேளை அபிப்பிராய பேதம் ஏற்படக்கூடும். ஆனால் "குமாரி ருக்மணி பிறந்தது முதல் ஒரு நடிகை" என்று சொன்னால் அதை யாரும் ஆக்ஷேபிப்பதற்கே யில்லை. அவருக்கு மூன்று வயதான வுடனேயே தம் தாயாரைப் போலவே பரத நாட்டியம் ஆடிப் பார்க்க ஆரம்பித்தார். அதன் பின்னர் யார் நடிப்பதைப் பார்த்தாலும் — ஆடுவதைப் பார்த்தாலும்–அப்படியே செய்து பார்த்து விடுவார் ருக்மணி. பயோனீர் ஸ்டுடியோவில் ஒரு நாள் காலஞ்சென்ற பழங்கால பிரபல நடிகை கஜ்ஜன், தாம் ஆடிய நாட்டியமொன்றை ருக்மணி ஆடிப் பழகிக் கொண்டிருந்ததைக் கண்டு அதி ஆச்சர்யமுற்று, "ருக்மணி எதிர் காலத்தில் ஒரு பிரபல நக்ஷத்திரம் ஆகிவிடுவார்" என்று ஆசீர்வதித்தார். கஜ்ஜனின் ஆசீர்வாதம் இன்று—சுமார் பத்து வருஷங்களுக்குப் பிறகு—ஒரு அக்ஷரம் கூடப் பிசகாமல் பலித்து விட்டது.

கஜ்ஜன் ஊட்டிய உத்ஸாகம் ருக்மணிக்கு நாட்டியத்தில் ஊக்கம் அளித்தது. வடநாட்டு நாட்டியத்தைப் பலரைப் பார்த்து ஆடக்கற்றுக் கொண்டார். அதே சமயத்தில் தாயாரிடமே சங்கீதத்திலும், பரத நாட்டியத்திலும் பயிற்சி பெற்று வந்தார்.

இந்த சமயத்தில், காலஞ்சென்ற எஸ். வின்ஸெண்ட் பயோனீர் பில்ம்ஸ் ஸ்டுடியோவில் ஹரிச்சந்திரா படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தார். இப்படத்தில் டி. பி. ராஜலக்ஷ்மி பிரதம பாகத்தில் நடித்திருப்பது

நினைவிருக்கும். இதே படத்தில் ஜானகி அம்மாளும் நடித்துக் கொண்டிருந்தார்- ஸ்ரீ. வின்ஸென்ட் லோகிதாஸன் வேஷத்திற்கு ஒரு சிறு பையனைத் தேடிக் கொண்டிருந்தார். இப்படியிருக்க ஒரு நாள் ஸ்டுடியோவுக்கு வந்திருந்த துறுதுறுப்பு மிகுந்த ருக்மணி அவர் கண்களில் தற்செயலாய் தென்பட்டார். உடனே அவருக்கு, ''அடடா! கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் நெய்க்காக அலைந்து கொண்டிருந்தோமே'' என்று தோன்றியது போலும். அந்த க்ஷணமே பேபி ருக்மணிக்கு லோகிதாஸனின் வேஷத்தைப் போடச் செய்து திருப்தி அடைந்து விட்டார். ஹரிச்சந்திரா படம் வெளி வந்ததும், ஸ்ரீ. வின்ஸென்டிற்கு ஏற்பட்ட திருப்தி பட ரஸிகர்களுக்கும் ஏற்பட்டது.

ஹரிச்சந்திராவில் நடித்த பின்னர் **மாயா பஸார், தேசிங்கு ராஜன்** ஆகிய படங்களிலும ருக்மணி நடித்தார். இந்த இரு படங்களிலும் அவருடைய நடிப்பு அப்படியொன்றும் ரஸிகர்களின் மனதைக் கவர்ந்து விடவில்லை.

இந்தப் படங்கள் கல்கத்தாவில் தயாராகி வந்த சமயத்திலேதான் டைரெக்டர் கே. சுப்ரமண்யமும் தம் பிரபல **பாலயோகினி** படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அவர் இந்தப் படத்தை முதலில் வேறு ஏதோ மாதிரியில் தயாரிப்பதற்குத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தார். கடைசியில் அவர், அந்தப் படத்தில் குழந்தைகளுக்கே முக்கியத்துவம் அளிப்பது என்று தீர்மானித்தார். அதன் பிரகாரம் அவர், **பாலசரஸ்வதி, பிரஹ்லாதாம்பாள், பேபி ருக்மணி** ஆகிய பால்ய நக்ஷத்திரங்களை முதலில் தேடிக் கண்டு பிடித்தார். பிறகு தம் தம்பி **விஸ்வநாதனின்** புத்திரியான பேபி சரோஜாவையும் படத்தில் சேர்த்துக்கொண்டார். **பாலயோகினி** படத்தில் ருக்மணி வேலைக்கார முனு

சாமியின் மகளாகத் தோன்றி தம் பாகத்தை கனகச்சிதமாக நடித்து நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொண்டார்.

பாலயோகினி படம் முடிந்ததும் தாயார், மகள் இருவரும் **ஜலஜா** படத்திற்காக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு பம்பாய் சென்றனர். ஜி. கே. சேஷகிரியின் மனக் கோட்டையான அந்த **ஜலஜா** மண்ணைக் கவ்வியது. படமே அப்படி யென்றால் அதில் நடித்தவர்களைப் பற்றிச் சொல்வானேன்?

ஆனல் அவரது நண்பரான ஏ.என். கலியாண சுந்தரம் வாய் வீச்சுடன் நில்லாமல் **வாலிபர் சங்கத்தை** ஒரு சிறந்த படமாக வெளிக் கொண்டு வந்தார். அதில் பேபி ருக்மணியும் நன்கு நடித்திருந்தார். ஆனல் துரதிருஷ்டமாக இப்படம் பொது ஜனங்களிடையே மிகுந்த ஆதரவைப் பெற வில்லை. பிறகு மற்றொரு தோல்விப் படமான **தேச முன்னேற்றத்திலும்** ருக்மணிக்கு ஒரு பங்கு கிடைத்தது. **பக்த குமணனில்** கதாநாயகியாகக் கூட நடித்தார். அதன் பிறகு **ஜெய பாரதி, தமிழ்த் தாய்** ஆகிய படங்களிலும் நடித்தார். இப்படங்களெல்லாம் அவருக்கு வருவாயை அளித்தனவே தவிர புகழை உயர்த்தவில்லை.

இதனல் சலிப்புற்ற ருக்மணியும் அவரது தாயாரும் **தமிழ்த் தாய்** படம் முடிந்ததும் தங்கள் பம்பாய் வாசத்திற்கு முடிவு ஏற்படுத்திக் கொண்டு தமிழ் நாட்டிற்கே வந்து விட்டனர். வந்ததும்வராததுமாய் ருக்மணிக்கு **சீதா ஜனனம்** படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். அதைத் தொடர்ந்தாற் போல் அவர் **பூலோக ரம்பை, பரசுராமர், பாக்ய லீலா** ஆகிய படங்களிலும் நடித்து முடித்தார். இந்தப் படங்களிலெல்லாம் ருக்மணியின் நடிப்பு துளித் துளியாக அபிவிருத்தி அடைந்து வந்தது என்றாலும், அவருக்குத் தனிப்பட்ட புகழோ, நக்ஷத்திரப் பதவியோ கிடைத்து விடவில்லை.

ரிஸ்ய ஸ்ருங்கர், பக்த நாரதர் ஆகிய படங்கள் வெளி வந்ததும் ருக்மணி துணிகரமான ஒரு புது முயற்சியில் இறங்கி யிருப்பதை ரஸிகர்கள் கண்டனர். அந்தப் புது முயற்சியில் ருக்மணியின் எதிர்கால வெற்றியும் பிரதிபலித்தது. "பேபி ருக்மணி" "குமாரி ருக்மணி"யாகவும் மாறிப் போனர்.

இந்தச் சமயத்தில் ஸ்ரீ ஏவி. மெய்யப்பனும், ஏ. டி. கிருஷ்ண ஸ்வாமியும் **ஸ்ரீ வள்ளியைத்** தயாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். இப் படத்தில் நடிக்கப் போவதாகப் பிரபல நக்ஷத்திரங்கள் சிலரின் பெயரெல்லாம் அடிபட்டன. ஆனல் கடைசியில் இப் படத்திற்கு டி. ஆர். மஹாலிங்கமும், குமாரி ருக்மணியும் ஒப்பந்தம் செய்யப் பட்டனர். பல வருஷங்களாக பல படங்களில் நடித்தும், பிரமாதமான பெயரைச் சம்பாதித்துக் கொள்ளாதிருந்த இவர்களை எவ்வளவு தைரியமாக ஒரே படத்தில் சேர்ந்தாற்போல் நடிக்க வைத்தார்களோ, அதைக் காட்டிலும் பன்மடங்கு அக்கரை காட்டினார்கள்.

இவர்களது கூட்டு உழைப்பு வீண் போகவில்லை மெய்யப்பன்—கிருஷ்ணஸ்வாமி இவர்களின் இந்த முயற்சி சினிமா உலகில் எதிர் பாராத வெற்றியாய் முடிந்தது. இப்படத்தில் நடித்தவர்களுக்கெல்லாம் நக்ஷத்திரப் பதவி, எதிர் பாராத அளவு சம்பள உயர்வு, பட முதலாளிகளுக்கோ பெட்டி நிறையப் பணம், அடுத்த படத்தை ஆரம்பிப்பதற்கு முன்பே பல விநியோகஸ்தர்களிடமிருந்து அட்வான்ஸ், இப்படியாக ஸ்ரீ வள்ளி சினிமா உலகில் திடீரென ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது.

ஸ்ரீ வள்ளியில் நடித்ததுமே குமாரி ருக்மணி ஒரு கால் லக்ஷ ரூபாய் நக்ஷத்திரமாக மாறி விட்டார். ரஸிகர்கள் அவருடைய அடுத்த படம் எப்பொழுது வரும் என்று ஆவலுடன் எதிர் பார்க்கவும் ஆரம்பித்தனர். லவங்கி, பங்கஜவல்லி, ஆகிய படங்களில் அவர் நடித்தார். பங்கஜ வல்லியில் அவரது உழைப்பு வீணாகி விட்டது. லவங்கி மூலம் அவர் ஸ்ரீ வள்ளியில் அடைந்த புகழைக் காப்பாற்றிக் கொண்டார்.

பிறகு ருக்மணி தமிழ் ராமதாஸ், ஹிந்தி ராமதாஸ், ஹிந்தி லவங்கி ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். ஹிந்தி படங்களில் ருக்மணி நடிப்பது இது முதல் தடவையல்ல. பம்பாயில் தங்கி தமிழ்ப் படங்களில் நடித்துக் கொண்டிருந்த சமயத்திலேயே அவர் சில ஹிந்திப் படங்களிலும் நடித்திருக்கிறார். மூன்னூறு நாட்களுக்குப் பிறகு, அமாரா தேஷ், ஸ்வஸ்திகா ஆகிய ஹிந்திப் படங்களில் அவர் நடித்திருக்கிறார். ருக்மணிக்கு தமிழ், ஹிந்தி இவை தவிர தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய பாஷைகளையும எழுதப் படிககத் தெரியும். குஜராத்தி, மராத்தி, உருது ஆகிய பாஷைகளைப் பேசத் தெரியுமாம்.

தாயார் சங்கீத ஞானம் உடையவராதலால் ருக்மணி சிறு குழந்தையாயிருந்த போதிலிருந்தே தம் தாயாரிடம் சங்கீதம், பரத நாட்டியம் இவைகளைக் கற்கலானார், பிறகு, அவர் எட்டயாபுரம் ராஜகோபாலய்யர், களக்காடு ராம நாராயணய்யர், மாயவரம் கிருஷ்ணய்யர் முதலிய விற்பன்னர்களிடம் சங்கீத சிக்ஷை சொல்லிக் கொண்டார்.

ருக்மணி இனிய குரலில் பாடக் கூடியவர் தான். தாம் நடித்த படங்கள் பலவற்றில் அவரே தான் பாடியிருக்கிறார். அப்பாட்டுகளில் பல இசைத்தட்டுகளாகவும் வெளி வந்திருக்கின்றன. ஸ்ரீ வள்ளி படம் ஒன்றில் மட்டும் தான் பி. ஏ. பெரிய நாயகி அவருக்குப் பதில் பாடியிருக்கிறார்.

ருக்மணிக்கு சங்கீதத்தைப் போலவே பரத நாட்டியத்திலும் சிக்ஷை உண்டு. காஞ்சீபுரம் எல்லப்ப நட்டுவனாரிடம் ருக்மணி நாட்டியத்தைப் பயன்று 1942-ம் வருஷத்தில் அரங்கேறினார். தென்னிந்தியாவிலும்

லவங்கி

ருக்மணி மூன்று நான்காவது வயதிலேயே நாட்டியமாடத் தொடங்கிவிட்டார். இது எட்டாவது வயதில் அவரது தோற்றம்.

இலங்கையிலும் அவரது கச்சேரிகள் பல இடங்களில் அடிக்கடி நடைபெற்றுள்ளன. சுமார் இரண்டு வருஷ காலத்திற்கு ருக்மணி படங்களில் நடிப்பதைக் கூட மறந்து நாட்டியக் கச்சேரிகள் செய்வதிலேயே முனைந்திருந்தார். ஆனால் இப்பொழுதோ அவர் நாட்டியக் கச்சேரியை அடியோடு மறந்து படங்களில் நடிப்பதிலேயே முனைந்திருக்கிறார். சினிமா, நாட்டியம் ஆகிய இரண்டும் உயர்ந்த கலைகளாகும். இதில் ஏதோ ஒன்றை வைத்துக் கொண்டு இன்னொன்றைத் தள்ளி விடக்கூடாது. இதை ருக்மணி கவனிக்க வேண்டும்.

மெலிந்த தேகமும், சிவந்த மேனியும், சுமார் ஐந்தடி உயரமும், குறுகுறுப்பான கண்களும், சினிமாவுக்கேற்ற அழகிய முகமும், அங்க அமைப்பும் உடையவரும், ஐயர் ஜாதியைச் சேர்ந்தவருமான ருக்மணிக்கு இப்பொழுது வயது இருபத்திரண்டு ஆகிறது; 1929-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 19-ந் தேதி பிறந்தவர். பள்ளிக்கூடத்தில் அவர் இரண்டாவது பாரம் வரையில் படித்திருக்கிறார். நூல் பின்னல் போடவும், மோட்டார் ஓட்டவும் அவருக்குத் தெரியும். பெற்றோர்களுக்கு ஏக புத்திரியான ருக்மணிக்குத் திருமணம் ஆகவில்லை.

ருக்மணி விஷயத்தில் ஸ்ரீ. ஒய். வி. ராவ் மிகுந்த சிரத்தை கொண்டிருக்கிறார். ருக்மணியை தமிழ் நாட்டிலேயே இணையற்ற நக்ஷத்திரமாக்கி விட வேண்டும் என்பது அவரது நோக்கமாம். ஒரு டைரெக்டர் இப்படி மனது வைத்தால் முடியாத காரியமல்லவே இது?

கலை இடையில் பிறந்து, கலையோடு வளர்ந்து, கலையுடனேயே வாழும் ருக்மணி இந்த வயதிற்குள்ளேயே சினிமாவில் நக்ஷத்திரப் பதவியையும், பரத நாட்டிய உலகில் பிரமாதமான புகழையும் பெற்றுவிட்டதால் இதை விட உன்னத பதவியை அடைவதற்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் உள்ளன. அந்த சந்தர்ப்பங்களை அவர் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளுவார் என்று நம்புகிறேன்.

சங்கீதம் நிறைந்த ராமதாஸ்

ஒய். வி. ராவின் ஆடம்பரமற்ற படம்

“கர்னாடக வழியில் பாடப்பட்ட கர்ணாம்ருதமான பாட்டுகள் நிரம்பிய ஒரு பக்திப் படத்தைப் பார்க்க விரும்புகிறீர்களா? அப்படியானால் ஸ்ரீ ஜெகதீஷ் பில்ம்ஸார் தயாரித்துள்ள ‘ராமதாஸ்’ தமிழ்ப் படத்தைப் பாருங்கள்” என்று சொல்ல வேண்டியிருக்கிறது. கர்னாடக சங்கீதத்தில் தகுந்த மெட்டுகளில் பாட்டுகளை அமைத்து அவற்றை பழுத்த ஞானமுடையவர்கள் பாடினால் கேட்பதற்கு இனிமையாக இராமல் போகாது என்பதற்கு இந்த “ராமதாஸ்” படத்தை உதாரணமாய்ச் சொல்லலாம்.

ராமதாஸ் கதை அநேகமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும் பிரபல நாடகமாய் விளங்கி வந்ததோடு, சினிமாப் படமாகவும் முன்பே வெளி வந்திருக்கிறது. இக்கதை அதிக சம்பவங்கள் கொண்டதல்ல. நவாபின் கஜானாப் பணத்தைஉபயோகித்து ராமதாஸ் ராமர்கோயிலைக் கட்டுகிறார். அதற்காக நவாப் அவரை சிறையிலடைக்கிறார். ராம லக்ஷ்மணர்கள் நவாப் முன் தோன்றி பணத்தைக் கொடுத்து ராமதாஸை விடுவிக்கச் செய்கின்றனர். ராமதாஸ் முன் ஜென்மத்தில் ஒரு கிளியைக் கூண்டில் அடைத்து இம்சித்ததின் விளைவாகவே இந்த ஜென்மத்தில் சிறையிலடைக்கப் பட்டுவருந்தினார் என்றொரு பூர்வ கதை உண்டு. ஆனால் அந்தப் பூர்வ கதை இப் படத்திலில்லை.

இக் கதையில் சம்பவங்கள் அதிகமில்லாதது மட்டுமல்ல; காதலும் கிடையாது. பக்தி ஒன்றையே ஜீவனாக கொண்ட இக் கதையை சோபிக்கும்படி செய்வது கஷ்டமான காரியமாகும். இந்தக் காரியத்தில் இதன் டைரெக்டர் கூடிய வரையில் வெற்றி பெற்றிருக்கிறார். ஆனால் ஒய். வி. ராவின் முந்தின படங்களையும். திறமைகளையும் நினைக்கையில், அவர் இன்னும் அதிகம் செய்திருக்கலாம் என்று தோன்றுகிறது. ராமதாஸ் கசையடி படுதல், நவாப் முன் ராமலக்ஷ்மணர்கள் தோன்றல், நவாப் தர்பார் ஆகிய கட்டங்கள் இன்னும் அதிகமான விறுவிறுப்புடன் சிருஷ்டிக்கப் பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

காந்திஜியின் வாழ்க்கையை ஒருவர் காலக்ஷேபம் செய்கிறார். அக் கதை முடிவில், “இந்த மஹாத்மா போலவே தான் ராமதாஸ் என்ற மஹான் பல நூற்றாண்டுகளுக்குமுன் ஹிந்து முஸ்லீம் வித்தியாசம் பாராட்டாமலும், தம் ஆத்ம சக்தியில் அபார நம்பிக்கையுடனும் ராம பக்தியில் ஈடுபட்டு நற்கதியுற்றார். அவருடைய சரிதத்தைத் தான் இப்பட்த்தில் காணப் போகிறீர்கள்” என்ற வாக்கியங்களுடன் அசல் கதை ஆரம்பமாகிறது. இது கதைக்கு நல்ல ஆரம்பம் தான். இப் பகுதியில் ஒரு பெண்மணி இனிமையாய் பாடியிருக்கிறார். இவரை தூர திருஷ்டியிலேயே வைத்திருக்கலாம்!

வசனங்களை பிரமாதம் என்று சொல்வதற்கில்லையானாலும், மோசமென்று தள்ளுவதற்கு மில்லை. ஸங்கீத சாகித்தியங்கள் அர்த்த புஷ்டியுடன் நல்ல மெட்டுகளில் அமைக்கப் பட்டிருக்கின்றன.

பிரபல சங்கீத வித்வான் களக்காடு ராம நாராயணய்யர் வேஷத்திற்குப்



“மின்மினி”யில் இந்த ஆஸ்பத்திரிக் காட்சியைக் காணலாம்.

பொருத்தமான நடிகராய் விளங்குகிறார். முன்பின் அனுபவ மில்லாத அவரை இவ்வளவு சிறப்பாய் நடிக்க வைத்திருப்பதற்கு ஸ்ரீ. ராவைப் பாராட்ட வேண்டும். ஜெயிலில் அடைபட்டு ராமபிரானை நித்தாஸ்துதி பாடுவதும், சித்தப் பிரமை பிடித்தவராய் நடிப்பதும் பாராட்டக் கூடியபடி அமைந்துள்ளவ. அவர் பாடியிருக்கும் ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு நல் முத்தாக விளங்குகின்றன. சங்கித ஞானமுடையவர்களும், சாதாரண ரஸிகர்களும் விரும்பக் கூடியபடி அவை அமைந்துள்ளன. "ராமன் அழைக்கின்றான்", "விடமாட்டேன்" என்ற இரு பாட்டுகளும் முதன்மை ஸ்தானம் பெறுகின்றன.

நவாப் வேஷத்தில் தோன்றும் ஒய். வி.ராவின் நடிப்பு நாம் எதிர்பார்த்ததைப் பூர்த்தி செய்யவில்லை. ராம லக்ஷ்மணர்கள் தோன்றும் கட்டம் சப்பென்றிருக்கிறது. ஒரு நவாப்பிற்கு இருக்க வேண்டிய கெடுபிடியும், தோரணையும் அவரது நடிப்பில் குறைவாயிருக்கிறது.

நவாபின் மனைவியின் பாகம் குமாரி ருக்மணி படத்தில் வரவேண்டும் என்பதற்காகவே சிருஷ்டிக்கப் பட்டது போல் காண்கிறது. ஆனால் ருக்மணி இரண்டு பாட்டுகளை இனிமையாய் பாடியிருக்கிறார். அவருடைய திறமைகளுக்கு இந்தப் படத்தில் இடமே யில்லை.

கோயில் அதிகாரியாக நடிக்கும் கே. மஹாலிங்கய்யர் சினிமாவுக்குப் புதியவரென்றாலும், தம் பாகத்தை கெடுபிடியுடன் பேசி நன்றாய் நடித்திருக்கிறார். செட்டியார் வேஷத்தில் வரும் வெங்கட்டராமனும் பரவாயில்லை. பக்கிரியாக வரும் (தெலுங்கு) நடிகரின் பாட்டுகள் இன்பமளிக்கின்றன.

"குசேல" தம்பதிகளாய்த்தோன்றும் ரங்கசாமியும், ஜெயகௌரியும் வெளுத்து வாங்குகிறார்கள். ரங்கசாமியின் நடிப்பு அனுபவமிக்கதாயுள்ளது. ஜெயகௌரி சம்பாஷணைகளை 'வெடுக்' கென்று பேசுகிறார். ஆனால் அவரது கோணங்கிகள் கொஞ்சம் அதிகமாயுள்ளன. இவர்களது பாகம் படத்தில் ஹாஸ்ய விருந்தாக அமைந்திருக்கிறது.

படத்திலுள்ள பக்தி அம்சத்தைச் சிதறச் செய்யும் வகையில் ஆபாசங்கள் எதுவும் இல்லை. இதற்காக ஸ்ரீ. ராவைப் பாராட்டுகிறோம். ஆண், பெண், குழந்தைகள் ஆகிய அனைவரும் இப் படத்தை தாராளமாய்ப் பார்க்கலாம்.

—பி. அர். எஸ்.

மதுரையில்

நாகரீக ஜவுளிகளுக்கு

நம்பிக்கையான இடம்

நீல மாளிகை

கே. எஸ். பெருமாள் முதலியார் & சன்,

3/4, தெற்கு சித்திரை வீதி, மதுரை.

குண்டூசியைக் கேளுங்கள்

எஸ். கே. மூர்த்தி (திருவள்ளூர்)

சந்திரலேகா கலை அம்சங்களில் ஒரு சிறந்த படமாயிருந்தும் கதை மோசமாய் இருப்பதற்குக் காரணம் என்ன?

சில விஷயங்களை ஒரே நபர் செய்வதே மேலாயிருக்கும். அம்மாதிரி விஷயங்களில் ஒன்று சினிமாக் கதை என்பதை "சந்திரலேகா" நிரூபிக்கிறது.

டி. ஆர். ராமகிருஷ்ணன் (ஜார்ஜ்டவுன்)

ஹரிதாஸ், சிந்தாமணி ஆகிய தமிழ்ப் படங்களைப் போல வருஷக் கணக்கில் எந்த வடஇந்தியப் படமாவது ஓடியிருக்கிறதா?

"துகாராம், கிஸ்மெட்" ஆகிய படங்கள் ஒரு வருஷத்திற்கு மேலாகவே ஓடியிருக்கிறது.

ஏ. பெத்தண்ணன் (நிலக்கோட்டை)

ரஞ்சன் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? அவரது விலாஸத்தைத் தரவும்.

ரஞ்சன் ஐயர் ஜாதியைச் சேர்ந்தவர். விலாஸம்:- எம். கே. அம்மன்கோவில் தெரு, மைலாப்பூர்.

வி. ராஜன் (பள்ளத்தூர்)

மிஸ் மாலினி முதலிய படங்களில் நடிக்கும் புஷபவல்லிக்குப் பாடத் தெரியாதென்றும், குமாரி ரத்னத்தின் குரலை இரவல் வாங்கிக் கொண்டிருக்கிறார் என்றும் கூறுகிறார்களே; உண்மையா?

பொய் மலிந்திருக்கும் இந்தக் காலத்தில் கூட சிலர் உண்மை பேசி வருவதற்காகச் சந்தோஷிக்கிறேன்.

கே. எஸ். மணி (வத்தலக்குண்டு)

டி. ஆர். ராஜகுமாரி நடித்த விஸ்வாமித்ரா ஏன் சரியாக ஓட மாட்டேன் என்கிறது?

"நொண்டி" ராம்சிங்தான் இதின் கதாநாயகன் என்ற விஷயம் உமக்குத் தெரியாதோ?

கே. ராமச்சந்திரன் (வனவாஸி)

ஏனையா, குண்டூசியாரே! சந்திரலேகாவில் டி. ஆர். ராஜகுமாரி பார் விளையாடுகிறாரே. அதை அவரே செய்கிறாரா?

படத்தைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது. ராஜகுமாரி முயற்சித்திருந்தால் அந்த மூன்றரை வருஷங்களுக்குள் இந்த வித்தைகளைத் தாமேகூட கற்றுக் கொண்டிருக்க முடியும். ஆனால், "உம் கண்களே உமக்குச் சத்துரு" என்பதை எங்கேயாவது இந்தச் சந்தர்ப்பத்தில் மறந்துவிடப் போகிறீர்!

டி. பிள்ளை (நுவரெகொடை, இலங்கை)

தற்போது எம். கே. டி. பாகவதருக்கு என்ன வயதாகிறது?

அவருக்கு இப்பொழுது 38 வயதாகிறது.

எம். கோபால் (பம்பாய்)

2999 (999 × 3 + 2) கேள்விகளைத் தயங்காமல் கேட்ட அபூர்வசிந்தாமணி கடைசிக் கேள்வியை (3000) கேட்க ஏன் அவ்வளவு தயங்கவேண்டும்?

முதல் இரண்டு கேள்விகளுக்கும் மெய்யழகன் தயங்காமல் பதில் சொல்லியதைக் கண்டதும், "இவர் ஒருவேளை தயங்காமல் பதில் சொல்லி

வரும் 'குண்டுசி'யாயிருக்குமோ" என்ற சந்தேகம் அம்மாளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடும்!

கே. சீதாராமன் (அவனியாபுரம்)

டி. ஆர். ராஜகுமாரியின் சொந்த ஊர் எது?

சென்னையில் தஞ்சம் புகுந்துள்ள அவரது சொந்த ஊர் தஞ்சாவூர்!

கே. ஏ. முஹம்மது சுல்தான் (சப்போ, மலேயா)

என் மனைவி படத்தில் மீன லோசனி பாடுகிறாரே? சொந்தக் குரலா?

இல்லை; பந்தக்குரல், வந்தனத்திற்கு உரியவர் பி. ஏ. பெரியநாயகி.

எச். சையத் முஹம்மது (கோயமுத்தூர்)

"கிராமபோன் பாடகர் ஆவதற்கு சுலபமான வழி" என்ற பாதவரிகளுடன் இது நிஜமா படத்திலிருந்து ஒரு காட்சியை வெளியிட்டிருக்கிறீர்கள். அக்காட்சி ஏன் அப்படத்தில் காணவில்லை?

நியாயமான கேள்விதான். பின்னர் அந்தக் காட்சியைப் படத்திலிருந்து நீக்கிவிட வேண்டியிருக்கும் என்று அதன் தயாரிப்பாளர்களுக்கு முதலிலேயே தெரியாது. 'இது நிஜமான' பேச்சு!

டி. கே. எஸ். "பில்ஹணனி"ல் டி. கே. சிவதாணு தோன்றும் ஒரு ஹாஸ்யக் கட்டம்.

மு. முசீன் (அம்பலான் கொடா)

டி. எஸ். பாலய்யாவுக்கு விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா?

பல கதா நாயகிகளால் வெறுக்கப்படும் பாலய்யாவை பல வருஷங்களுக்கு முன்பே ஒருவர் விரும்பி மணந்து கொண்டிருக்கிறார்! அடி, உதை, குத்தெல்லாம் இல்லாமல் அவர் காலந் தள்ளுவது இந்த ஒரு இடத்தில்தான்!

பி. சிவராமன் (மதுரை)

நாடகமேடையில் உயிர் நீத்த எஸ். எஸ். விஸ்வநாத தாஸின் ஞாபகார்த்த தினத்தை ஏன் நம் நடிகர்கள் கொண்டாடுவதில்லை?

அவரைப் பற்றிய ஞாபகம் இருந்தால்லவா அந்த தினத்தைக் கொண்டாடுவதற்கு?

எஸ். எம். வெங்கடாஜலம் (பட்டாளம்)

கன்னிகாவில் நடிக்கும் டி. ஈ. வரதன் இதற்கு முன் எந்தப் படத்தில் நடித்திருக்கிறார்? தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

வரதன் நடித்த முதல் படமே கன்னிகாதான். தற்போது அவர் பக்ஷி ராஜாவின் "பவளக்கொடி"யில் நடித்து வருகிறார்.

பி. பாண்டியன் (பாளையங்கோட்டை)

எம். கே. டி. பாகவதர் நடித்து வரும் ராஜமுக்தி படம் எப்பொழுது வெளிவரும்?

இப்படம் அநேகமாய் முடிந்துவிட்டதாகத் தெரிகிறது. ஜுலை மாதத்தில் வெளிவருமென எதிர்பார்க்கப்படுகிறது.



எம். யு. ஏ. ஸி. தயாரிப்பான "விசித்திர வனிதா" தமிழ்ப் படத்தில் பி. எஸ். சரோஜா, புளிமூட்டை ராமசாமி.

சோ. திரவியம் (முக்கூடல்)

தற்சமயம் வசுந்தராதேவி எந்தப் படத்தில் நடித்து வருகிறார்?

எதிலுமில்லை.

ஏ. ஸி. எம். இஸ்மெய்ல் (கொழும்பு)

நாம் இருவரில் நடிக்கும் டி. ஏ. ஜெயலக்ஷ்மி விவாஹம் ஆனவரா? குழந்தைகள் உண்டா? விலாஸம் தெரிவிக்கவும்.

அவருக்கு விவாஹம் ஆகவில்லை. குழந்தைகளும் இருப்பதாகத் தெரியவில்லை! விலாஸம், C/o மரகதா பிக்சர்ஸ், எக்ஸ்டென்ஷன், சேலம்.

ஆ. சுடலைமுத்து (கொழும்பு)

என் நண்பர் ஒருவருக்கு டான்ஸ், பாட்டு முதலியவைகளெல்லாம் தெரியும். முகவசீகரமும் உண்டு. அவர் சினிமாவில் சேரவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

தபால் செலவுக்காக சில நூறு ரூபாய்களை எடுத்து ஒதுக்கிவிட்டு, கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, மனதை திடப்படுத்திக் கொண்டு, விண்ணப்பங்களையும், அத்துடன் போட்டோக்களையும் சினிமாக்கம்பெனிகளுக்கு அனுப்பி வைக்கச் சொல்லும். அதன் பின் உம்மைத் தொந்தரவு செய்வதை மட்டுமல்ல; சினிமாவில் நடிக்கும் யோசனையையும்கூட அவர் வெகு சீக்கிரத்தில் விட்டுவிடுவார்!

ஜெயதேவன் (தம்பின், மலேயா)

பாட்டுகளே இல்லாமல் நம் படமுதலாளிகள் படங்களைத் தயாரிக்க முடியாதா?

பாட்டுகளே இல்லாமல் படங்களைத் தயாரித்து விடமுடியும். ஆனால், பிறகு படமுதலாளிகளெல்லாம் "வசூல் பூஜ்யம்" என்ற ஒரே பிலாக்கணத்தைப் பாட ஆரம்பித்து விடுவார்களே, ஸ்வாமி!

வ. க. மணவாளன் (வளர்புரம்)

சந்திரலேகா படத்தின் கதை நன்றாயில்லை. பாட்டு சுகமில்லை என்பது பொதுஜன அபிப்பிராயம்.

என் அபிப்பிராயமும் அதுதான். இவ்வளவு ஊக்கத்தையும், பணச் செலவையும் ஸ்ரீ. வாஸன் ஒரு சரித்திரப் படத்தை தயாரிப்பதில் காட்டியிருந்தால் அது மஹத்தான தேச சேவையாக விளங்கியிருக்கும். ராஜகுமாரி கச்ச தேவயானிக்குப் பிறகு சந்திரலேகாவில் தான் இனிமையாகப் பாடியிருக்கிறார் என்றாலும், பாட்டு இதை விடப் பிரமாதமாய் இருக்கவேண்டுமென்ற எண்ணம் ஏற்படவே செய்கிறது.

எஸ். எஸ். மணி (நாகர்கோயில்)

ஊஸ். எம். குமரேசனின் நடிப்பு பாட்டு இவைகளைப் பற்றி உம் அபிப்பிராயம் என்ன? தற்போது எந்தப் படத்தில் நடித்து வருகிறார்?

சம்பாஷணைகளை ஸ்பஷ்டமாகவும் உணர்ச்சியுடனும் பேசுகிறார், சுமாராக நடிக்கிறார்; அதோடு கூட இனிமையாகப் பாடுகிறார். முக அழகும் பரவாயில்லை. ஆதலால் குமரேசன் எதிர்காலத்தில் முன்னுக்கு வருவார் என்று தாராளமாய் சொல்லலாம். சமீபத்தில்

தான் அவர் "அபிமன்யு"வில் நடித்து முடித்திருக்கிறார்.

எஸ். வி. ஸ்ரீனிவாஸன் (நாகூர்)

சந்திரலேகாவில் ராஜகுமாரியை ரஞ்சனால் ஏன் தூக்க முடியவில்லை?

நீர் கேட்பது ஆச்சரியமாயிருக்கிறதே; அப்படியென்ன ராஜகுமாரி பேசான நக்ஷத்திரமா?

ஆர். பாலசுப்ரமண்யம் (ஏரல்)

தெய்வநீதி படத்தின் கடைசி பாகத்தில் கே. ஆர். ராமசாமி நடிக்காததற்குக் காரணம் என்ன?

அவருக்கும் அந்த பட முதலாளிக்கும் இடையே இருந்த சிநேக பாவம் கடைசி வரை நீடிக்காதது தான் காரணம்.

எஸ்.எஸ்.ஷஹாபுதீன் மரைக்கார் (அரணயக, இலங்கை)

என். எ. சுந்தரம் ஏதேனும் படத்தில் நடித்திருக்கிறாரா?

"தாசி அபரஞ்சியில்" அவர் தோன்றியிருக்கிறார். ஆனால் அப்படத்தில் அவர் பாடாதது உமக்கு ஆச்சரியமாய்த் தானிருக்கும்.

கே. எஸ். கிருஷ்ணன் (மதுரை)

சந்திரலேகாவில் வரும் சர்க்கஸ் காட்சிகளைத் தயாரிப்பதற்கு உதவியவர்கள் "பரசுராம் சர்க்கஸ்" கோஷ்டியினரா?

இல்லை; "கமலா சர்க்கஸ்" கோஷ்டியினர்.

ராஜன் (பம்பாய்)

குமாரி ராஜமும், மேனகாவும் ஒருவரே தானா?

நன்றாய்ச் சொன்னீரே! மேனகாவுக்கு முக அழகு உண்டு; பாட்டு பூஜ்யம், ராஜத்திற்கு முக அழகு பூஜ்யம்; ஆனால் பாட்டு உண்டு. அப்படியிருக்க இருவரும் எப்படி ஒருவராயிருக்க முடியும்?

ஏ. அருள்ராஜ் (எழும்பூர்]

டி. ஆர். ராஜகுமாரி ஒரு படத்திற்கு எவ்வளவு பணம் வாங்குகிறார்?

சுமார் ஒரு லக்ஷ ரூபாய்.



இம்மாதம் வெளிவரும் "சம்ஸார நௌகா" படத்தில் பி. ஆர். பந்துலு.

ஆர். பட்டாபிராமன் (சித்தூர்)

ராஜமுக்தி படத்தில் நாட்டியக் கலையை ரஸிக்கவும் சந்தர்ப்பமிருக்கும் என்று நினைக்கிறேன்.

நீர் நினைப்பது சரிதான்; பாகவதர் "கவலையைத் தீர்ப்பது நாட்டியக் கலையே" என்று முன்பே பாடியிருப்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளும்.

டி. தங்கராஜ் (மதுரை)

தற்போது என். எஸ். கிருஷ்ணன் இருக்கும் விலாஸத்தைத் தெரிவிக்கவும்

c/o எனெஸ்கே பில்ம்ஸ், வெங்கட்ராமய்யர் தெரு, தியாகராய நகர், சென்னை.

எம். பி. சௌந்தர ராஜன் (வடக்கன் குளம்)

சந்திரலேகாவில் காட்சியளிக்கும் பெரிய அரண்மனையை நிர்மாணித்த சிற்பி யார்?

ஆர்ட் டைரெக்டர் சேகரும், அவரது துணையாளர்களும்.

“இராவண–சந்திரன்” (சேலம்)

துளஸி ஜலந்தர், ஸ்ரீமுருகன் ஆகிய படங்களில் பூலோகத்திலிருந்து தேவலோகத்திற்குச் சென்று யுத்தம் செய்வதாகக் காண்பிக்கப்படுகிறது. ஆனால் தேவலோகத்திற்குப் படைகள் சென்ற பாதைகளை ஏன் காட்டவில்லை?

ஆச்சரியமேன்! யுத்த ரகசியங்களில் இது ஒன்று அல்லவா?

ஜே. ஜார்ஜ் (சிவகாசி)

எங்கள் ஊர் டயமெண்ட் டாக்கிஸிற்கு, மாயாசக்தி, தர்ம வீரன், நவீன விக்கிரமாதித்தன், பஞ்சாமிர்தம் போன்ற படங்களே ஏன் வந்து கொண்டிருக்கின்றன?

இவைகளை விடப் பழைய படங்கள் கிடைக்காதது ஒரு வேளை காரணமாயிருக்கும்!

ந. மாடசாமியா பிள்ளை (ஜனுபுரம்)

தியாகி படத்தில் நடிக்கும் என். கிருஷ்ணமூர்த்தி முன்பு வெளி வந்த ஏகநாத் படத்தில் கிருஷ்ணனாக நடித்தவரே தானா?

சாக்ஷாத் அவரேதான்.

பி. கிருஷ்ணன் (தூத்துக்குடி)

நான் சினிமாவில் சேர விரும்புகிறேன். நன்றாய்ப் பேசுவேன்; ஆனால் பாடத் தெரியாது.

நீர் நடிக்கும் போது பேசுவது அவ்வளவு அவசியமில்லை. நடிப்பதற்கு முன்பு முதலாளிகளிடம் உமக்கு நன்றாகப் ‘பேசத் தெரிந்திருக்க வேண்டும்.’

என். ஏ. அப்துல் ரஜாக் (வந்தவாசி)

கே. எல். வி. வஸந்தா ஏன் படங்களில் நடிப்பதை நிறுத்தி விட்டார்?

சில நடிகைகள், “ஏன் இவர்கள் இன்னும் சினிமாவில் நடித்துக் கொண்டேயிருக்கிறார்கள்” என்று ரஸிகர்கள் சலித்துக் கொள்ளும் போது கூட நடித்துக் கொண்டேயிருப்பார்கள். வேறு சிலரோ திடீரென்று நடிப்பார்கள்; திடீரென்று மறைவார்கள்; பிறகு திடீரென்று மீண்டும் தோன்றுவார்கள். இதற்கெல்லாம் யாராலும் காரணம் சொல்லவே முடியாது.

பி. புதிய விநாயகம் (ஐயனுபுரம்)

கிருஷ்ண பக்தியில் நடிக்கும் வி. எஸ். ஜெயராமன் சில வருஷங்களுக்கு முன் வெளி வந்த நல்ல தங்காள், லீலாவதி, சுலோசனா, கிருஷ்ண லீலா முதலிய படங்களில் நடித்தவர்தானா?

அந்த “சிதம்பரம் சிங்கக் குட்டி”யே தான் இவர்!

பி. ராமசாமி (ஐயனுபுரம்)

சேவாஸதனம் படத்தில் நடித்த எப். ஜி. நடேசய்யர் ஏன் வேறு படங்களில் நடிக்கவில்லை? அவர் தற்சமயம் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ஸ்ரீ. எப். ஜி. ஒரு உயர்தர ரிடையர்டு ரயில்வே அதிகாரி; அமெச்சூர் நடிகர். அவருக்கு சினிமாவில் நடித்து, பணம்

“பக்த ஜனா” படத்தில் ஒரு சாந்தம் மிகுந்த பாகத்தில் நடக்கும் சாந்த குமாரி.

சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையோ, அல்லது அவசியமோ இல்லை.

"வம்பன்" (மண்ணடி)

சினிமா நடிக, நடிகைகளைப் பற்றி எழுதுகிறீர்களே. ஏன் அது போல் நாடக நடிக, நடிகைகளைப் பற்றியும் நீர் எழுதக் கூடாது?

அவர்களைப் பற்றியும் எழுதவே விரும்புகிறேன். ஆனால் அவர்களென்னவோ அரிதாரத்தினடியில் உருத் தெரியாமல் ஒளிந்து கொண்டு விடுகிறார்களே! என்ன செய்வது?

பீ. டி. சுப்ரமண்யம் (காரைக்கால்)

மங்கம்மாவில் நடித்த வசுந்தராவை அவருடன் நடித்த பஞ்சன் ரிஜிஸ்டர் கலியாணம் செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப் படுகிறேன். உண்மையா?

இருவரும், (ரிஜிஸ்டர் கலியாணமல்ல) சாஸ்திரோக்தமான கலியாணமே செய்து கொண்டிருப்பதென்னவோ உண்மைதான். ஆனால் ஒருவரையொருவர் அல்ல!

ஆர். தீனதயாளன் (பெரிய காஞ்சீபுரம்)

நேயர்களுக்கு நீர் அளிக்கும் பதில் உண்மை தெரிந்து எழுதுகிறீரா? அல்லது கற்பனை செய்து எழுதுகிறீரா?

நான் எழுதுபவைகள் மட்டும் கற்பனையாய் இருக்கும் பட்சத்தில் என் கதி என்னவாகும் என்பதையே இப்பொழுது கற்பனை செய்து பார்த்து வருகிறேன்!

"பைத்தியக்காரன்" (பண்ருட்டி)

ஜகதலப்பிரதாபன், காமவல்லி ஆகிய படங்களில் நடித்த வரலக்ஷ்மியின் முகம் நாளுக்கு நாள் சோபித்து வருவதேன்?

வர "வரலக்ஷ்மி" கடாக்ஷம் அவருக்கு அதிகரித்து வருவதை நீர் அறியீரோ?

கே. வி. வன்னியராஜன் (சிவகாசி)

மதுரை சித்திரகலா மூவிடோனின் "புஷ்பக்காரி" என்ற படம் என்னவாயிற்று? தற்போது அவர்கள் என்ன படத்தைத் தயாரித்து வருகிறார்கள்?

மிகுந்த உத்ஸாகத்திடையே ஆரம்பமான இந்த ஸ்டுடியோ மிகுந்த வருத்தத்திடையே மூடப்பட்டு விட்டது.

ஏ. ஆர். ஜெயலக்ஷ்மி (செய்யார்)

ஜனவரி மாத ஊசியில் "பெண்களுக்குத் தான் நாரதர் வேஷம் பொருந்தும்" என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே. அப்படியானால், ஊர் வம்பளந்து கலகம் மூட்டுவதில் பெண்கள் தான் தேர்ந்தவர்கள் என்பது உம் அபிப்பிராயமா?

ஆம்; தாம் மூட்டி விடும் கலகம் தம் சொந்த வாழ்க்கையிலும் புகுந்துவிடக் கூடாதென்ற பயத்தினால்தான் அவர் பிரம்மசாரியாகவே காலந் தள்ளி விட்டார்.

ம. ப. மோஹனசுந்தரம் (வில்லிவாககம்)

துளியும் ஆபாசமற்ற முறையில்

ஜெயப்ரகாஷ் பிக்சர்ஸின் "போஜன்" தமிழ்ப் படத்தில் பி. எஸ். கோவிந்தன்.

நடித்து புகழ் மிகுந்த நக்ஷத்திரமாக விளங்குபவர் யாரேனும் உண்டா?

எம். எஸ். சுப்புலக்ஷ்மியைக் கூறினால் நீர் ஆட்சேபிக்க மாட்டீர் என்று நம்புகிறேன்.

எம். தங்கவேல் (திட்டை)

அபூர்வ சிந்தாமணியில் செங்கமலமாக நடிக்கும் எஸ். வரலக்ஷ்மியை நாடகத்தில் நடிக்க அழைத்தால் வருவாரா?

சினிமா உலகில் அவருக்கு இப்பொழுது ஏக கிராக்கி, ஐயா! அவர் எங்கே வரப்போகிறார்?

வி. என். சந்திரமோஹன் (மதுரை)

குமாரி கமலாவுக்கு பெற்றோர்கள் சகோதர சகோதரிகள் உண்டா?

பெற்றோர்கள் உள்ளனர். கமலாவுக்கு சகோதரர்கள் கிடையாது. இளைய சகோதரிகள் மட்டும் இருவர் இருக்கின்றனர்.

எம். எஸ். சந்திரசேகரன் (கொழும்பு)

எம். என். சரோஜினி ஸ்ரீராமுலு நாயுடு டைரெக்ட் செய்யும் படங்களில் மட்டுமே நடிப்பதின் காரணமென்ன?

இது தெரியாதா? பிற டைரெக்டர்களின் "அதிகாரத்திற்கு" அவர் உட்பட விரும்பவில்லை.

டி. கே. சி. தங்கவேலு (பாலக்குறிச்சி)

எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஹிந்தி மீராவுக்குப் பிறகு ஏதேனும் படத்தில் நடிக்கிறாரா?

இல்லை.

எஸ். செல்லதுரை (கொழும்பு)

ஜம்பம் படத்தில் ஊமையாக நடிக்கும் கே. ராஜேஸ்வரி உண்மையிலேயே ஊமைப் பெண்ணா?

நல்லவேளை! அவரிடம் நேரில் மட்டும் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தீரோ அவர் உம்மீது "வசை மொழி"களாக அர்ச்சனை செய்திருப்பார்!

ஏ. நாகராஜா (கொழும்பு)

எஸ். பாஷாவை எங்கே காணவே காணோமே. அவர் ஏதேனும் படங்களில் நடிக்கிறாரா?

இல்லை. வில்லன் வேஷத்தில் வெறுப்புற்று கதாநாயகன் வேஷத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் போலும்!

விரைவில் வெளி வரக்கூடிய 'திருமழிசை ஆழ்வார்'' படத்தில் நடனமாடும் துளஸி, ராதா,

டி. டி. எச். சௌந்தரபாண்டியன் (கொழும்பு)

டி. ஆர். ராஜகுமாரியின் சொந்த ஊர் பாளையங்கோட்டை என்று சொல்லுகிறார்களே; உண்மையா?

உண்மையல்ல; அந்த ஊரிலிருந்து சினிமாவுக்கு வந்துள்ளவர்கள் பி. எஸ். ரத்னு பாய், சரஸ்வதி பாய் சகோதரிகளாவர்.

டி. எம். இப்ராஹிம் (ஹப்புதளை)

குமாரி கமலாவை தன் உடன் பிறந்த சகோதரியாக பாவிப்பதாய் என் மாமன் மகன் கூறுகிறார். இதன் மர்மம் என்ன?

நீர் குமாரி கமலாவை மணந்து கொள்ள விரும்பும் "மர்மத்தை" அவர் தான் தெரிந்து கொண்டிருக்கிறாரே!

எம். ராமன் (கொழும்பு)

டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடுவின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

c/o பக்ஷிராஜா ஸ்டுடியோ, கோயமுத்தூர் என்று எழுதவும்.

பீ. வி. நாராயணன் (பம்பாய்)

தங்களுக்குச் சிறந்த கேள்விகளை அனுப்பி வைப்பவர்களுக்கு நீங்கள் பரிசு வழங்குவதில்லையே, ஏன்?

கூலி கொடுத்து கேள்விகளை வரவழைப்பதில் எனக்கு இஷ்டமில்லை. ஆதலால் நல்ல கேள்விகளுக்கு நான் அளிக்க விரும்பும் பரிசு சிறந்த பதில்கள் தாம்.

"விடாக்கண்டன்" (வாளாடி)

சினிமா நடிகர்களில் அதிக கனமுள்ளவரும், நடிப்பில் திறமை மிக்கவரும் யார் என்று தெரிவியும்?

சாதுரியமாய் கேள்வி கேட்கும் உமக்கு சின்னப்பாவைத் தெரியாதது போல் எதற்காகப் பாசாங்கு செய்கிறீர்?

எஸ். சிவராமன் (காமன்கோட்டை)

குண்டுசியாரே! தங்களுடைய மூளையை எனக்கு ஒரு மாதத்திற்கு இரவல் கொடுக்க முடியுமா?

அப்படியானால், என் மூளையின் வரவை எதிர் பார்த்து உம்முடைய மண்டையைக் காலி செய்து வைத்துக் கொண்டிருக்கிறீர் என்று சொல்லும்!

சி. பெரியகருப்பன் (தூத்துக்குடி)

டி. வி. நமசிவாயம் யாரிடம் சங்கீதம் கற்றார்? என்ன ஜாதியைச் சேர்ந்தவர்?

அவர் மேளக்கார ஜாதியைச் சேர்ந்தவர் என்று கேள்வி. ஆதலால் சங்கீதம் அவருக்கு பரம்பரையாய் வந்த சொத்தாயிருக்கும்.

எங்கள் வியாபார ஸ்தலங்கள்

பெங்களூர், பனாரீஸ், காஞ்சீவரம்,
பெங்கால் பட்டுப் புடவைகளுக்கும் இன்னும்
எல்லாவித ஜவுளி தினுசுகளுக்கும் பெயர்
— போனவை —

கால நிலையை அனுசரித்தே விலை

P.R. நாராயணசாமி அய்யர்

Branch :	பட்டு நூல்
Fancy Hall	ஜவுளி வியாபாரம்
சைனா பஜார்,	பெரியகடை வீதி,
திருச்சினாப்பள்ளி.	**திருச்சினாப்பள்ளி.**

பரத நாட்டியம், நாடகம், முதலியவைகளில் நல்ல அநுபவமுடைய எம். ஜே. ஆண்டாளுக்கு "சம்ஸார நௌகா" நிறையப் புகழைச் சம்பாதித்துக்கொடுக்கும்.

மஹாலிங்கத்தின் புகழ்
மளமளவென்று உயர்ந்து
கொண்டே போகிறது. ஞான
"சௌந்தரி"யில் அவர் கான
வெற்றி பெறுகிருர்.

நாட்டிய - சினிமா நக்ஷத்திரம் திருச்சூர் டி. பிரேமாவதி நடிக்கும் ஒரு படத்தில் நாட்டியமில்லாமல் இருக்குமா ''சம்ஸாரநௌகா''வில் அவர்கள ஜோராய் ஆடியுள்ளார்.



"சப
க
டி.
டி

"காதலு
என் பா
"ஞான
பார்த்த
கையில

கு

இடது
"ஆண்டாள்"
தில் இது ஒரு

★

வலது
"பிழைக்கு
இது ஒரு

* *

புறம்:
ளகா
ர்கள்"
பந்துலு,
மாவதி

★

புறம்:
கண்ணில்லை"
ள். ஆனால்
ாந்தரி" யைப்
'காதலுக்கு
என்டார்கள்.

ரீசி



ழ்ப்படத்
ல் காட்சி

ழி"யில்
ட்சி.

இனிய குரல் படைத்த யூ. ஆர். ஜீவரத்தினம் தமக்குப் பொருத்தமான ஆண்டாள் வேஷத்தை தத்ரூபமாய் நடித்து வருகிறாராம்.



"கச்சதேவயானி"க்குப் பிறகு
ராஜகுமாரியின் பாட்டும், நடிப்பும்
"சந்திரலேகா" படத்தில் நூல்
சிற்ப்பாய் விளங்குகிறது

சில மாதங்களுக்கு முன்பு அரங்
கேறிய பரத நாட்டியக் குழந்தை
பேபி ராஜாமணி இப்பொழுது
பால "ஞானசௌந்தரி"யாக
நடித்திருக்கிருர்.

* அநியாயம் !

கொழும்பு நகரில் சுமார் 6 தியேட்டர்களில் தமிழ் படங்கள் காட்டுகின்றனர். அநேகமாக இந்தப் படக் காட்சி சாலைகளில் புதிய படங்கள் வருவது என்பது குதிரைக் கொம்பு தான். ஆனால் சில சமயங்களில் நல்ல படங்களும் வருவது உண்டு.

இங்கே டிக்கெட் எடுக்க "க்யு"வில் நிற்க வேண்டும். ஆகவே நாங்கள் படம் காட்டுவதற்கு 2. 3 மணி நேரத்திற்கு முன்னதாகவே வந்து விடுவோம். ஆனால் கொழும்பு தியேட்டர்களில் பெண்களுக்கு தனி இடமும் கிடையாது. அவர்கள் "க்யு"வில் நிற்க வேண்டியதும் இல்லை. மேலும் பெண் பிள்ளைகளுடன் படம் பார்க்க வரும் ஆண்கள் "க்யு"வில் நிற்காமலேயே அப் பெண்களின் உதவியால் டிக்கெட் வாங்கி விடுகிறார்கள். ஆதலால் பெண்கள் சரியாக ஐந்து நிமிஷங்களுக்கு முன் வந்து டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே போய் விடுகிறார்கள். அது மட்டும் அல்லாமல் சில ஆண்கள் யாரையாவது ஒரு பெண்ணை தன்னுடன் அழைத்துக் கொண்டு வந்து "க்யு"வில் நிற்காமல் உள்ளே இடத்திற்கு முந்திக் கொள்ளுகிறார்கள். கடைசியில் நடப்பது என்னவென்றால் இரண்டு மூன்று மணி நேரம் வெயிலில் நின்று கொண்டிருந்த பல ஆண்களுக்கு டிக்கெட் கிடைக்காமல் போய் விடுகிறது. இது அநியாயம் இல்லையா ?

எஸ். காசி,
கொழும்பு

கொள்ளை லாபம்

பாமர மக்கள் 0-4-6 அணா வகுப்பிற்கு டிக்கெட் இல்லை என்றவுடனே 0-7-6 அணா டிக்கெட் எடுத்து அவ் வகுப்பிற்குச் செல்வர் என்றும், அதனால் தங்களுக்கு அதிகமான லாபம் கிடைக்கிறது என்ற எண்ணத்துடன், பல தியேட்டர்காரர்கள், 0-4-6 அணா வகுப்பிற்கு 250 டிக்கட்டுகள் கொடுக்க வேண்டுமென்றிருந்தால் அத்தனையையும் கொடுக்காமல் குறைந்த அளவு டிக்கட்டுகளை கொடுக்கின்றனர். இதனால் பாமர மக்கள் உண்மையாகவே 0-4-6 அணா டிக்கெட் இல்லை என்று கருதி 0-7-6 அணா டிக்கெட்டை எடுத்து ஏமாறுகின்றனர். தியேட்டர்காரர்களின் இந்தச் செய்கைக்கும், கறுப்பு மார்க்கெட்டில் கொள்ளை லாபம் அடிக்கும் ஒரு கூட்டத்தாருக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது ?

தியேட்டர்காரர்கள் கையாண்டு வரும் இவ் வழக்கத்தை இனிமேலாவது கைவிட்டு, தங்களுக்கு நல்ல பெயரையும், பொதுஜனங்களின் ஆதரவையும் பெற முயற்சிப்பார்களா ?

மு. ராமசாமி,
மதுரை.

தியேட்டரில் ரகளை

சில படங்களை ரஸிகர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போது, தாங்கள் சினிமாப் படம்தான் பார்க்கிறோம் என்ற எண்ணத்தை விட்டுவிட்டு, சில கட்டங்களைப் பார்த்து 'சீ, நாயே, போ, வா' என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அதனால் மற்றவர்களுக்குக் கஷ்டம் விளைவிக்கிறோம் என்பதை உணருவதில்லை.

இம்மாதிரியான பழக்கத்தை பொதுஜனங்கள் விட்டுவிட வேண்டும். நம்மைப் போல் பிறர் படம் பார்க்க வந்திருக்கிறார்கள் என்ற எண்ணம் ஒவ்வொருவர் மனதிலும் ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் படத்தைப் பார்த்து ரஸிக்க முடியும். பொதுஜனங்களுக்குள் இந்தக் கட்டுப்பாடு இல்லாவிட்டால் பொழுது போக்கிற்காகச் சினிமாவுக்குப் போவது என்ற வார்த்தையே பொய்யாகி விடும்.

'காலிங்பெல்,'
கரூர்.

"கல்பனா", "பில்ஹணா" "ஏ-1" ஆகிய படங்களில் நடிக்கும் ஜி. சகுந்தலா

அன்னிய நக்ஷத்திரங்கள்"

"தமிழ்ப் படங்களில் அன்னிய நக்ஷத்திரங்களுக்குப் பிரதான்யம் அளித்தல் கூடாது" என்பதைக் குறித்து தமிழ்ப் பட ரசிகர்களிடையே அபிப்பிராய பேதம் இருத்தல் முடியாது. இதற்குக் காரணம் அன்னிய பாஷை பேசும் நடிகர்களை நாம் அடியோடு வெறுக்கிறோம் என்பது அல்ல. நம் தமிழ்ப் படக்கலை சிறந்த வகையில் முன்னேற வேண்டும் என்பதே நம் எண்ணமாகும்!

சில காலமாக தமிழ்ப் படத் தயாரிப்பாளர்களிடையே ஏற்பட்டுள்ள புது மோகம், வேறு பாஷைப் படங்களில் பிரசித்தி பெற்ற நடிகர்களை தமது படங்களில் நடிக்க வைக்க வேண்டும் என்பது தான். எந்த ஒரு நக்ஷத்திரமும் தமது தாய்ப் பாஷைப் படங்களில் தான் தமது திறமையை நன்கு வெளிப் படுத்த முடியும் என்ற உண்மையை படத் தயாரிப்பாளர்கள் உணர வேண்டும். தமிழ்ப் பாஷையைச் சரியாகப் பேசத் தெரியாத அன்னிய நடிகர்களை தமிழ்ப் படங்களில் பிரதம பாகங்களில் நடிக்கச் செய்வதன் மூலம் இவர்கள் தமிழ்ப் படக்கலைக்கே பெரும் கெடுதல் விளைவிக்கிறார்கள். தமிழ் நாட்டிலேயே திறமையுள்ள நக்ஷத்திரப் பதவிக் கேற்றவர்கள் கணக்கில்லாமல் இருக்க அன்னியர்களைத் தேட வேண்டிய அவசியமே இல்லை.

இனி மேலாவது தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் தமது எண்ணங்களை மாற்றிக் கொள்ளல் வேண்டும். இல்லாவிடில் இவர்களது கொள்கை ஓர் தற்கொலைக் கொள்கையாகவே முடியும்!

"முரளிதரன்"
சென்னை.

விளம்பரமோசம்

எங்கள் ஊரில் இருக்கும் பிரகாஷ் தியேட்டரில் உள்ள சௌக்கியங்களும் அதனுடைய ஆரம்ப நேரங்களும், அமளிகளும் சொல்லத்தரமல்ல. நோட்டீஸ் விளம்பரத்திலும் தியேட்டரின் சுவற்றிலும் முதல் காக்ஷி 6-30 என்றும், இரண்டாவது காக்ஷி 10-30 என்றும் போடப் பட்டிருக்கும். ஆனால் முதல் காக்ஷி தொடங்குவது 7-30க்கும், இரண்டாவது காக்ஷி 10-30க்கும்தான். திரையில் படம் ஆரம்பித்த பிறகும் தியேட்டரில் உள்ள மின்சார விசிறிகள் அப்படியே நின்றுஇருக்கும். ஜனங்கள்கோஷம்செய்தால்தான் தியேட்டர்காரர்கள் விசிறிகளைப் போடுவது. இல்லையேல் சும்மா இருப்பார்கள். இது தவிர ஆசனங்களில் மூட்டைப் பூச்சியின் ஆட்சிதான். படம் நடக்கும்போது சிகரெட்டு பீடி விற்பவர்களின் தொந்திரவு வேறு உண்டு.

தியேட்டர் மானேஜர் பொதுஜனங்களின் நன்மையை உத்தேசித்துக் குறைகளை நீக்குவாரா?

வி. பி. ஜி. ராஜேஸ்வரன்,
அரக்கோணம்.

பிரிவினைக்கொள்கை.

எங்கள் ஊரில் கன்னியப்பா டாக்கீஸ் என்று ஒரு தியேட்டர் இருக்கிறது. தியேட்டர் நல்ல முறையில் கட்டப் பட்டிருந்தாலும் பொது ஜனங்களுக்கு அசௌகரியத்தையும் அதில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சுகாதாரத்திற்குக் காற்று தானே பிரதானம்? அதற்காகத் தானே தியேட்டர்களில் மின்சார விசிறிகள் வைத்திருக்கிறார்கள்? அப்படியிருந்தும் கன்னியப்பா தியேட்டர்காரர்கள் விசிறிகளை சுழல விடுவதே இல்லை. பொது ஜனங்கள் கூச்சல் போட்டு, வசை புராணம் தொடுத்தால் விசிறிகளைச் சுழல விடுகிறார்கள். இல்லா விட்டால் சும்மா இருந்து விடுகிறார்கள்.

பெண்களுக்கென்று உள்ள இடத்தில் மாத்திரம் விசிறிகள் சுழலுகின்றன. அதனால் குழப்பம் வேறு அடிக்கடி ஏற்படுகிறது. பொது மக்களையே ஆண், பெண் என்று பாகுபடுத்திக் குழப்பத்தில் ஆழ்த்தும் இத் தியேட்டர் சொந்தக்காரர்கள் மனம் மாற வேண்டும். பொது மக்களுக்கு நன்மை செய்தால் தான் நமக்கு நல்ல வரும்படி கிடைக்கும் என்ற மனப்பான்மையாவது தோன்றி தியேட்டர் சொந்தக்காரர்கள் சுகாதார வசதிகளைச் செய்ய வேண்டும்.

பி. எஸ். அப்துல் வஹாப்,
திருக்கழுக்குன்றம்.

ஏமாற்று வித்தை

வேலூரில் மிகவும் பின்னடைந்த டாக்கீஸ் "அபேரா டாக்கீஸ்." இதன் கட்டடமும் பழையது, மிஷினும் பழையது; அதில் வரும் படங்கள்கூட பழையதுதான்.

ஒரு படத்தைப் பற்றி, இதில் அபாரமான சண்டைகள் உண்டு, மயிர்க் கூச்செரியும் சம்பவங்கள் உண்டு என்றும் விளம்பரப் படுத்துவார்கள். இதை நம்பி ஜனங்கள் திரள் திரளாகச் செல்லுவார்கள். ஆனால் படத்தில் ஒரு சண்டைகூட இருக்காது. ஜனங்கள் பெரிய ஏமாற்றம் அடைவார்கள். இம்மாதிரி பொதுஜனங்களை ஏமாற்றுவதை அபேரா டாக்கீஸ்காரர்கள் திருத்த வேண்டும். பொது ஜனங்களின் நன்மைக்காகத்தான் தியேட்டர்கள் என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

வே. ரா. தீ. தயாளன்,
வேலூர்.

சினிமா பொதுஜன விரோதியா?

நெல்லியடியில் புதிதாய் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இரு சினிமாத் தியேட்டர்களுடைய நிலையை நோக்கும்போது சினிமா வென்பது ஜன சமூக விரோதி யென்று எண்ண வேண்டிய நிலைதான் ஏற்படுகிறது.

மகாத்மா தியேட்டர் இலங்கையின் பெரிய சினிமாக் கம்பெனியான சிலோன் தியேட்டர்ஸ் நிர்வாகத்துடன் தொடர்புடையது. சினிமா மாமூல்படி மாலை 6-30க்கும், இரவு 9-30க்கும் இரு காட்சிகள் காண்பிக்கப் படுமென்றே இத்தியேட்டர் நோட்டீசிலும் காணப்படும். ஆனால் எழுத்தைச் செய்கையிற் காட்ட இதன் நிர்வாகிகள் ஒரு போதுமே விரும்புவதில்லை. பல சந்தர்ப்பங்களில் முதற் காட்சி 8, 8-30 மணிக்குக் கூடத் தொடங்குவார்கள். இந் நிலையில் 5, 6 மைல் தூரத்திலிருந்து வருபவர்கள் இரண்டாவது காட்சி முடிந்து வீடு செல்ல மறுநாட் காலை 4, 5 மணியாகுமென்றால் அது கண்டு நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை.

இரண்டாவது தியேட்டர் லட்சுமி தியேட்டராகும். இத் தியேட்டரைப் பற்றி ஒரு வசை புராணமே பாடி விடலாம். பெண்களுக்காக ஒதுக்கப் பட்டிருக்கும் இடத்தைப் பார்த்தால் கோர்டுகளில் காணப்படும் கைதிக் கூண்டின் ஞாபகமே வரும். 4, 5 அடி அகலத்தில் ஓர் ஒடுங்கிய கூடு சரிக்கட்டி, அதில் பெண்களை அடைத்து வைத்திருக்கின்றனர். இப்படி ஒரு குட்டிப் படவாளியை வைத்துக்கொண்டு, அதில் புளி மூட்டை போல ஜனங்களை அடைத்துத் தம்மெண்ணப்படி பழி வாங்குகின்றனர். சுகாதார வசதி என்பது இந்த இரு தியேட்டர்களிலும் மருந்துக்குக்கூட கிடையாது.

இரு தியேட்டர் சொந்தக் காரரிடையேயும் எழுந்த போட்டி மனப்பான்மை பொதுஜன சவுகரியத்தை முற்றிலும் மறைத்து விட்டது. படம் பார்க்கும் சில மணி நேரமாவது ரஸிகர்கள் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்பதை இவர்கள் இன்னும் உணரவில்லை. தம் சொந்த அபிப்பிராய பேதங்களை மறந்து இனிமேலாவது விரிந்த மனப்பான்மையுடன் சமூக நலனுக்காக உழைப்பார்களென எதிர்பார்க்கிறேன்.

சி. எஸ். துரை,
அச்சுநகர்.

இதுவா மாளிகை?

"நாகரிகக் காலம், சினிமாத் தியேட்டர்கள் மாளிகைகள் போன்று காட்சி அளிக்கின்றன. சிறிய ஊர்தான்; சினிமாத் தியேட்டர் மூன்று இருக்கிறது" என்றெல்லாம் பேசும் இக்காலத்தில்

---

*பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர்:

எஸ். காசி,

213, தோரீல் ரோடு,

இலங்கை.

தஞ்சாவூர் ஜில்லாவின் தலைநகரான தஞ்சையில் இருப்பது ஒரு தியேட்டர்தான். அதுவும் 18-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. உள்ள வசதியோ கேட்கவேண்டியதில்லை. தரை 0-4-6 என்றால் வெற்றிலைப் பாக்கு எச்சில் துப்பப்பட்ட தம்பலக் குளம்தான். பெஞ்சு, பாக்பெஞ்சு இவைகளும் முழுமோசம். சுகாதார வசதி கிடையவே கிடையாது. இதை யாரும் கவனிப்பதில்லை. ஆலையில்லா ஊருக்குஇலுப்பைப் பூ சர்க்கரைஎன்பது போல் ஊருக்கு ஒரு தியேட்டராக இருப்பதால்தானோ என்னவோ தியேட்டர் சொந்தக்காரர்கள் அலட்சியமாக இருக்கிறார்கள். சுதந்திர இந்தியாவில் இம்மாதிரி தியேட்டர்களை வைத்திருப்பது விந்தையாக இருக்கிறது. சர்க்கார் நடவடிக்கை எடுத்தோ முதலாளியின் மனம் மாறியோ தியேட்டர் சீர்திருந்த வேண்டும் என்பது என் அவா.

கோதண்டராமன்,
தஞ்சாவூர்.

தியேட்டர்களை அழகு படுத்தல்

ரசிகர்களின் முழு ஆதரவைப் பெற தியேட்டர் நிர்வாகிகள் தங்கள் தியேட்டர்களை அழகு படுத்துவதில் உற்சாகம் காட்டவேண்டியது மிகவும் அவசியமாகும். தென்னாட்டில் சில தியேட்டர்களில் மேற்கூறிய முறை கையாளப் பட்டு வருகிறது. தியேட்டர்களின் உட்புறத்திலே தேசியத் தலைவர்களின் படங்களையும், இயற்கை எழில் ததும்பும் காட்சிகளையும் நிர்மாணிக்க வேண்டும் இதனால் தியேட்டர் அழகுறுவதுடன் படம் பார்க்க வருபவர்கள் மனதைக் கவர்ந்து படம் பார்க்க வராவிட்டாலும் தியேட்டரைக் காணவேண்டும் என்ற அவா ஏற்படும். வடநாட்டு தியேட்டர்களில் இம்முறை உள்ளது. இதை நம் நாட்டுத் தியேட்டர் நிர்வாகிகள் கவனிப்பார்களா?

சா. வை. நாதன்,
கும்பகோணம்.

கொடி வணக்கம்

ஒவ்வொரு தேசத்திலும் உள்ள மக்கள் அந்தந்த தேசக் கொடியை வணங்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். கொடி வணக்கம் என்பது ஜனங்கள், அரசாங்கத்துக்கும், நாட்டிற்கும் செய்யும் மரியாதைகளில் ஒன்று.

ஆயினும் பலாத்காரமாகக் கொடியை வணங்கச் செய்யும் வழக்கம் நல்லதா என்று யோசிக்க வேண்டும். சமீபத்தில் பம்பாய் சர்க்கார் ஒரு சட்டம் செய்திருக்கிறார்கள். !சினிமாக்களில் கடைசியில் தேசியக் கொடி காட்டப் படும்போது பலர் எழுந்து போய் விடுவதால், தியேட்டர் கதவுகளை அடைத்து சினிமா பார்ப்பவர்களை வெளி வராமல் பார்த்துக் கொள்ளுகிறது அந்தச் சட்டம். இப்படிப் பலவந்தமாக உள்ளேயே இருக்கும்படி செய்தால் அவர்கள் கொடி வணக்கம் செய்தார்கள் என்பது என்ன நிச்சயம்?

ஆகவே, கதவுகளை மூடி, மக்களை வெளி வர முடியா வண்ணம் செய்து, கொடி வணக்கத்தைக் கடைப் பிடிப்பதை விட இன்னொன்று செய்யலாம். படம் ஆரம்பமாகும் முன்னமே கொடி வணக்கத்தை வைத்துக் கொண்டால் என்ன? அரசியல் கூட்டங்களில் கூட கொடி வணக்கம் தான் முதலில் நடக்கிறது. தியேட்டரில் கூட்டம் நிறைந்த பின் தான் சினிமா ஆரம்பமாவதால், இந்த வழக்கத்தைக் கைக் கொள்வதே நன்றாக இருக்கும்.

இது வரை அந்திய நாட்டுக் கொடிக்கு வணக்கம் செலுத்த வேண்டியவர்களாக இருந்த நமக்கு, கொடி வணக்கத்தின் அர்த்தம் இன்னும் கொஞ்ச காலத்திற்குத் தெரியாமலிருக்கலாம். நாளாவட்டத்தில் சினிமா பார்ப்பவர்கள், கொடியைக் காட்டாத சினிமாக்களிலும், அதைக் காண்பிக்கும்படி செய்து, வணக்கம் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. வாழ்க நம் தேசியக் கொடி!

வி. எஸ். சுந்தர ராஜன்,
மயிலாப்பூர்.

காலிகள் அட்டூழியம்

தூத்துக்குடி. டி. பாலகிருஷ்ணா தியேட்டரில் நடக்கும் அட்டூழியம் கொஞ்ச நஞ்ச மல்ல. டிக்கெட் ஜன்னல் அருகில் நிற்கும் ஆசாமிகள் பூராவும் பிளாக்மார்கெட் வியாபாரிகள். பொதுஜனங்கள் டிக்கெட் வாங்க முடியாதபடி இவர்கள் தடுக்கிறார்கள். ஆகையால் டிக்கெட் இந்தக் காலிகளிடம் தான் வாங்க வேண்டும் அவர்களிடம் கேட்டால் அவர்கள் நான்கு அணா டிக்கெட்டை 6 அணாவாகவும், 6 அணா டிக்கெட்டை 8 அணா என்றும் விலை கூறுகிறார்கள். அப்படியே வாங்கிக் கொண்டு போனாலோ இதே காலிகள் உள்ளே வந்து, பெண்கள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு சிகரெட் புகையை பெண்கள் முகத்தில் ஊதுகிறார்கள். பெண்கள் திரும்பிப் பார்த்தால் கண்ணடிக்கிறார்கள். மற்றும் பெண் வகுப்புக்கும் ஆண் வகுப்புக்கும் இடையில் பலகை வைத்து அடைத்திருக்கிறார்கள். அது கொஞ்சம் தூக்கலாக இருக்கிறது. அதன் வழியே இந்தக் காலிகள் காலை விட்டு பெண்களின் காலை சுரண்டுகிறார்கள். இது மாதிரி அட்டகாசம் இன்னும் பல உண்டு. இந்தக் காலிகளை அடக்குவாரில்லையா?

மா. குருசாமி.
தூத்துக்குடி

படங்கள் வெற்றியை அடைவதும், தோல்வியை அடைவதும் பெரும்பாலும் டைரெக்டர்களைப் பொறுத்திருக்கிறது. சில சமயம் நடிகர்களைப் பொறுத்துமிருக்கிறது. சில சமயம் கதையைப் பொறுத்துமிருக்கிறது.

* * *

என்னைக்கேட்டாலோ அந்தக்குறிப்பிட்ட படத்தின் ஷூட்டிங்கை ஆரம்பித்து வைப்பவரைப் பொறுத்திருக்கிறது என்றும் கூறுவேன். சிலவேளைகளில் பத்திரிகை அல்லது வர்த்தகக் காட்சியைத் துவக்கி வைப்பவரைப் பொறுத்துமிருக்கிறது எனவும் கூறுவேன்.

* * *

"விஞ்ஞான முன்னேற்றம் முதிர்ந்து போயுள்ள இந்த அடாமிக் யுகத்தில்கூட சகுனமும், சாஸ்திரமும் பார்ப்பது ஆச்சரியமாயிருக்கிறதே?" என்று நீங்கள் கேட்கலாம். எனக்கும் உங்களைப்போலவேதான் ஆச்சரியம்.

* * *

இப்பொழுது போலவே, அப்பொழுதும்—சுமார் எட்டு ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர்—மந்திரிகளையும், பெரிய தலைப்பாகைகளையும் ஷூட்டிங் ஆரம்ப விழாக்களுக்கோ, அல்லது பட ஆரம்ப விழாக்களுக்கோ தலைமை வகிக்கக் கூப்பிட்டு வந்தார்கள். அந்த மந்திரிகளும், பெரிய தலைப்பாகைகளும் இதற்கெல்லாம் சம்மதித்து வந்தார்கள்.

பாவம், இத்தொழிலை மதித்து அவர்கள் ஆரம்பவிழா நடத்தினார்களே அவர்களுக்கு நல்ல பெயராவது கிடைத்தது என்கிறீர்களா? சிலருக்கு "அதிருஷ்டக் கை" என்று பெயர் கிடைக்கும். வேறு சிலருக்கோ "துரதிருஷ்டம் பிடித்தவன்" என்ற பழி ஏற்படும்.

* * *

இன்னொரு விஷயத்தை நினைத்தாலோ சிரிப்பாக வருகிறது. தெய்வாதீனமாய் ஒரு படம் வெற்றியடையும். அதை ஆரம்பித்து வைத்தவரைக் கொண்டே இன்னொரு படத் தயாரிப்பாளர் தம் பட ஆரம்ப விழாவையும் நடத்தி வைப்பார். ஆனால் இரண்டாவது படமோ படுதோல்வி அடையும்.

* * *

இப்படி "இரண்டுங் கெட்டான்" பெயரை நம் மந்திரிகளில் சிலர் பெற்றிருக்கிறார்கள். இவர்களுள் அப்பொழுதும் மந்திரியாயிருந்த கனம் ஸ்ரீ. டி. எஸ். எஸ். ராஜனும் ஒருவர். அவர் ஆரம்பித்து வைத்த படத்தின், ஸ்டுடியோவின் கதியைப் பாருங்கள்.

* * *

1937-ம் வருஷம் நவம்பர் 19ந் தேதி **ஸ்ரீ ராமானுஜா** படத்தின் ஷூட்டிங்கை ஸ்ரீ ராஜன்தான் ஆரம்பித்து வைத்தாராம். அப்படத்தின் கதிதான் உங்களுக்குத் தெரியுமே!

* *

1938-ம் வருஷம் பிப்ரவரி 2ந் தேதி

வேல் பிக்சர்ஸ் ஸ்டுடியோவைத் துவக்கி வைத்ததும் இதே ஸ்ரீ ராஜன் தான். அந்த ஸ்டுடியோ இருந்த வரலாறும், அது தற்சமயம் இருக்குமிடம் தெரியாமல் வேறு பெயரில் இன்னொரு அதிருஷ்டக் கட்டைப் படமுதலாளியிடம் அகப்பட்டுக் கொண்டிருப்பதும் நேயர்களுக்குத் தெரிந்ததே.

*　　*　　*

இன்னொரு மந்திரி ஸ்ரீ. எஸ். ராமநாதன் 1938 ம் வருஷம் டிஸம்பர் மாதம் 18-ந் தேதி "பக்த அருணகிரி"யின் ஆரம்ப விழாவிற்குத் தலைமை வகித்தாராம். நல்ல வேளையாகப் படத்தைப் போலவே அவரும் சுமாரான பெயரை சம்பாதித்துக் கொண்டு விட்டார்.

*　　*　　*

1938-ம் வருஷம் நவம்பர் மாதம் 12-ந் தேதியோ அம்பிகாபதியின் ஜோன் விழாவிற்கும் ராமநாதன் தலைமை வகித்திருக்கிறார். படம் வெள்ளி விழாவெல்லாம் கொண்டாடிற்றல்லவா?

*　　*　　*

ஆனால் இதே அதிருஷ்டக் கை ஸ்ரீ ராமநாதனேதான் 1939-ம் வருஷம் ஜூலை மாஸம் 6-ந் தேதி கவி காளமேகத்தின் ஷூட்டிங்கை ஆரம்பித்து வைத்தார். ஒரு அதிர்ஷ்டக் கையால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அந்தப் படத்திற்கு இவ்வளவு துரதிருஷ்டமா ஏற்பட வேண்டும்?

*　　*　　*

மற்றொரு மந்திரி சுப்பராயன். பக்த நாம தேவர் படத்தின் ஆரம்பக் காட்சியை 1938-ம் வருஷம் பிப்ரவரி 29-ந் தேதி நடத்தி வைத்தார். அப்படம் எவ்வளவு தூரம் ரசிகர்களைக் கவர்ந்தது என்பதை நான் கூறத் தேவையில்லை.

*　　*　　*

ஆனால், "அதிருஷ்டமில்லாத கை" என்று தோன்றும் இதே கனம் சுப்பராயன், அதே வருஷம் ஏப்ரல் ஒன்றாந் தேதி நடைபெற்ற தக்ஷயக்ஞத்தின் ஆரம்ப விழாவிற்குத் தலைமை வகித்தாராம். அப்படம் சக்கை போடு போட்டதற்கு என்ன சொல்வது?

*　　*　　*

1940 வருஷம் டிஸம்பர் மாஸம் 21-ந் தேதி சங்கராச்சாரியார் படத்தின் ஆரம்பக் காட்சி ஜோதிர் மடத்து ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமி துவக்கி வைத்தார். பாவம்! இரண்டு ஸ்வாமிகளைப் பற்றியும் பேசுவாரே காணோம்!

*　　*　　*

நம் பாகவதர் என்ன இருந்தாலும் கைராசிக்காரர்தான். அவரால் திறந்து வைக்கப்பட்ட கபாலி டாக்கீஸ், நின்று, நிலைத்து, மயிலை ரசிகர்களுக்குப் பொழுது போக்கை அளித்து வருகிறது.

*　　*　　*

ஸ்ரீ. வி. வி. கிரி இருக்கிறாரே அவர்

"போஜன்" தமிழ்ப் படத்தில் ஆர். பாலசுப்ரமண்யம், வரலக்ஷ்மி.

கூடிய வரைக்கும் அதிருஷ்டக்காரப் புள்ளி என்று தான் தெரிகிறது. அவர் 1938-ம் வருஷம் மார்ச் 11-ந் தேதி ஆரம்பித்து வைத்த நியூடோன் ஸ்டுடியோ, பெயரும் புகழுடனும் பணத்துடனும் விளங்கி வருகிறது.

* * *

டைரெக்டர் டி. ஆர். சுந்தரம் சில சமயம் நல்ல பெயரெடுத்துக் கொள்ளுகிறார். அவர், நடிகர் டி. எஸ். துரை ராஜூக்கு பிழைக்கும் வழியை ஆரம்பித்துக் கொடுத்தார். நல்ல ராசியான கைதான். படம் விரு விரு வென்று வளர்ந்து வருகிறது.

* * *

இதே சுந்தரத்தின் கைராசியைப் பற்றி காலஞ்சென்ற ராமன் பிக்சர் ஸாரிடமோ, அல்லது கிரேட் ஈஸ்டர்ன் பிக்சர்ஸ் ஸ்ரீ. சக்ரவர்த்திபிடமோ கேட்டுப் பாருங்கள். "எங்கள் சிவப்ரகாசத்தை ஆரம்பித்து வைத்தவர் டி. ஆர். எஸ். தான் !" என்று கூறுவார்கள்.

* * *

கர்னல் லக்ஷ்மி அதிருஷ்டமுள்ளவரோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அவர் ஆரம்பித்து வைத்த கிரீன் பிக்சர்ஸின் கதியையும் அவர்களது நாதவிஜயத்தின் நிலைமையையும், மாரியப்ப ஸ்வாமிகள் மனைவியை இழந்ததையும் நினைத்தால் என் மனம் படும்பாடு சொல்லி முடியாது.

* * *

அவர் (லக்ஷ்மி) ஏதாவது ஒரு விழாவிற்கு சும்மா வந்திருந்தால் கூட துரதிருஷ்டக் காற்று வீசும் போலிருக்கிறது. கண்ணுபிலிம்ஸின் திருமழிசை ஆழ்வாரின் ஆரம்ப விழாவிற்கு அவர் வந்திருந்ததைத்தான் குறிப்பிடுகிறேன். இந்தப் படம் இன்னமும் திரையை எட்டிப் பார்க்கவில்லை.

* * *

கோவையில் கார்த்திகேயா பிக்சர்ஸின் உஷாவை எந்த மகானுபாவன் ஆரம்பித்து வைத்தாரோ, பாவம்! அப்படம் திரையை எட்டிப் பார்க்கவேயில்லை!

* * *

டைரெக்டர் பி. சம்பத்குமார் போய்ச் சேருகிற கம்பெனிகளின் அதிருஷ்டத்தைப் பாருங்கள். அவர் அருணா பிக்சர்ஸில் சேர்ந்தார். அது பாதியிலேயே அஸ்தமித்து விட்டது. பிறகு கிரேட் ஈஸ்டர்ன் பிக்சர்ஸில் சேர்ந்தார். அது அடியோடு போய் விட்டது. இப்பொழுதோ அவர் எங்கு போய் விட்டார் என்பதே தெரியவில்லை!

* * *

நான்கூட சில படங்களின் ஆரம்ப விழாவுக்குச் சென்று ஆசி கூறுவதுண்டு. சில படங்கள் எப்படியோ (பிறருடைய பலத்த அதிர்ஷ்டத்தின் காரணமாகப் போலும்) வெளி வந்து விடும். பல படங்கள் அப்படியே நின்று விடும். என்னுடைய ஆசீர்வாதத்தைப் பெற்ற கம்பெனிகளுள் முதன்மையாக விளங்குபவை ராமராஜ்யா பிக்சர்ஸாரும், ஓங்காரி பிலீம்ஸாரும் தான்!

* * *

என் ஆசீர்வாத மகிமை இப்படி இருப்பதற்காக நான் வருந்தவில்லை. ஏனென்றால் பிரபல "தினமணி"யின் ஆசிரியர் ஏ. என். சிவராமனே எனக்குத் துணை நிற்கிறாரே! அவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நவீன பிக்சர்ஸின் மதுரை வீரனை நினைத்தால் துக்கம் தொண்டையை அடைக்கிறது. அதன் சிருஷ்டி கர்த்தா ஸ்ரீ. சேஷகிரியின் விலாசமே தெரியாது இருக்கிறது.

* * *

இப்படியெல்லாம் ஒரு பிரமுகரையும் அழைக்காமல் பட ஆரம்ப விழாவை ஆரம்பிப்பவர் பி. எஸ். வி. அய்யர் தான். ஒருவருடைய அதிருஷ்டத்திலும் அவருக்கு நம்பிக்கை

கிடையாது. ஏன் சில சமயங்களில் தம்முடைய அதிருஷ்டத்தில் கூட அவருக்கு நம்பிக்கை இருப்பதில்லை. தன் கையே தனக்கு உதவி என்ற கொள்கையை உடையவர் அவர்.

* * *

இதை யெல்லாம் படித்துவிட்டு படங்களின் வெற்றிதோல்விகளுக்காக அவற்றை ஆரம்பித்து வைத்த பிரமுகர்களைக் குறைகூறுகிறீர்கள். பாவம், அவர்கள் என்ன செய்வார்கள்? நமது படமுதலாளிகள் அவர்களுக்கு இவ்வித பெயரை ஏற்படுத்தி விடுகிறார்கள்.

* * *

இவ்விதம் அபகீர்த்தி ஏற்படாமல் தடுப்பதற்கு இப் பிரமுகர்கள் ஒரு வழியை அனுசரிக்கலாம். அதாவது வெற்றியடைந்தபடங்களின் வெள்ளி, பொன், வைர விழாக்களுக்கு மட்டுமே தாங்கள் தலைமை வகிப்பது என்ற கொள்கையை அவர்கள் அனுசரிக்கலாம். அப்படிச் செய்வதால் கெட்டதோ நல்லதோ பெயர் ஏற்படாதல்லவா?

* * *

பட ஆரம்ப விழாக்களுக்கு மட்டும் தான் பொதுஜனப் பிரமுகர்களின் கைங்கரியம் பயன்பட்டு வருவதாக நினைத்து விடவேண்டாம். பத்திரிகைகளை ஆரம்பிப்பதற்குக்கூட சில பிரமுகர்களின் கைங்கரியம் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

* * *

இப்படி ஆரம்பித்து வைக்கும் பிரமுகர்களைவிட அப்பத்திரிகைக்கு ஆசிரியர்களாக அமருகிறார்களே அவர்களில் சிலர் ராசிக்காரர்கள்; வேறு சிலரோ போகும் இடம் புல் முளைத்துப் போகும்!

* * *

ஒரே ஒரு எழுத்தாள பிரமுகர் இருக்கிறார். அவர் ஆசிரியராக சேர்ந்தால், ஒன்று அப்பத்திரிகை விற்காது. இல்லை யென்றால் ஒரேயடியாய் நின்றே போய் விடும்!

* * *

அவரை வைத்து அனுபவப் பட்டவர்கள் அனேகர். "ஆமை புகுந்த வீடும், அமீனா புகுந்த வீடும், இவர் போகும் பத்திரிகையும் ஒன்று" என உதாரணமாகக்கூட என் நண்பர் சொல்லுகிறார்! பாவம் அவரது திறனுக்கும்அதிருஷ்டத்திற்கும் எவ்வளவு தூரம்!

* * *

என் நண்பர் ஒருவர் எந்தப் புதுப் பத்திரிகையைக் கண்டாலும் காசு கொடுத்து வாங்கி விடுவார். முதல் இதழை மட்டும் தான். பின்னர் அப் பத்திரிகை வெளி வந்தால் தானே இவர் வாங்குவதற்கு?

* * *

இதை அனேக தடவைகளில் கவனித்துள்ள நானே, எனக்கு வேண்டிய பத்திரிகைகளை அவருக்கு இனாமாகப் படிக்கக் கொடுத்து விடுவது வழக்கம். ஏனென்றால் அவர் காசு கொடுத்து வாங்கினால் தானே அப்பத்திரிகை நின்று விடுகிறது என்ற காரணம்தான்.

* * *

நல்ல வேளையாய் "குண்டூசி" முதல் இதழை இந்தக் "கைராசிக்காரர்" காசு கொடுக்காமல் படிக்கும் படிச் செய்து விட்டேன்.

* * *

இப்படி அதிர்ஷ்டத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து எழுதுகிறேனே! என் அதிருஷ்டம் எப்படி என்கிறீர்களோ? என்னத்தை எழுத! மாதா மாதம் விஷயங்கள் நிறைய அகப்பட மாட்டேனென்கிறதே!

* * *

அப்படித் தான் எழுதுகிறேனே அது திருப்தியைத் தருகிறதா என்று பார்த்தால் அதுதானில்லை. இப்படி இருக்கிறது என் அதிருஷ்டம்.

என்ன ஆச்சரியம்!

நாகர்கோயில் மஹாதேவன்

தமிழ் நாட்டுத் தவநடிகை-மிஸ். மனோரஞ்சிதத்தை ஒரு முறையாவது நேரில் பார்க்க வேண்டும், அவளோடு ஒரு வார்த்தையாவது பேச வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான ரசிகர்களில், அனந்தராமனும் ஒருவன். மிஸ். ரஞ்சிதத்தை எங்கே பார்ப்பது, எப்படிப் பார்ப்பது, பேசுவது என்று அவன் இருபத்ினாலு மணிநேரமும் ஏங்கிக் கொண்டிருந்தான். அந்த ஏக்கத்தினால் அவனுடைய உடம்பு நாளொரு தோலும் பொழுதொரு எலும்புமாகி விட்டது. காலேஜில் படித்துக் கொண்டிருந்த தன் நண்பர்களிடமெல்லாம் யோசனை கேட்டான். அரசமரத்தடியிலிருந்த விநாயகப் பெருமானிடமும், "மனோரஞ்சிதத்தைப் பார்ப்பதற்கு ஒரு வழி சொல்ல மாட்டீரா" என்று கெஞ்சினான். சொன்னால் நூறு தேங்காய் உடைப்பதாகச் சத்தியம் செய்தான். ஒன்றும் பலிக்கவில்லை. அனந்தராமன் மனமுடைந்துபோனான். அவனுக்கு உணவு செல்லவில்லை. உறக்கம் பிடிக்கவில்லை, மனோரஞ்சிதத்தைப் பார்க்க முடியாத இந்த மானிட ஜென்மம் இருந்தென்ன, இறந்தென்ன என்று சொல்லிக் கொண்டே தற்கொலை செய்து கொள்ள எத்தனித்தான். அதே சமயம் "பக்தா பொறு, அவசரப் படாதே" என்று ஓர் சப்தம் கேட்டது.

அனந்தராமன் திடுக்கிட்டுத் திரும்பினான். சாக்ஷாத் விநாயகப் பெருமான் புன்னகை தவழும் முகத்தோடும் கொழுக் கட்டை தின்ற வாயோடும் நின்று கொண்டிருந்தார்.

அனந்தராமனுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. "விநாயகப் பெருமானே, அபயம்; அபயம்" என்று சொல்லிக் கொண்டே நமஸ்கரித்தான்.

"பக்தா, உன் வைராக்கியத்தை மெச்சினோம், மகிழ்ந்தோம். கவலையை விடு. நாளைக்கே மனோரஞ்சிதத்தைப் பார்க்கும்படி உனக்கு அருள் புரிந்தோம். இதோ இந்தப் பத்திரிகையைப் படித்துப் பார்" என்று சொன்னார் ஆனைமுகக் கடவுள்.

அந்தப் பத்திரிகையில் பின்வரும் விளம்பரம் பிரசுரமாகி யிருந்தது.

"இனாம் 1000 ரூபாய் இனாம்.

பிரபல நக்ஷத்திரம், மிஸ், மனோரஞ்சிதத்தின் பேபி என்ற பெயருடைய அருமை நாய்க்குட்டி காணமற் போய் விட்டது. அதைக் கண்டு பிடித்து, நேரில் கொண்டு வந்து சேர்ப்போருக்கு 1000 ரூபாய் இனாம்"

அதைப் படித்ததும், "ஸ்வாமி எனக்கொரு சந்தேகம்" என்றான் அனந்தராமன்.

"பக்தா உன் சந்தேகம் என்ன என்பதை யாம் அறிந்து கொண்டோம். லெக்ஷக் கணக்கான நாய்க்குட்டிகள் இருக்கும் இந்த ஊரில், மனோரஞ்சிதத்தின் பேபியை எப்படி அடையாளம் கண்டு பிடிப்பது என்பதுதானே உன் சந்தேகம்?"

"ஆமாம், ஸ்வாமி."

"வருந்தாதே மைந்தா, ஆற்றோரத்திலுள்ள புளிய மரத்தடியில், அந்த நாய்க்குட்டி நித்திரை செய்து கொண்டிருக்கிறது. உன்னைப்போல் அதுவும் மனோரஞ்சிதத்தினிடம் எப்படிப்போவதென்று வழி தெரியாமல் தவிக்கிறது. நீ, உடனே சென்று அதை எடுத்துக் கொண்டு போனால் உன் மனோரதம் பூர்த்தியாகும்" என்று சொல்லிவிட்டு மறைந்தார் விநாயகப் பெருமான்.

2

அடுத்த நாள் காலை ஒன்பது மணியிருக்கும். மிஸ். மனோரஞ்சிதம் அழுத கண்ணும்,சிந்திய மூக்குமாய்க் காணப்பட்டாள். பேபியை நினைத்து நினைத்து அவள் உள்ளம் உருகிக் கொண்டிருந்தது. "ஹே, பரந்தாமா. பக்தவத்ஸலா. அன்று பிரஹலாதனைக் காத்தது போல் இன்று என் பேபியையும் காப்பாற்றக் கூடாதா?" என்று புலம்பிக் கொண்டிருந்தாள். அந்த சமயத்தில் சிரஞ்சீவி அனந்தராமன் பேபியோடு உள்ளே வந்தான்.

பேபியைப் பார்த்ததும் ரஞ்சிதத்தின் முகம் மலர்ந்தது. ஒரே பாய்ச்சலாகப்பாய்ந்துபேபியை வாங்கி அணைத்துக்கொண்டு, "என் கண்ணே, என் கரும்பே" என்று கொஞ்சினாள். அவளுடைய கண்களில் நீர் பெருகிற்று. அந்த உருக்கமானகாக்ஷியைப் பார்க்கப் பார்க்க அனந்தராமனுக்கும் அழுகை வந்து விட்டது. அதை அடக்கிக் கொண்டான். அதற்குள், மிஸ். ரஞ்சிதம் அன்பு ததும்பும் முகத்தோடு அனந்தராமனைப் பார்த்து "நீங்கள் செய்த உதவியை நான் ஒரு நாளும் மறக்க மாட்டேன். என் உயிரினும் மேலான பேபி இனிமேல் வர மாட்டாள் என்று ஏங்கினேன். கடவுள் உங்கள் மூலமாகவே வந்து பேபியை எனக்களித்தார். நீங்கள் தான் என் தெய்வம். இப்படி உட்காருங்கள்" என்றாள்.

அனந்தராமனுக்கு உச்சி குளிர்ந்து விட்டது. ஆஹா ஹா. என்ன அன்பு என்று நினைத்துக் கொண்டே அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்தான். அடுத்த நிமிஷம் அழகான வெள்ளித் தட்டில் காப்பியும் பலகாரமும் கொண்டு வந்து அவன் முன் வைக்கப்பட்டது.

"இதெல்லாம் எதற்கு? நான் இப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன்" என்றான் அனந்தராமன்.

"பரவாயில்லை. சும்மா சாப்பிடுங்கள்; சங்கோசப் படாதீர்கள். இது உங்கள் வீடுதான்" என்றாள் ரஞ்சிதம் புன்னகையோடு.

அப்படி அவள் சொன்னது 'நீங்கள சாப்பிடாவிட்டால், நானே எடுத்து உங்கள் வாயில் ஊட்டுவேன்' என்று சொல்வது போலிருந்தது அனந்தராமனுக்கு. பிறகு அவன் புது நாட்டுப் பெண்ணைப் போல் நாணிக்கோணிக் கொண்டே சாப்பிடத் தொடங்கி தட்டைக் காலி பண்ணினான்.

"உங்களுடைய பெயரென்ன?" என்று கேட்டாள் ரஞ்சிதம்.

அவளுடைய குரல் குயிலும் கோகிலமும் கூவுவது போல் இருந்தது. (நமக்கல்ல அனந்தராமனுக்கு) அக்குரலினிமையில் மெய்மறந்து, "அ... அ...அனந்தராமன்" என்றான்.

"இங்கே என்ன வேலையிலிருக்கிறீர்கள்?"

"வேலை ஒன்றுமில்லை, காலேஜில் பி. ஏ. க்கு வாசிக்கிறேன்."

"தாயார் தகப்பனார் இருக்கிறார்களோ?"

"ஊரிலிருக்கிறார்கள்."

"சந்தோஷம்; உங்கள் ஊர் எது?"

"மருதூர்"

"என்ன, மருதூரா?" இதைக் கேட்டு விட்டு மிஸ். ரஞ்சிதம் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து விட்டாள்.

"ஏன் ஆச்சரியப் படுகிறீர்கள்? ஊர் பட்டிக்காடா யிருக்கிறதென்று?"

"இல்லை இல்லை; மருதூரில் நீங்கள் யார் வீட்டுப் பிள்ளை?"

"புரோகிதர் சுந்தரகனபாடிகள்!"

"நீங்கள் அவருடைய...?"

"ஆமா, ஆமா அவருடைய மகன் தான் நான்."

அவ்வளவு தான். அடுத்த நிமிஷம் மிஸ். ரஞ்சிதம் "ஸ்வாமி" என்று சொல்லிக் கொண்டே சோபாவில் சாய்ந்து விட்டாள். அனந்தராமனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் உடம்பெல்லாம் நடுக்கிற்று. மெதுவாக "மிஸ். ரஞ்சிதம்" என்று கூப்பிட்டான். ரஞ்சிதம் கண்ணை விழித்து அனந்தராமனை ஒரு பார்வை பார்த்தாள். அந்தக் கண்களில் ஜலம் நிறைந்திருந்தது. சிறு குழந்தையைப் போல விம்மி விம்மி அழுதாள்.

"மிஸ். ரஞ்சிதம், ஏன் அழுகிறீர்கள்?" என்று அன்போடு கேட்டான் அனந்தராமன்.

"ஸ்வாமி, என்னை மன்னிப்பீர்களா?" என்று கேட்டாள் ரஞ்சிதம்.

"நான் எதற்காக மன்னிப்பது? எனக்கொன்றும் புரியவில்லையே!"

"புரியும்படி சொல்கிறேன் ஸ்வாமி. பத்து வருடங்களுக்கு முன் மருதூர் கிராமத்தில் மருதாணி இலை விற்றுக் கொண்டிருந்தாளே மருதாயி என்ற ஒரு பெண், அவளை உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?"

"பேஷாக இருக்கு. அவளுக்கு நான் எவ்வளவோ உதவி செய்திருக்கிறேன். ரொம்பவும் தங்கமான பெண். ஒரு சமயம் சென்னையி லிருக்கும் தன் பாட்டனுருக்கு உடம்பு சரியில்லை யென்றும், அவரைப் போய்ப் பார்த்து விட்டு வரவேண்டு மென்றும், ரயில் செலவுக்கு பத்து ரூபாய் வேண்டுமென்றும் என்னிடம் கேட்டாள். பள்ளிக் கூட பீஸ் கட்டுவதற்காக நான் வைத்திருந்த பத்து ரூபாயையும் அவளுக்குக் கொடுத்தேன். 'ஸ்வாமி இந்த உதவியை ஒரு நாளும் மறக்க மாட்டேன்' என்று சொல்லி விட்டுப் போனாள். அதற்கப்புறம் அவளை நான் பார்க்கவே யில்லை. ஆமா, அவளுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?"

"அந்தக் கடன்காரி தான் நான்!"

"என்ன!"

"ஆமாம், அந்த மருதாயி தான் நான்."

"உன் பெயர் மனோரஞ்சித மல்லவா?"

"அதெல்லாம் சினிமாப் பெயர். வயிற்றுப் பிழைப்புக்கு வழியில்லாமல் உங்களிடம் பொய் சொல்லி பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு நானும் பக்கத்து வீட்டு கருப்பாயியும் சென்னைக்கு வந்தோம். ஒரு டைரெக்டர் எங்களை சினிமாவில் நடிக்கச் சேர்த்துக் கொண்டார். அதிர்ஷ்டம் திரும்பிற்று. சினிமாவுக்காக மருதாயி என்ற பெயரை மாற்றி விட்டு, மனோரஞ்சிதம் என்று வைத்துக் கொண்டேன். பத்து வருஷங்களுக்கு முன் உங்களிடம் பத்து ரூபாய் வாங்கிக் கொண்ட அதே மருதாயி தான் இப்போது மனோரஞ்சிதமாக உங்கள் முன் நிற்கிறாள். ஸ்வாமி, என்னை மன்னிப்பீர்களா?" என்று கேட்டாள்.

அனந்தராமனுக்குத் தலைசுழன்றது. கீழே விழுவதற்கு முன் "அப்படியானால் உன் கூட நடிக்கும் மிஸ். கனகாம்பரம் யார்?" என்று கேட்டான்.

"அவள் தான் கருப்பாயி" என்றாள் மாஜி மருதாயி.

இந்த வார்த்தை முழுவதும் அனந்தராமனுக்குக் கேட்கவில்லை. மூர்ச்சை அடைந்தவனுக்கு காது எப்படிக் கேட்கும்?

கேட்பாரில்லை!

இந்தியா தவிர மற்றெல்லாத் தேசங்களிலும் கைத்தொழில் வளர்ச்சியை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகக் கருதி வருகின்றனர். இதன் காரணமாக, அந்த தேச மக்களும் சர்க்காரும் இவ் விஷயத்தில் பரந்த நோக்கம் கொண்டிருக்கின்றனர். ஆரம்ப வருஷங்களில் ஒரு குறிப்பிட்ட தொழிலில் காணப்படும் குறைபாடுகளைப் பொருட்படுத்தாமலும், அந்நியப் போட்டியால் அத் தொழில் நசித்துப் போய் விடாமலும் பார்த்துக் கொள்ளுகிறார்கள்.

ஒரு நிமிஷம் யோசித்துப் பாருங்கள். ஒரு சினிமாப் படத்தைத் தயாரிப்பதற்கு எவ்வளவு கஷ்டங்களை அநுபவிக்க வேண்டியிருக்கிறது. மேனாடுகளில் சர்க்கார்களின் ஆதரவுடன் படங்கள் தயாரிக்கப்படுவதையும், நம் நாட்டில் எண்ணிறந்த இடையூறுகளுக்கிடையே படங்கள் தயாரிக்கப்படுவதையும் ஒத்திட்டுப் பாருங்கள். ஒரு சிகரெட் பாக்கெட்டிற்கு நீங்கள் கொடுக்கும் காசுக்கும் குறைவான செலவில் உங்களுக்கு உல்லாசப் பொழுதை அளிக்கும் இத் தொழிலுக்கு சர்க்கார் சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டாமா?

தன் வருமானத்தில் பெரும் பகுதியை சர்க்காருக்கு வரியாகக் கொடுத்து வரும் தொழில் இது ஒன்றுதான். அப்படியிருக்க சர்க்கார் என்ன செய்கிறார்கள்? கண் துடைக்கும் ரீதியில் சொற்ப சௌகரியங்களைச் செய்வதோடு திருப்தி அடைந்து விடுகிறார்கள். நீங்கள் கேட்கலாம்: "தியேட்டர் வாயிலில் ஜனங்கள் கும்பலிட்டு கேட்டை உடைக்கும்போது போலீஸ் உதவி அளிக்கவில்லையா? க்யூவில் நின்று எப்படி டிக்கெட் வாங்குவது என்று போலீஸ்காரர்கள் கற்றுக் கொடுக்கவில்லையா? மோட்டார்களை வழியை மறைக்காமல் ஓரமாய் நிறுத்தி வைக்கும்படிச் செய்யவில்லையா? காட்சி முடிந்ததும் உங்களுக்காக சர்க்கார் பஸ்கள் காத்துக் கொண்டிருக்கவில்லையா? இதுமட்டுமா? ஒரு புதுப் படத்தின் ஷூட்டிங் ஆரம்பம், அல்லது 25-வது நாள் விழா-இது போன்றவைகளுக்கு நம் கனம் மந்திரிகள் யாராவது தலைமை வகித்து, பட முதலாளிகளின் பிரச்னையைத் தீர்த்து வைக்கவில்லையா? அதோடுகூட இந்தச் சந்தர்ப்பங்களில் அவர்கள் ஏதாவது சில வார்த்தைகளையும் பேசி, பத்திரிகைகள் பல வார்த்தைகளால் அதைக் கண்டிப்பதற்கு வழி செய்யவில்லையா?

"இன்னும் சொல்லப் போனால், ஒரு சினிமா தணிக்கை போர்டை நமக்காக ஏற்படுத்தி பொதுஜன ஒழுக்கத்தைப் பத்திரமாய்க் காத்து வரவில்லையா? தமிழ்ப் படங்களும், தெலுங்கு படங்களும் மட்டுமே உருப்பட வேண்டும் என்ற 'நல்ல' எண்ணமில்லாவிட்டால், இப்படங்களில் இவர்கள் வெட்டச் செய்யும் அதே ஆபாசக் காட்சிகளை வெளி நாட்டுப் படங்களில் இருக்கும்படி விட்டு வைப்பார்களா? ஆனால் வெளிநாட்டுப் படங்களிலும் ஆபாசக் காட்சிகளை வெட்ட ஆரம்பித்து விட்டால் பிறகு தணிக்கை அதிகாரிகளின் பொழுது போக்கிற்குப் படமில்லாமல் போய் விடாதா?" நீங்கள் இன்னும் சரமாரியாக அடுக்கிக் கொண்டே போகிறீர்கள்; என் தலை சுற்றுகிறது!

* * *

சர்க்கார் மட்டும்தான் சினிமாத் தொழிலுக்கு மேற் சொன்ன வாறெல்லாம் "உதவி" வருகிறதென்று எண்ண வேண்டாம். கார்பொரேஷனும் சினிமா விஷயத்தில் தாராள நோக்கத்துடன் தான் நடந்து வருகிறது. சினிமா தியேட்டர்களுக்கு எதிராகவோ அல்லது அருகாமையிலோ கக்கூஸ்களைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். சூடான விவாதங்களைக் கூட லக்ஷியம் செய்யாமல் நியூ எல்பின்ஸ்டன் தியேட்டருக்கு முன் ஒரு கக்கூஸைக் கட்டியிருக்கும் விஷயந்தான் உங்களுக்குத் தெரியுமே! வெல்லிங்டனுக்கு எதிராகவும், நியூ குளோபிற்கு சமீபமாகவும், பிரபாத் பிராட்வே இவைகளுக்கு பக்கத்துச் சந்துகளிலும் (பிராட்வே ரஸ்தாவிலேயே இடம் கிடைக்காததால்) இவைகளை அமைத்திருக்கிறார்களே, எவ்வளவு "சவுகரியம்" பாருங்கள்! ஆனால் மிட்லண்ட் தியேட்டருக்கு அடுத்தாற்

NKm 211, N47 N48. 1.8

போலுள்ள (பழைய காங்கிரஸ் மாளிகை இருந்த) காலி மைதானம் இவர்கள் கண்ணில் படாதது ஆச்சரியந்தான்!

கார்பொரேஷன் சினிமாத் தொழிலுக்கு இன்னொரு சௌகரியமும் செய்திருக்கிறது. சினிமாப் போஸ்டர்களை ஒட்டுவதற்காக அவர்கள் சென்னை நகரம் பூராவிலும் உறுதியான சிமெண்ட போர்டுகளை அமைத்திருக்கிறார்கள். ஜனங்களுக்கு ரொம்ப சௌகரியம்; ஒரு குறிப்பிட்ட அழகான போஸ்டர் தங்கள் வீட்டுச் சுவரை அலங்கரிக்க வேண்டுமென்ற ஆசை அவர்களுக்கு ஏற்பட்டால், கொஞ்சம் தண்ணீரைத் தெளித்து விட்டுப் பிய்த்தால் 'அலக்'காக வந்துவிடும். இவை கைக்கு எட்டும் உயரத்தில் தானே அமைக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் இப்படிச் செய்வது பற்றி கார்பொரேஷனுக்குக் கவலையே கிடையாது. அவர்கள்தான் போஸ்டரை ஒட்டுவதற்கு முன்பே வரியை வசூலித்து விடுகிறார்களே!

"மார்ஸ்"

இத் தொழிலுக்கு இன்னும் ஒரு பெரிய 'சேவையைக்'கூட கார்பொரேஷன் செய்திருக்கிறது. யுத்த காலத்தில் ஏராளமான பணத்தைச் சம்பாதித்தவர்கள் எங்கேயாவது தியேட்டர்களில் பணத்தைப் போட்டு முடக்கி விடுவார்களோ என்ற பயத்தினால்(!) யுத்தம் முடியும் வரையில் புதுத் தியேட்டர்களைக் கட்டுவதற்கு லைசென்ஸே கொடுக்காமலிருந்தார்கள். இப்பொழுதோ மீண்டும் லைசென்ஸ் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாதா; இப்பொழுது பணப் புழக்கம் குறைந்து வருவதால் யாரும் தியேட்டர் கட்டத் துணிய மாட்டார்கள் என்று!

கார்பொரேஷன் கமிஷனருக்குக் குறைந்தவரா என்ன போலீஸ் கமிஷனர்? இந்தத் தொழிலுக்கு "உதவி" செய்ய அவருக்கும் தெரியாதா என்ன? பச்சை, சிகப்பு, மஞ்சள் முதலிய பல வர்ணங்களைக் கொட்டிப் பூசி, மூலைக்குமூலை 'பானர்'களை நிர்மாணிப்பது பணமில்லாமல் சும்மா நடக்குமா? அது மட்டுமா; போஸ்டர்களுக்காக எவ்வளவு ஆயிரங்களைச் செலவு செய்கிறார்கள். பண வசூல் குறைந்து கொண்டே வரும் இந்த நாளில் இது போல ஏராளமாய் செலவு செய்தால் நம் படத் தொழிலின் கதி என்னாவது? இதைத் தடுப்பதற்காகத்தான் போலும், "ஜன நடமாட்டம் மிகுந்த இடங்களில் பானர்களை வைக்கக் கூடாது" என்று கமிஷனர் ஒரு புதிய உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். இதனால் படத் தொழிலுக்கு எவ்வளவு லாபம்! இனி ஒரு லக்ஷ ரூபாய் கொடுக்கும் நக்ஷத்திரங்களுக்கு ஒண்ணேகால் லக்ஷமாய் கொடுக்கலாமல்லவா? பஸ்ஸிலோ, டிராமிலோ, அல்லது நடந்தோ போய்க் கொண்டிருக்கையில் அவசரத்தில் இந்த பானர்களைப் பார்த்துவிட்டுப் போவதற்குப் பதில், உண்மையான ரஸிகர்கள் இந்த பானர்கள் எந்த சந்தில் நிர்மாணிக்கப் பட்டிருக்கிறதென்று தேடிக் கண்டு பிடித்து—தெருவில் போகும் வாகனாதிகள் மேலே மோதிவிடுமோ என்ற பயமில்லாமல்—ஆரஅமர நின்று ரஸிக்கலாமல்லவா? பானர்களை வாராவதிகள் மீது நிர்மாணிக்கக் கூடாது என்று தடுக்கப் படுவதில் இன்னொரு சௌகரியமும் உண்டு. கூவம் நதியிலிருந்தோ, பக்கிங்ஹாம் கால்வாயிலிருந்தோ கிளம்பும் "சுத்தக்" காற்றை நாம் தடையில்லாமல் நேராக சுவாசிக்கலாமல்லவா? சினிமா விளம்பரங்கள் குறைந்து, ஜனங்கள் அவைகளுக்காகச் செலவழிக்கும் பணத்தையும் மிச்சம் பிடித்தார்களானால் அவர்களுக்குத் தானே நல்லது? மிச்சமாகும் பணத்தில் பிளாக் மார்க்கெட்டில் அரிசி வாங்கி அரை வயிற்றுச் சாப்பாட்டை முக்கால் வயிற்றுக்கு அதிகரித்துக் கொள்ளலாம், பாருங்கள்!

134 244

இப்படி பரிதாபகரமாய் இருக்கிறது சினிமா உலகின் தற்கால நிலைமை. இத் தொழில் விஷயத்தில் சர்க்காரும் கார்பொரேஷனும் போலீஸ் அதிகாரிகளும் இவ்வளவு "தயாள சிந்தனை"யுடன் நடந்து கொள்ளுகிறார்கள். கமிஷனரின் புதிய உத்தரவு ஏறக்குறைய ஒரு ஆயிரம் சித்திரக்காரர்களின் ஜீவயத்தைப் பாதிக்கக் கூடும் என்று முறையிட்டால் யார் கேட்கப் போகிறார்கள்? சர்க்காரின் வரிச் சுமையினாலும், அந்நியப் போட்டியினிடையேயும் சிக்கித் தவிக்கும் இந்த சினிமாத் தொழிலின் தீனக் குரல் யார் காதில் விழப் போகிறது? இவ்வளவு புராணப் படங்களைத் தயாரிக்கிறார்களே கருணையினால் அந்தக் கடவுளே இத் தொழில் மீது கருணை கூர்ந்தால்தான் உண்டு!

விசித்திரவனிதாவில் கதைக் குழப்பம்

காசு பறிப்பதற்காக தேசியக் காட்சிகள்!

உதயவரம் ஜமீன்தாரான ரங்கராஜ உடையார், தனது மனைவி பார்வதியுடனும், தனது மகள் இந்திராணியுடனும், தாயாதிப் பெண்ணான அபிராமியுடனும், அசட்டு மைத்துனனான சுந்தரலிங்கத்துடனும் உதகமண்டலத்தில் கோடைக் காலத்திற்காகத் தங்கியிருக்கிறார். அபிராமியின் திருமணத்தைப்பற்றி ஜமீந்தாரும் ஜமீந்தாரிணியும் சர்ச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். ஜமீந்தாரின் பாலிய நண்பனான நாச்சியம்பாடி ஜமீந்தார் பாலகுருசாமியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவருடைய மகன் ராமபத்திரன், நண்பன் பாரிஸ்டர் சேகருடன் உதகைக்கு வருவதாகவும், அவர்களைக் கவனித்துக் கொள்ளும்படியும் அதிலே எழுதப் பட்டிருந்தது.

ஸ்டேஷனிலிருந்து ராமபத்திரனையும் பாரிஸ்டர் சேகரையும் அழைத்துவர அசட்டு சுந்தரலிங்கத்தை ஜமீந்தார் ரங்கராஜூ அனுப்புகிறார். ஸ்டேஷனில் வந்திறங்கிய ராமபத்திரனும், சேகரும், சுந்தரலிங்கத்தின் அசட்டு செய்கைகளைப் பார்த்து சந்தேகங் கொண்டு விடுகிறார்கள். ராமபத்திரனும், சேகரும் வந்த சமயம், ஜமீந்தாரும், மகளும் தாங்கள் மறுநாள் நடிக்கப் போவதாக இருந்த கோவலன் நாடகத்தை ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சுந்தரலிங்கத்தின் செய்கையால் சந்தேகம் கொண்ட ராமபத்திரன், இக் காட்சியைக் கண்டு தவறாக எண்ணி விடுகிறான். மாடியிலே இவர்களுக்கு அறை கொடுக்கப்படுகிறது. ஜமீந்தார் மாடிக்கு வந்து ராமபத்திரனுடன் அவன் தந்தையைப் பற்றிய பாலிய நினைவுகளை எடுத்துக் கூறுகிறார். இந்த நிகழ்ச்சிகளெல்லாம் ஜமீந்தாருக்கு ஆபத்தாக முடிகிறது. ராமபத்திரன் அவரைத்திட்டி அனுப்பிவிடுகிறான். அவர் ஜமீந்தாராக இருந்தாலும் அவரை ராமபத்திரன் கேவலமாகவே எண்ணுகிறான். ஏற்கெனவேயே சேகரைக் காதலிக்கும் அபிராமி, சேகரைக் கண்டு ஆனந்தம் கொள்கிறான். இருவரும்வெளியேற சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ராமபத்திரனுக்கு சந்தேகத்தை நிவர்த்தி செய்தால் தன்னுடைய வெளியேற்றத்திற்குத் தடையாக இருக்கும் என எண்ணி ஒன்றும் கூறாமலே இருந்து விடுகிறாள்.

அபிராமியை சுந்தரலிங்கத்திற்கு மணம் முடித்து வைக்க, ஜமீந்தாரிணி பாடு படுகிறாள். ஆனால் சுந்தரலிங்கமோ, அபிராமியை மணக்க மறுத்து விடுகிறான். சுந்தரலிங்கம் தனது அக்காளாகிய ஜமீந்தாரிணியின் வற்புறுத்தல் தாங்காது, ஏற்கெனவேயே அபிராமியைக் காதலித்த சேகரையே யோசனை கேட்கிறான். சேகர் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள எத்தனித்தான்.

அபிராமியின் நகைப் பெட்டியையும், அபிராமியைக் கடத்திச் செல்ல ஒரு காரும் தேவை என்று சேகர் சுந்தரலிங்கத்தைக் கேட்கிறான். சுந்தர லிங்கமும் ஒப்புக் கொள்கிறான்.

இந்திராணி தன் தகப்பனாருக்கு ராமபத்திரனால் நேர்ந்த மனஸ்தாபத்தைப் போக்க, மாடியில் தங்கியிருக்கும் ராமபத்திரன் அறைக்கு வருகிறாள். ஆனால் ராமபத்திரனோ அவளை ஏறிட்டும் பார்க்கவில்லை. சாப்பாடு எடுத்துக் கொண்டு போன வேலைக்காரனை ஜமீந்தார் தடுக்கவே, இந்திராணி தானே சாப்பாட்டை எடுத்துச் செல்கிறாள்.

இந்திராணியை வேலைக்காரி என எண்ணி விட்டான் ராமபத்திரன். காதலித்து அவளை நடனமாடச் சொல்லி படம் பிடித்துக் கொள்ளுகிறான். சேகர் அபிராமியைக் காதலிக்கிறான் என அறிந்த ஜமீந்தாரிணி, அபிராமியை கோயமுத்தூருக்கு அனுப்ப அசட்டு சுந்தர லிங்கத்தை ஏற்பாடு செய்யச் சொல்லுகிறாள். ஏற்கெனவேயே செய்த ஏற்பாட்டின் படி, சுந்தரலிங்கம் கோயமுத்தூருக்குச் செல்லாமல் காரை பங்களாவிற்கு அருகாமையிலுள்ள தோட்டத்தைச் சுற்றிச் சுற்றி ஓட்டுகிறான். பிறகு அவனே பயங்கொண்டவன் போல் நடித்து வெளியே சென்று கள்வர் தலைவனாக வந்து அபிராமியைக் கடத்திச்

செல்கிறான். அவள் திரும்பவும் பங்களாவுக்கே வந்து விடுகிறாள்.

ஜமீந்தார் வீட்டில், ராமபத்திரன் இரவு நேரத்தில் தூக்கம்வராமல்வேலைக்காரியின் அறை என்று எண்ணி ஜமீந்தார் அறையின் கதவைத் தட்டுகிறான், ஜமீந்தார் குரல் கொடுக்கவே, ராமபத்திரன் அது வேலைக்காரியின் அறை அல்ல என்று எண்ணி ஓடுகிறான். ஓடி தற்செயலாய் வேலைக்காரி (இந்திராணி தான்)யின் அறைக்குச் சென்று ஒளிந்து கொள்ளுகிறான். ஜமீந்தார் திருடன் திருடன் எனக் கூச்சலிட்டவாறே அறை அறையாகத் தேடி தன் மகள் இருக்கும் அறைக்கும் வருகிறார். மகளை ஜாக்கிரதையாக இருக்கும்படி கூறிச் சென்று விடுகிறார். ஒளிந்து கொண்டிருந்த ராமபத்திரன் ஜமீந்தாரின் புதல்வியேதான் வேலைக்காரியாக நடித்தாள்என அறிந்து கோபமாய் அறையை விட்டு வெளியேறி விடுகிறான். இதற்குள் இரவில் திரும்பி வந்த அபிராமி ஆண் உடையுடன் அங்கே வந்து இந்திராணியுடன் சல்லாபமாகப் பேசி இருவரும் ஒரே கட்டிலில் படுத்து றங்குகிறார்கள். மீண்டும்வந்து பார்த்த ராமபத்திரன் இக்காட்சியைக் கண்டு திடுக்கிடுகிறான். இதற்கு முன்பே இதே உடையுடன் இவர்கள் இருவரையும் சேர்ந்து பார்த்திருக்கிறான். சந்தேகம் வலுவடைந்து விடுகிறது.

பங்களாவினுள் தங்கியிருக்க மனமில்லாத ராமபத்திரன் ஓட்டலுக்குச் செல்ல தீர்மானிக்கிறான். இதற்குள் ராமபத்திரனின் தகப்பனாரும், ஜமீந்தாரின் பாலிய நண்பருமான பாலகுருசாமி உடையார் வந்து விடுகிறார். இருவரும் தங்கள் பழைய நினைவுகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். தன்னுடைய மகனுக்கு இந்திராணியை மணம் முடிக்க எத்தனிக்கிறார். இந்த சமயத்தில்தான் ராமபத்திரன் பெட்டி படுக்கையுடன் ஓட்டலுக்குச் செல்கிறான். தந்தையைக் கவனித்து சற்று நிற்கிறான். பால குருசாமி தனது மகனைக் கேட்கிறார். அவன் ஜமீந்தாரை முறையில்லாமல் திட்டி, அவர் கழுத்தை நெறிக்கிறான். பால குருசாமி தன் மகனை ஏசி, கன்னத்தில் அறைந்து விடுகிறார். ஜமீந்தார் பால குருசாமியை வருத்த வேண்டாமென்றும் 'சிறிய பிள்ளை' என்றும் தங்களது நீண்ட நாட்கள் சிநேகிதம் இதனால் பாதிக்கப்பட வேண்டாம் எனவும் தெரிவித்துக்கொள்கிறார்.

ஏற்கனவே 'கிளப்பு'க்காக நாடகத்திற்கு ஜமீந்தாரும் மகளும் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்களல்லவா? இப்பொழுது அந்நாடகத்தை நடத்துவதென தீர்மானிக்கிறார்கள். பால குருசாமியும் கட்டாயம் இந்நாடகத்தை நடத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறார். நாடகம் நடத்துவதென முடிவு செய்யப்படுகிறது. அந்த நாடகத்திற்கு ராமபத்திரனும் வரும்படியான சந்தர்ப்பம் அவனையுமறியாமல் ஏற்பட்டு விடுகிறது. மனம்பிடிக்காமல் வெளியேறி விடுகிறான். உடன் நடிப்பதாக இருந்த இந்திராணியும் வெளியேறுகிறான்; நாடகம் நிறுத்தப்படுகிறது.

வெளியே வந்த ராமபத்திரன் ஒரு டாக்ஸியை ஏற்பாடு செய்கிறான். பெட்டி படுக்கையை எடுத்துவரச் சென்ற சமயம் இந்திராணியும் வந்து டிரைவரிடமிருந்து உடைகளை வாங்கிக் கொண்டு தானே டிரைவர் போலாகி விடுகிறாள். இந்திராணி நடந்த சமாசாரத்தை ஒரு காகிதத்தில் எழுதி டிரைவரிடம் கொடுத்து தன் தகப்பனாரிடம் கொடுக்கச் சொல்லுகிறாள், ராமபத்திரன் இதை அறியாமல் வண்டியில் ஏறிக் கொள்கிறான்.

ராமபத்திரன் வரும் கார் நிறுத்தப்படுகிறது. டிரைவர் (இந்திராணி) மயக்கம் போட்டுவிடுகிறாள். ராமபத்திரன் இந்திராணி என அறிந்து சந்தோஷமடைகிறான். பின்னால் ஒரு கார் வருகிறது. அதிலிருந்து ஜமீந்தார், ஜமீந்தாரிணி, பால குருசாமி, அபிராமி, சேகர் முதலியவர்கள் வந்திறங்கி, தங்கள் சந்தேகங்கள் நிவர்த்தியாயிற்று என தெரிவிக்கிறார்கள். ராமபத்திரனும் மாமனாரிடம் மன்னிப்புக் கோருகிறான்,

* * *

ஸ்ரீ பி. எஸ். ராமையா தான் 'கதை ஸ்வீகரிப்பு'க்குப் பொறுப்பாளியாம், திரைக்கதை வசனத்தை கே. சுப்ரமண்யம் எழுதியிருக்கிறார். எடுத்துக் கொண்ட கதை குழப்பம் மிகுந்தது. அனாவசிய சந்தேகங்களுக்கு இடமளித்து புரியாத முறையில் சில கட்டங்களை சிருஷ்டித்து இருக்கிறார்கள். கதை என்னமோ உடையார் குலத்தைச் சேர்ந்தது. ஆனால் வசனங்களோ பாத்திரங்களுக்கு ஏற்ற ரீதியில் இல்லாமல் இருக்கின்றன. பலயிடங்களில் வசனம் விரசமாகவும் இருக்கிறது.

நடிப்பிலே பி. எஸ். சரோஜாவும், புளிமூட்டை ராமசாமியும் எளிதில் பெயர் வாங்குகிறார்கள். புளிமூட்டை ராமஸ்வாமி ஒரு ஜமீந்தாராகவே காட்சியளிக்கிறார். நண்பனிடம் வருத்தப்படும்

இடத்தில் ஒரு குண சித்திர நடிப்பைக் காட்டுகிறார். பாலகுரு சாமியாக வரும் மகாதேவனும் நன்கு நடித்திருக்கிறார். ராமபத்திரனாக வரும் கிருஷ்ணஸ்வாமி, முற்பகுதியை விட பிற்பகுதியில் நன்கு பேசி இயற்கையாகவே நடித்திருக்கிறார். முதல் படத்தில் 'பராவாயில்லை' என்ற பெயரை அடைந்து விட்டார். சேகராக வந்தவர் 'மலையாளப்படக் கதாநாயகனாக'க் காட்சியளிக்கிறார். சுந்தரலிங்கமாக வரும் வி. குமார் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் நடிகரானாலும், ஒரு சில ஹாஸ்ய நடிகர்களை 'காப்பி' அடிக்க வேண்டும்; அல்லது சுலபமாக நடிக்க வேண்டும். இரண்டுமில்லாமல் 'பாதி கிணறு தாண்டினவன் கதையாகத்தான் இருக்கிறது இவரது நடிப்பு.

பி. ஏ. பெரியநாயகி, ஸ்ரீ வள்ளிக்குப் பிறகு நன்கு பாடியிருக்கிறார். அவருக்குப் புகழைத் தந்த 'சிந்தையறிந்து வாடி' மெட்டிலேயே இதிலும் ஒரு பாட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. நாட்டியமும் ஆடுகிறார். இவருக்கு இப்படத்திலே கொடுக்கப்பட்ட உடைகளைப் பார்த்தால் பெரிதும் பரிதாபமாக இருக்கிறது. திருஷ்டி பொம்மைக்கு திருஷ்டி செய்வது போலத்தான்!

ஒலிப்பதிவு சுமாராக இருக்கிறது. ஒளிப்பதிவு பிரயோசனமில்லை, வெளிச்ச அமைப்பு சரிவர இல்லை.

டைரெக்ஷனைப்பற்றி விசேஷமாகச் சொல்ல ஒன்றுமில்லை. அனாவசியமாக சில இடங்களில் பாடல்களும், நடனங்களும், தேசியப் பாடல்களும், காந்தியின் உருவச் சிலையும், ஐ. என். ஏ. நடனமும் வலுவில் திணிக்கப்பட்டிருக்கிறது. காந்தியைக் காட்டியும், காங்கிரஸைப் பற்றிப் பேசியும் காசுபறிக்க எண்ணம் கொண்டிருக்கிறார் பட முதலாளி. இந்த மாதிரி செய்து கொண்டே போனால் சுயநல எண்ணம் மக்களுக்குத் தெரிந்துவிடும். படங்களில் காங்கிரஸையும் காந்தியையும் இப்படியெல்லாம் காட்டி துன்புறுத்த வேண்டியதில்லை. காந்திஜியை சும்மா விட்டு விடுவதே அவரைத் திரும்பவும் கொலை செய்யாத புண்ணியத்தை அடைந்தவர்களாவார்கள். குழப்பமான கதையை விளங்குமாறு எடுக்கவில்லை. வேண்டுமென்று சில கட்டங்களை சிருஷ்டித்து வளர்த்திருக்கிறார்கள். கதையில் 'ஏன்' என்று கேட்கக் கூடிய சம்பவங்கள் உள்ளன. டிரைவருக்கும் இந்திராணிக்கும் ராமபத்திரன் அடையாளம் தெரியாமலிருப்பது, இந்திராணியின் குரலுக்கும் வேலைக்காரியின் குரலுக்கும் அடையாளம் தெரியாமலிருப்பது, சில சமாசாரங்கள் நடக்கும்போது ஜமீந்தார் இல்லாதிருப்பது முதலியவைகளாகும்.

இன்னொரு அசம்பாவிதமான செய்கை அபிராமியும், இந்திராணியும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொள்ளுவதும் முத்தமிட்டுக் கொள்ளுவதும், மற்றும் சல்லாபமாகப் பேசுவதும் அருவருப்பாயும், அசம்பாவிதமாகவும் விபரீத அர்த்தத்திற்கு உள்ளாவதாகவும் இருக்கின்றன.

மொத்தத்தில் கூறப்போனால் குழப்பமான கதைப் போக்கையும், வலுவில் திணிக்கப்பட்ட தேசியத்தையும், சுமாரான பெயரையும் அடையும் படம் 'விசித்ரவனிதா!'

"நான் சொன்னபடியே நடிகைகளின் போட்டோக்களைப் போட்டு தடபுடல் படுத்திவிட்டாயே! இப்பொழுது நல்ல கிராக்கி ஏற்பட்டிருக்குமே?"

"நல்ல கிராக்கிதான்; ஆனால் **என்னுடைய சோப்பிற்கல்ல. விளம்பரத்தில் நான் வெளியிட்ட அந்த நடிகைக்கு!**"

—க. ச. ரா.

இது செய்தி

சந்திரலேகா

ஜெமினி ஸ்டுடியோவின் பிரும்மாண்டமான தயாரிப்பான 'சந்திரலேகா' வின் பத்திரிகைக் காட்சி சென்ற மாதம் எட்டாந்தேதி வெலிங்டன் டாக்கிஸில் நடைபெற்றது. நகரப் பத்திரிகாசிரியர்களும், நக்ஷத்திரங்களும், டைரெக்டர்களும் மற்றுமுள்ள தொழில் பிரமுகர்களும் விஜயம் செய்திருந்து படத்தைப் பார்த்து ரசித்தார்களாம். இவ்வளவு குதூகலமான பத்திரிகைக் காட்சி நடைபெற்றதே இல்லை எனலாமாம். சென்னை நகரிலும், ராஜதானி பூராவிலும் காற்பது தியேட்டர்களில் 'சந்திரலேகா' வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. ரஞ்சனின் குதிரைச் சவாரியும், வாள் போரும் பாமரமக்களை நன்கு கவர்ந்து விட்டதாம்.

ராம் ராஜ்யாவின் விஜயம்

பிரகாஷ் பிக்சர்ஸ் தயாரித்த ராம ராஜ்யாவை நியுயார்க் அமெரிக்க இந்திய கழகத்தினருக்கு பிரத்தியேகமாக திரையிட ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

படத் தணிக்கை போர்டு

படத்தணிக்கை போர்டு அங்கத்தினர்களில் ஒருவரான ஸ்ரீ. சேஷாசலம் தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிடவே அந்த ஸ்தானத்திற்கு ஸ்ரீ. பி. சூர்யசந்திரனை அங்கத்தினராக நியமித்திருக்கிறார்கள். ஸ்ரீ. எி. ஒ. கூரி, ஐ. ஸி. எஸ். அவர்களும் ஒரு அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நெக் பர்வினுக்குத் தடை

சென்னை மாகாணத்தில் நெக் பர்வின் என்ற உருதுப் படத்தை திரையிடக் கூடாது என ஒரு தடை உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

மைனாமோஹினி

மெர்க்குரி பில்ம்ஸார் ஆர். பிரகாஷ் டைரெக்ஷனில் தயாரிக்கப் போகும் படத்தின் பெயர் மைனாமோஹினியாம். "இளங்கோவன்" தான் கதை வசனத்தைத் தயாரித்துக் கொடுப்பாராம். பிரபல நக்ஷத்திரங்கள் இதிலே நடிக்கக்கூடும் எனத் தெரிகிறது.

புதுக்கோட்டையில் தியாகிக்குத் தடை

மூர்த்தி பிக்சர்ஸ் தயாரித்த 'தியாகி' படத்தை புதுக்கோட்டை பிராந்தியங்களில் திரையிடக் கூடாது என புதுக்கோட்டை சர்க்கார் ஒரு தடை உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

கீத காந்தி

கே. சுப்ரமண்யம் டைரெக்ஷனில் நெப்டியூன் ஸ்டுடியோவில், இன்றைய தேசிய பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டு கீதகாந்தி என்ற படம் தயாராகப் போகிறதாம். பி. எஸ். சரோஜா, பி. ஏ. பெரியநாயகி, டி. ஆர். ராமச்சந்திரன், வி. குமார் முதலியவர்கள் இப் படத்திலே நடிக்கலாமாம்.

பாரகன் தியேட்டர்

சென்ற மாதம் பதினைன்காந் தேதி சென்னை வாலாஜாரோட்டில்

"சிவகவி, கண்ணகி, சோகாமேளர், ஹரிச்சந்திரா" முதலிய படங்களில் தன் இனிய குரலை இரவல் கொடுத்திருக்கும் வி. ஆர். தனம் கொஞ்சகாலம் தமிழ்ப் படங்களையும், தமிழ்நாட்டையும் மறந்திருந்தார். இனி அவரது குரல் மீண்டும் சில தமிழ்ப் படங்களில் ஒலிக்கும் போலிருக்கிறது.

புத்துயிர் பெற்றிருக்கும் பாரகன் தியேட்டர் திறக்கப்பட்டது. மேள வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருக்க, யானை, ஒட்டகை முதலியவைகள் நன்கு அலங்கரிக்கப் பட்டு காத்திருக்க, சென்னை நகர மேயர் யூ. கிருஷ்ணராவ் தியேட்டரை வந்தடைந்தார். மகாராஜபுரம் விஸ்வநாதய்யர் ஆரம்ப கீதம் பாடினார். பிறகு ஸ்ரீ. நரஸூ வரவேற்புப் பத்திரம் வாசித்தார். நகரமேயர் சென்னை தியேட்டர்கள் நிலைமையைக் கூறி, நல்ல வசதியுள்ள தியேட்டர்களாக ஸ்ரீ. நரஸூ போன்றவர்கள் கட்ட வேண்டும் எனக் கூறினார். பிறகு தியேட்டரைத்திறந்துவைத்தார். கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகளும் படமுதலாளிகள் 'ஹாலிவுட் டெக்னிக்' கைக் காப்பியடிப்பதில் ஆக்ஷேபணையில்லை யென்றும், 'ஹாலிவுட் தன்மை' யைக் காப்பியடிக்கும் போதுதான் கவலை ஏற்படுகிறது என்றும் கூறினார். விழாவிற்கு பத்திரிகாசிரியர்களும், தியேட்டர் முதலாளிகளும் மற்றும் பலரும் விஜயம் செய்திருந்தார்கள். விழா முடிந்தவுடன், **கிரஹப்பிரவேசம்** தெலுங்குப் படம் அன்று ஆரம்பமாயிற்று.

எஸ். டி. எஸ். தாயாரானார்

பிரபல சினிமா நக்ஷத்திரம் ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மி சென்ற மாதம் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாரானார். தாயும் சேயும் சௌக்கியமாக இருந்து வருகின்றனர்.

மீராவின் யாத்திரை

சந்திர பிரபா சினிடோனின் தயாரிப்பான '**மீரா**'வை பெல்ஜியத்தில் ஒரு பிரத்தியேக சபையில் திரையிட வேண்டி, சந்திரபிரபா சினிடோன் நிர்வாகஸ்தரான **ஸ்ரீ**. டி. சதாசிவத்திற்குச் செய்தி இலாகா ஒரு வேண்டுகோள் அனுப்பியிருக்கிறார்களாம்.

ஸரஸ்வதிகான நிலையம்

திருவல்லிக்கேணி ஸரஸ்வதி கான நிலையத்தின் ஒன்பதாவது வருடாந்திர கொண்டாட்டம் 24-4-48 சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு, திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் ஹாலில் நடைபெற்றதாம். **ஸ்ரீ**. தியாகய்யர்வாளின் 101-வது ஆண்டு உத்ஸவமும், சென்ற 28-ந் தேதி முதல் 29-ந் தேதி காலைவரை சங்கீதக் கச்சேரிகளும் நடைபெற்றனவாம்.

அகில இந்திய சிறுவர் சங்கம்

புது டெல்லியிலே இருக்கும் அகில இந்திய சிறுவர் சங்கத்தின் ஆண்டு விழா பமேலா மவுண்ட் பேட்டன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றதாம். இதை யொட்டி நடன ராணி குமாரி ரமணியின் நடனமும் பஜனை

களும், வேறு நாட்டியங்களும் விசேஷமாக நடைபெற்றதாம்.

ஸ்டுடியோ ஸ்டிரைக்

சென்னை நியூடோன் ஸ்டுடியோவின் சிப்பந்திகள் சென்ற மாதத்தில் வேலை நிறுத்தம் செய்தனர். சுமார் இருநூறு பேர்கள் இதில் கலந்து கொண்டனர். கிருஷ்ணன், அண்ணாமலை என்ற ஊழியர்கள் உண்ணாவிரதமிருந்தனராம். வேலையிலிருந்து நீக்கப்பட்ட முப்பது சிப்பந்திகளை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் அவர்கள் கோரிக்கை. சில நாட்களுக்குப் பிறகு ஸ்டிரைக் வாபஸ் ஆகிவிட்டது.

ராமதாஸ்

ஸ்ரீ ஜகதீஷ் பிலிம்ஸ் தயாரிப்பான 'ராமதாஸ்' படத்தின் பத்திரிகைக் காட்சி இந்த மாதம் எட்டாந் தேதி சென்னை மினர்வா டாக்கீஸில் நடைபெற்றது. இக்காட்சிக்கு பத்திரிகாசிரியர்களும் மற்றும் சில நபர்களும், ஒய். வி. ராவ், குமாரி ருக்மணி, அவரது தயார் ஆகியவர்களும் வந்திருந்தார்கள்.

சரஸா

'ஆனந்த விகடன்' பொழுது போக்குச் சங்கத்தார் சென்ற இரண்டாந் தேதி, மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் 'நாரதர்' ஸ்ரீனிவாஸராவ் எழுதிய சரஸா என்ற நாடகத்தை நடித்துக் காட்டினர். முரளியாக வந்த எஸ்.வி. ரங்கா நன்றாகப் பாடினர். சரஸாவாக வந்தவரும் பரவாயில்லை. முகுந்தனை நடித்த 'நாரதர்' ஸ்ரீனிவாஸராவ் பிரமாதமான பெயரை அடைந்தார். அவர் 'பரத நாட்டியம்' ஆடியபொழுது சபையில் எழுந்த ஆரவாரத்திற்கு அளவே யில்லை. மீனைப் பாட்டியாக வந்தவரும் ரசிகர்களை வசியப்படுத்தினர்.

இந்நாடகத்திற்குத் தலைமை வகித்த மந்திரி பக்தவத்ஸலம் நாடகத்தில் நடித்தவர்களைப் பாராட்டிப் பேசினர். நாடகத்திற்கு பத்திரிகாசிரியர்களும் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

ஸ்டுடியோவில் தீ

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் கட்டிடத்தின் ஒரு பகுதியிலுள்ள எடிட்டிங் அறையில் சென்ற 5ந் தேதி மாலை தீப்பிடித்துக் கொண்டது. ஸ்டுடியோவிலுள்ள ஊழியர்களின் சாமர்த்தியத்தாலும், சேலம் தீயணைக்கும்படையின

யின் சாமர்த்தியத்தாலும் தீ அதிகமாகப் பரவவொட்டாமல் அணைக்கப்பட்டது. சுமார் ஐம்பதினைபிர ரூபாய் நஷ்ட மிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

'ராஜமுக்தி' வழக்கு

"ராஜமுக்தி படத்தின் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, மலபார், திருவாங்கூர், கொச்சின், சிலோன் ஆகிய பிரதேசங்களின் வினியோக உரிமைகள் தனக்கு இருப்பதாகவும், ஸ்ரீ. தியாகராஜபாகவதர் இந்த ஒப்பந்தத்தை மீறி அந்தப் பிரதேச உரிமைகளை விற்க முயலுகிறார் என்றும், பாகவதருக்கும் தனக்கும் ஒரு ஒப்பந்த மிருப்பதால், மேற்கூறிய பிரதேசங்களுக்கு 'ராஜமுக்தி'யை விற்கவோ, திரையிடவோ கூடாதென ஒரு தடை உத்திரவு விதிக்க வேண்டுமென்று" சென்னை ஹைகோர்ட்டில் கேப்டன் ஸ்ரீ. பி. டி. நாயுடு என்பவர் மனுச் செய்து கொண்டார்.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி கே. சுப்பராவ், இந்த மனுவை ஏற்று, ஸ்ரீ. தியாகராஜபாகவதருக்கு ஒரு தடை உத்திரவை விதித்தார். பிறகு ஸ்ரீ. தியாகராஜபாகவதர், மற்றும் சில வினியோகஸ்தர்களும் அப்பீல் செய்து கொண்டனர். அதில் ஸ்ரீ. பி.டி. நாயுடு என்பவர் வினியோக உரிமையில் கூட்டாளியே தவிர முதல் போடும் நபரல்ல வென்றும், லாப நஷ்டத்தில்தான் பங்குண்டே தவிர படத்தை திரையிடக் கூடாதென உரிமை கொண்டாட பாத்தியதை யில்லை என்றும் வழக்கில் நீதிபதி தீர்ப்பளித்து முன்பிருந்த தடை உத்திரவை நீக்கிவிட்டார்.

நல்ல படங்களுக்குப் பரிசு

பிரிட்டனில் திரையிடப் படும் படங்களில் சிறந்தவற்றிற்குப் பரிசு கொடுப்பதென் நிச்சயித்து ஒரு கழகம் ஏற்பட்டிருக்கிறதாம். இக்கழக அங்கத்தினர்கள் பாரபட்சமின்றி, படங்களைப் பார்த்து, சிறந்தவற்றிற்குப்பரிசு அளிப்பதென தீர்மானித்திருக்கிறார்கள். இதுவுமன்றி சிறந்த நடிகர்களுக்கும் பரிசு அளிப்பார்களாம். நல்ல புகழுக்கு வரக் கூடிய நடிகர்களுக்கு உத்சாகத்தையும் அளிப்பார்களாம். நல்ல யோசனைதான்!

நாடக மண்டபம்

லண்டன் தேம்ஸ் நதியின் தென் கரையில் கலாசாரத்தின் மத்திய ஸ்தலமாக விளங்கக் கூடிய முறையில் தேசிய நாடக மண்டபம் ஒன்று அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மண்டபம் கட்ட ஏற்கனவே நிதி வசூலித்து வருகின்றனர். அத்துடன் அரசாங்கம் ஒரு கோடி ரூபாயிக்கு மேல் நன்கொடை அளிக்க பார்லிமெண்டின் அங்கீகாரத்தைக் கோரப்போகிறதாம்.

தேசிய நாடகக் கூட்டுக் கவுன்ஸிலில், பிரிட்டனிலுள்ள எல்லா நாடக சங்கங்களின் பிரதிநிதிகளும் உள்ளனர். தேசிய நாடக மண்டபத்தில் ஷேக்ஸ்பியர் போன்றவர்களின் நாடகங்களை சீரிய முறையில் நடத்த உத்தேசித்துள்ளார்களாம்.

நீங்கள் விரும்பும்
உயர்ந்தரக ஜவுளிகள்

யாவும் குறைந்த
விலையில் எம்மிடம்
கிடைக்கும்

★

வாசுகி
வஸ்திராலயம்

22, மேல சித்திரை வீதி,
மதுரை.

இயற்கை நடிப்பு!

என்ன மிஸ்டர் குப்பு!..... கண்ணிலிருந்து ஒரு சொட்டு ஜலம் கூட வரலியே! எத்தனை தரம் கிளிஸிரின் ஊத்தரது!...... சேச்சே!.....
த்ஸ்ஸ்!... திடீர்னு சாயச் சொன்னு பின்னுடி கையை கொண்டு போகிறீரே!.....
1
2
நான் என்ன சார் பண்ணுவேன் அழுகையே வா மாட்டேனென்கிறது..... திடீரென்னு விழவும் பயமாயிருக்கு........
ஹூம்...... போன மாசம செத்துப் போன உம்பாட்டியை நினைச்சுண்டு அழுதுபாரும்......
3
4
எங்கே அந்த குப்புப்பயல்!...... ...வாங்கின கடனை கொடுக்கல்லே ....இவன் பெரிய நடிகனும்....... இன்னிக்கி ஒரு கை பாத்துடறேன்!
5
ஐயோ....தலை சுழல்கிறதே! ..என்ன செய்வேன்....
கேமராமேன்.... ஹூம்... டேப்பா சீக்கிரம்..க்விக் க்விக்........
6

நாட்டிய அரங்கேற்றம்

நந்தகுமார், மாயா ஜோதி முதலிய படங்களில் நடித்திருக்கும் டி. எஸ். ராஜலக்ஷ்மி காஞ்சீபுரம்

ரத்னசபாபதியிடம் பரத நாட்டிய சிக்ஷை பெற்று, இம்மாதம் 16-ந் தேதியன்று கோகலே ஹாலில் அரங்கேறினார். இவ் வைபவத்திற்கு விஜயம் செய்திருந்த ஸ்ரீ. ஈ. கிருஷ்ணய்யர் ராஜலக்ஷ்மியின் ஆட்டதகை மிகப் பாராட்டிப் பேசினார். ராஜலக்ஷ்மியின் அன்றைய ஆட்டம், அரங்கேற்றம் போலவே தோன்றவில்லை. வெகுநாளாக ஆடிவருபவரைப்போல, பிழையின்றி அழகாக ஆடினார். "தாயே யசோதா" "சின்னஞ் சிறு கிளியே" ஆகிய இரு பதங்களுக்கு பாவம் பிடித்தது மிக நன்றாயிருந்தது. "கள் வெறி கொள்ளுதடி" என்ற இடத்தில் தாளம் பிசகாமல் தள்ளாடி விழுந்தது பலே ஜோர்.

அன்று பின்பாட்டுப் பாடிய ராமசாமி ஐயரும், வி. டி. ராஜகோபாலனும் இனிய சாரீரத்தில், நல்ல உச்சரிப்புடன் பாடி கச்சேரி நன்கு சோபிக்கும்படி செய்தனர். இதர பக்க வாத்தியங்களும் நல்ல அனுசரணையுடனிருந்தன.

ராஜலக்ஷ்மியிடம் தாளக்கட்டும், நல்ல முகபாவங்களும், நாட்டியத்திற்கேற்ற தேக அமைப்பும் ஒருங்கே பொருந்தி யிருப்பதால் அவர் விரைவில் நாட்டிய உலகில் பிரபலம் அடைவார் என்று எதிர்பார்க்கிறோம்.

ஜூபிடரில் ராம்சிங்

வைரம் அருணாசலம் செட்டியாரின் "**புயலுக்குப் பின்**" நாடகத்தின் மூலம் ரஸிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்ற நடிகர் கே. ஆர். ராம்சிங் ஜூபிடரின் இரு படங்களில் நடிக்க ஒப்பந்தம் ஆகி யிருக்கிறார். கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் ராம்சிங்கிற்கு மந்திரவாதி மேக்-அப் போட்டு மூன்று அடி படம் எடுத்துப் பார்த்து ஜூபிடர் பிக்சர்ஸார் திருப்தி அடைந்தார்களாம். அவர்கள் தயாரிக்கும் **விஜய குமாரியில்**, ஒரு ராணி மந்திரவாதி ஒருவனைத் தன கையாளாக வைத்துக் கொண்டு பலே வேலைகளைச் செய்கிறாளாம். ராணியாக டி. ஆர். ராஜகுமாரியும், மந்திரவாதியாக கே. ஆர். ராம்சிங்கும் நடிப்பது தீர்மானமாகி விட்டது. ராம்நாத்—சேகர் ஜூபிடருக்காகத் தயாரிக்கப் போகும் படத்திலும் ராம்சிங் நடிப்பாராம். **விஜய குமாரி** கதையை ஏ. எஸ். ஏ. சாமியும், வசனங்களை "கர்ம யோகி"யும் தயாரிக்கிறார்கள்.

ஜெமினியில் ராஜகுமாரி

ஜெமினியில் இன்னொரு படத்தில் நடிப்பதற்காக டி. ஆர். ராஜகுமாரி ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

நாட்டியக்காரி

ஸ்ரீ நடராஜ கலா மண்டலி என்ற ஒரு சங்கத்தை மே மாதம் 15-ந் தேதியன்று சென்னை மாஜி

ஷெரீப் ஸ்ரீ. ராமஸ்வாமி நாயுடு அவர்கள் ஆரம்பித்து வைத்தார். சங்கத்தின் அங்கத்தினர்கள் அன்று நாட்டியக்காரி என்ற நாடகத்தை நடித்துக் காட்டினார்கள். நாடகத்தில் கதாநாயகன் சுந்தரமாக நடித்த ஜி. எஸ். மணி அனுபவித்துப் பாடி நடித்தார். அன்றைய நாடகத்திலே பைத்தியக்காரியாக நடித்த நாகலக்ஷ்மியின் நடிப்பு மிக நன்றா யிருந்தது. அடுத்தபடியாக புதுக்கோட்டை சீனுவின் நடிப்பைக் குறிப்பிடலாம். இரண்டொரு நடிகர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோருமே நன்றாக நடித்தார்கள். நாடகத்தின் பாட்டு அம்சம் பாராட்ட வேண்டியபடி அமைந்திருந்தது. இந்த சங்கம் கலை வளர்ச்சிக்காகப் பாடு படும் என்பதை அறிய மகிழ்ச்சி யடைகிறோம்.

கல்யாணி நாடகம்

"ஆனந்த விகடன்" துணை ஆசிரியர் தேவன் இருக்கிறாரே, அவருடைய கதைகள் அடிக்கடி நல்ல கைங்கரியங்களுக்கு நாடகங்களாய் நடிக்கப்பட்டு வருவது சந்தோஷிக்கத்தக்க விஷயமாகும். அந்த மாதிரி சந்தர்ப்பமொன்று சென்னை ரஸிக ரஞ்சனி சபாவில் இம் மாதம் 16-ம் தேதி நிகழ்ந்தது. காந்தி ஞாபகார்த்த நிதி வசூலுக்காக, "திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப்"பினர் "கல்யாணி" என்ற நாடகத்தை சிறப்பாக நடத்தி ரூ. 1,116 வசூல் செய்து உதவினர். இந்த நாடகத்திற்கு கனம் ஸ்ரீ. எம். பக்தவத்ஸலம் தலைமை வகித்தார்.

கலா மந்திரம்

டில்லி தமிழர்கள் இருக்கிறார்களே அவர்கள் சங்கீதம் நாட்டியம் முதலிய கலைகளில் மிகப் பிரியம் கொண்டவர்கள். முன்பே தெற்கேயிருந்து பலரை வரவழைத்துக் கச்சேரிகளை நடத்தி யிருக்கிறார்கள். சமீபத்தில் டில்லிக்குச் சென்ற நிருத்ய சாம்ராட் கோபால கிருஷ்ணாவை அவர்கள் தெற்கே சும்மாத் திரும்பவிட விரும்பவில்லை. அங்குள்ள கலா மந்திரத்தினர் இந்த கோபால கிருஷ்ணாவை ஆசிரியராகக் கொண்டு ஒரு–ஐந்து–மாத–நாட்டிய - வகுப்பை ஆரம்பித்திருக்கிறார்கள். இவ்வகுப்பை நடத்தி வைக்கும் பொறுப்பை ஸ்ரீமதி ஸரஸ்வதி ராமஸ்வாமி ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

பிலிம் சேம்பர் தேர்தல்

தென்னிந்திய பிலிம் சேம்பர் நிர்வாகிகள் தேர்தல் இம்மாதம் 9–ந்தேதி

Truthful
READY MADE CLOTHES

அழகை அழகு பெறச் செய்வது
அழகான
"ட்ரூத்புல் ஆடைகளே"
தயாரிப்பவர்கள் :
ட்ரூத்புல் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,
மதுரை.

நடைபெற்றது. பின் கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கே. சுப்ரமண்யம் (தலைவர்) ; ஏ. ராமையா, பி. புல்லையா, டி. சுந்தர ராவ் நாயுடு (உப தலைவர்கள்) ; பி. வி. கிருஷ்ணையா, ராமநாத் (காரிய தரிசிகள்) ; எல். எல். படேல் (பொக்கிஷதாரர்).

ஞான சௌந்தரி

ஸிட்டாடலின் **ஞான சௌந்தரி** தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி இம் மாதம் 16-ந் தேதியன்று சென்னை பாரகன் டாக்கீஸில் நடைபெற்றது. பத்திரிகைக்காரர்களும், தொழில் பிரமுகர்களும் இக் காட்சிக்கு ஏராளமாக விஜயம் செய்திருந்தனர்.

திருமணம்

கோவை டிரஷரி டிப்டி கலெக்டர் ஸ்ரீ. வி. ரங்காச்சாரி அவர்களின் புத்ரியும், நம் ஆசிரியர் "குண்டுசி"யின் மருமாளுமான சௌ. ருக்மணிக்கும், பாபநாசம் மின்சார சூபர்வைஸரும், மாரிக்குப்பம் பி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்களின் புத்திரருமான சி. நரசிம்மனுக்கும் இம் மாதம் 21-ந் தேதியன்று சென்னை தியாகராய நகரில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. தம்பதிகளுக்கு எமது ஆசீர்வாதங்கள் உரித்தாகும்.

ஸௌரபி பிக்சர்ஸாரின் "பக்த கும்பரா' கன்னடப் படத்தில் லக்ஷ்மிபாயும் ஹொன்னப்ப பாகவதரும்

எழுத்தாளர் மஹாநாடு

மூன்றாவது எழுத்தாளர் மகாநாடு நாகர் கோவிலில் இம் மாதம் 14, 15-ந் தேதிகளில் ஸ்ரீ. நாரண துரைக் கண்ணனின் தலைமையில் நடைபெற்றது. கனம் மந்திரி எம். பக்தவத்சலம் மஹாநாட்டைத் திறந்து வைத்தார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைதான் வரவேற்புக் கமிட்டித் தலைவர். மஹாநாட்டில் சொல் விருந்துகளுடன் சங்கீத விருந்துகளும் நிகழ்ந்தனவாம்.

நாணய சினிமா

"கையில் காசு, வாயில் பண்டம்" என்று நாம் விளையாட்டாகச் சொல்லுவோமே அதுபோல் நாணயத்தைப் போட்டால் சினிமா பார்க்கும்படி ஒரு இயந்திரம் கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாம். 'ஸெல்யு-ஸவுண்ட்' என்ற இந்த இயந்திரத்தினுள் பதினாறுமில்லி மீட்டர் படங்களில் ஏழு விதம் வைக்கப் பட்டிருக்கிறதாம். நாணயத்தை இயந்திரத்தின் துவாரத்தில் போட்டதும் தானாகவே இயந்திரத்தின் மீதுள்ள திரையில்படம் தெரிய ஆரம்பித்து விடுகிறதாம். பெரிய கொட்டகையில் பார்க்கும் படத்திலுள்ள பேச்சு, பாட்டிற்கும் இந்த இயந்திரத்தில் காட்டப் படுவதற்கும் வித்தியாசமே தெரிவதில்லையாம். பெரிய கொட்டகையில் உள்ள சினிமா இயந்திரங்கள் நாணயமற்ற முறையில் அடிக்கடி படங்களை அறுத்து விடுகிறதே, அது போல் இந்த இயந்திரம் செய்வதில்லையாம். மிகவும் நாணயமாக நடந்து கொள்கிறதாம்.

நாரதர் மலர்

சில வருஷங்களாக நாரதர் மலர் வராதது 'நாரதர்' ரஸிகர்களிடையே பெரிய குறையாகத்தான் இருந்திருக்கும். இக்குறையைப் போக்கத்தானே என்னவோ இவ்வருஷம் நாரதர் மலர் மிகப் பிரமாதமாக வெளி வந்திருக்கிறது.

மலரைப் பார்த்ததுமே அதைப் பிரித்துப் பார்க்க மனம் துடிதுடிக்கிறது. ஆனால் பிரித்துப் பார்த்த பிறகு அதைப் பற்றி என்ன சொல்வது என்ற எண்ணம் ஏற்படுகிறது. மொத்தத்தில் சொல்லப்போனால் 'நாரதர் மலர்' இதுவரை இம்மாதிரிவந்ததே இல்லை எனலாம். எங்கும் படம்;படம் தான். மூவர்ணப்படம், ஆர்ட் படம், கண்கவர் படங்கள் தான். இவைகளில் 'ஜாக்கெட்' பேஷன் படங்கள் மிகவும் நன்ருக இருக்கின்றன. படிக்கவும், அநேக விஷயங்கள் இருக்கின்றன, 'ராவுஜி'யின் 'பாதாள யாத்திரை' கட்டுரையும், 'எங்காளோ' என்ற 'சுரபி'யின் பாட்டும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவை.

இவ்வளவு அழகாகத் தயாரித்து மூன்றே ரூபாய் விலையில் இந்த மலரைக் கொடுக்கிருர்கள் என்ருல், அது ''நாரதர்'' ரஸிசிகர்களின் யோகத்தையே காட்டுகிறது.

சந்திரலேகா மலர்

ஜெமினி பிக்சர்ஸார் சந்திரலேகாவைத் தான் அற்புதமாக சிருஷ்டித்தார்கள் என்ருல் அதைவிட அதி அற்புதமாக "சந்திரலேகா மலரை"த் தயாரித்திருக்கிருர்கள்.

வழுவழுப்பான ஆர்ட் காகிதத்தில் மூவர்ண, நான்கு வர்ணப் படங்களும், ஆர்ட்படங்களும், சந்திரலேகா படம் தயாரிக்க ஏற்பட்ட கஷ்டம், பொருள் செலவு, படத்தை வெற்றிகரமாக எடுக்க உதவியவர்களைப் பற்றிய சிறு குறிப்புகள் முதலியவை மலரில் இருக்கின்றன.

இம்மாதிரி படத்திற்காக ஒரு புத்தகத்தை வெளியிடுவது மேல் நாட்டில் தான் வழக்கம். நம் நாட்டில் முன்பு சிலர் செய்திருக்கிருர்கள். ஆனல் சந்திரலேகா மலருக்கு இவை எதுவும் இணையாகாது.

இவ்வளவு அழகான மலரின் விலை ஒரு ரூபாய் தான். சந்திரலேகா காட்டப்படும் தியேட்டர்களிலும், ஜெமினி பிக்சர் ஸர்க்யூட், பிராட்வே, சென்னையிலும் இம்மலர் கிடைக்கும்.

குருகுலம்

[குருகுலம். மாதப்பத்திரிகை. ஆசிரியர்: நா. ப. தணிகை அரசு, வெளியிடுவோர்: இந்து மத பாடசாலை, வாலாஜாபாத். தனிப்பிரதி விலை அணா மூன்று]

சுகாதாரம், அறிவுக் கட்டுரை, பாடசாலையின் மகத்துவத்தைப் பற்றிய விவரங்கள் முதலியவைகளை பல ஆசிரியர்கள், அறிஞர்கள் மாணவர்கள் வெகு அழகாக எழுதி யிருக்கிருர்கள். படித்துத் தெரிந்து கொள்ள குருகுலத்தில் நிறைய விஷயங்கள் இருக்கின்றன.



ஸினிமாலோகம்

பில்ஹணா

முபாரக் பிக்சர்ஸார் பிரகதி ஸ்டுடியோவில் தயாரிக்கும் 'பில்ஹணா'வும் விரைவில் திரைக்குத் தயாராகி விடுமாம். கே. ஆர். ராமசாமி, எ. ஆர். சகுந்தலா, பாலசரஸ்வதி, புளிமூட்டை, ஷேக்கப்பா, அங்கமுத்து முதலியவர்கள் நடித்திருக்கிறார்கள். பி. என். ராவ் டைரெக்ட் செய்து வருகிறார்;

சம்சார நௌகா

பி. ஆர். பந்துலு, டி. பிரேமாவதி, டி. சூர்யகுமாரி, எம். ஜே. ஆண்டாள், டி. ஆர். ராமச்சந்திரன், விகடம் கிருஷ்ணமூர்த்தி முதலியவர்கள் நடிக்கும் 'சம்சார நௌகா' சென்னையிலும் வெளியூர்களிலும் விரைவிலேயே திரையிடப்படும் என்று தெரிகிறது. முன்பு சம்சார நௌகா கன்னட சினிமாவாக வந்து நல்ல பெயரை அடைந்தது. இப்பொழுது தமிழ்ப்படமாக வெளிவருகிறது.



"கிருஷ்ண பக்தி" தமிழ்ப் படத்தில் பி. எ. பெரிய நாயகியும் எ. ஆர். சகுந்தலா நாட்டியம் ஆடுவதைக் காணலாம்.

போஜன்

சேலம் ஜெயப்பிரகாஷ் பிக்சர்ஸ் தயாரிக்கும் 'போஜனில்' பி. எஸ். கோவிந்தனும், வரலக்ஷ்மியும் சில காதல் கட்டங்களில் நன்கு நடித்திருக்கிறார்களாம். ஆர். பாலசுப்ரமண்யமும் தம் கைவரிசையைக் காண்பித்திருக்கிறாராம். காளிஎன் ரத்னத்தின் ஹாஸ்யம் படுஜோராக இருக்கிறதாம்.

ஆண்டாள்

சூர்யா பிலிம்ஸின் 'ஆண்டாளில்' யு. ஆர். ஜீவரத்தினம் நன்கு பாடியிருக்கிறாராம். சௌதாமினியின் நடனமும், காளி ரத்னத்தின் ஹாஸ்யமும், மாதவனின் 'வல்லன்' செயலும் படத்திற்கு மெருகிட்டது போலிருக்கிறதாம். யோகி ஸ்ரீ. சுத்தானந்தரின் பாடல்களும், வேல்சாமி கவியின் டைரெக்ஷனும் இதற்குப் பயன் பட்டிருக்கிறது.

ஆதித்தன் கனவு

சேலம் மாடர்ன் தியேட்

டர்ஸின் ‘ஆதித்தன் கனவு’ மும்முரமாகத் தயாராகி வருகிறதாம். விரைவிலேயே திரையிட ஏற்பாடு செய்து வருகிறாராம் டி. ஆர். எஸ். டி. ஆர். மஹாலிங்கம், எம். ஆர். சாமிநாதன், டி. பிரேமாவதி டி. ஆர். ரஜனி ஆகியவர்கள் நடிக்கும் படம் இது.

அபிமன்யு

ஜூபிடர் பிக்சர்ஸார், கோவை சென்டிரல் ஸ்டுடியோவில் தயாரித்த “அபிமன்யு” சென்ற 6-ந்தேதி முதல் அநேக இடங்களில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. பாமரர்களுக்குப் பிடித்தமான இக்கதை வெகு நன்றாக தயாரிக்கப் பட்டிருக்கிறதாம்.

ராம்நாத்-சேகர்

ஜெமினி ஸ்டுடியோவில் உள்ள காமிரா நிபுணர், ஸ்ரீ. ராம்நாத்தும், ஆர்ட் டைரெக்டர் ஸ்ரீ. சேகரும் ஜூபிடருக்கு ஒரு படத்தை தயாரித்துக் கொடுக்கப் போகிறார்களாம்.

மோஹினி

ஜூபிடருக்காக தயாராராகி வரும் மற்றொரு படமான ‘மோஹினி’யில் மாதுரி தேவியும், பாலையாவும் நன்கு நடித்து வருகிறார்களாம்.

வேலைக்காரி

கோவையில் ஜூபிடரின் ‘வேலைக்காரியும்’ மளமள வென்று தயாராகி வருகிறது. கே. ஆர். ராமசாமி, பாலையா, வி. என். ஜானகி, நம்பியார், பாக்கியம் முதலியவர்கள் நடிக்கிறார்கள். ஏ. எஸ். ஏ. சாமி இதை டைரெக்ட் செய்து வருகிறார்.

கோகுலதாஸி

திரன் கம்பெனி தயாரிப்பான ‘கோகுலதாஸி’ கூடிய சீக்கிரமே வெளிவருமாம். ஹொன்னப்ப பாகவதர் [illegible] கத்

“ஞானசௌந்தரி”யில் லேனாளாக நடிக்கும் பி. எஸ். சிவபாக்கியம்

தோன்றி, நன்கு பாடியிருக்கிறாராம். எம். வி. ராஜம்மா, சௌதாமினி, டி. ஆர். ராமச் சந்திரன் முதலியவர்களும் நன்கு நடித்திருக்கிறார்களாம். கே. சுப்ரமண்யம் இதை டைரெக்ட் செய்து வருகிறார்.

ரத்னகுமார்

முருகன் டாக்கீஸ் ‘ரத்னகுமார்’ சென்னை நியூடோன் ஸ்டுடியோவில் தயாராகி வருகிறதாம். பி. யு. சின்னப்பாவும் பி. பானுமதியும் சேர்ந்து சில உருக்கமான பாடல்களை பாடியிருக்கிறார்களாம். மற்றும் பாலசுப்ரமண்யம், மீனலோசனி, கிருஷ்ணன் மதுரம், கே. பி. கேசவன் முதலியவர்கள் நடிக்கிறார்கள். இப்படத்தை கிருஷ்ணன்—பஞ்சு டைரெக்ட் செய்து வருகிறார்கள்.

கிருஷ்ண பக்தி

நக்ஷத்திர நடிகர்கள் நிறைந்த ‘கிருஷ்ணபக்தி’ கூடிய சீக்கிரத்தில் திரைக்கு வந்துவிடுமாம். ஆர். எஸ். மணியின் திறமை மிக்க டைரெக்ஷனிலே வளர்ந்து வருகிறது இப்படம்.

மாயா ரம்பா

கமல் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் ‘மாயா ரம்பா’வின் படப்பிடிப்பு சோபனா சலா ஸ்டுடியோவில் ஆரம்பமாகி விட்டதாம். அஞ்சலி தேவி பிரதம பாகத்தில் நடிக்கிறார்.

குண்டூசி டைரி

134244
600 008

ஏப்ரல் 1948

தேதி

1. வைரம் அருணாசலம் செட்டியாரின் "ராணி" நாடகம் ஆரம்பம்.

3. டி. கே. எஸ். பிரதர்ஸ் — சேலம் ஷண்முகா பிலிம்ஸ் கூட்டுத் தயாரிப்பான "பில்ஹணன்" பத்திரிகைக் காட்சி நியூ க்ளோப்பில் நடைபெற்றது.

4. சினிமா தியேட்டர் தொழிலாளிகள் ஏப்ரல் 9-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்தனர்.

5. ஜெமினி "சந்திரலேகா" தணிக்கை செய்யப்பட்டது.

8. ஜெமினி "சந்திரலேகா" பத்திரிகைக் காட்சி வெல்லிங்கடனில் நடைபெற்றது.
   தியேட்டர் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்யும் தீர்மானத்தை வாபஸ் பெற்றனர்.

9. ஜெமினி "சந்திரலேகா" சென்னை கிரௌன், ஸ்டார், வெல்லிங்டன், ஆகிய மூன்று தியேட்டர்களிலும், மாகாணத்தில் மற்றும் முப்பத்தாறு தியேட்டர்களிலும் திரையிடப்பட்டது.

12. ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மி ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாரானார்.

13. புது வருஷப் பிறப்பு காரணமாக திருச்சி ரேடியோ நிலையத்தார் ஒரு பிரத்தியேக நிகழ்ச்சியை நடத்தினர். இதில் எம். கே. டி. பாகவதர், கிருஷ்ணன், மதுரம், நாராயண ராவ் ஆகியோர் பங்கெடுத்துக் கொண்டனர்.

14. சென்னையில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட பாரகன் டாக்கீஸ் "கிரஹப் பிரவேசம்" தெலுங்குப் படத்துடன் ஆரம்பமாயிற்று.

16. சந்தானம் பிக்சர்ஸ் "நவீன வள்ளி" & "கிருஷ்ண துலாபாரம்" சென்னை கெயிட்டியில் திரையிடப்பட்டது.

23. டி. கே. எஸ். "பில்ஹணன்" கோவையிலும், பாண்டிச்சேரியிலும் முதன் முதலாகத் திரையிடப்பட்டது.
    "ராஜ முக்தி" படத்தை சில பிரதேசங்களில் திரையிடக் கூடாதென ஒரு இடைக்கால தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

26. ஜுபிடரின் "அபிமன்யு"வின் தணிக்கைக் காட்சி நடைபெற்றது.

29. சென்னையில் ஜெமினி ஸ்டுடியோ தவிர மற்ற ஸ்டுடியோ தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர். இரு தொழிலாளிகள் உண்ணாவிரதம் ஆரம்பித்தனர்.

30. "விசித்திர வனிதா" சென்னை கெயிட்டியிலும், பெரம்பூர் லக்ஷ்மியிலும் திரையிடப்பட்டது.

Printed by P. Arunachalam at the Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 246, Thambu Chetty S[illegible] Madras 1.

கிருஷ்ண பக்தி
டைரக்ஷன் : R. S. மணி
பி. யு. சின்னப்பா
டி. பாலசுப்ரமண்யம்
கே. ஆர். ராமசாமி
ஸி. எஸ். ஜெயராமன்
என். எஸ். கிருஷ்ணன்
புளிமூட்டை
டி. ஆர். ராஜகுமாரி
எஸ். பி. எல். தனலக்ஷ்மி
பி. ஏ. பெரியநாயகி
ஏ. ஆர். சகுந்தலா
டி. ஏ. மதுரம்
ஸி. டி. ராஜகாந்தம்
ஸ்டுடியோ : நியூடோன்
கிருஷ்ணா பிக்சர்ஸ்
சென்னை. 17.

மஹத்தான ஆரம்பம்!

டிஸம்பர் **12**-ந் தேதி யன்று

ஸ்ரீ ராமானந்தா பிக்சர்ஸ்

மதனமாலா

— தமிழ்ப் படம் —

டைரெக்ஷன் — கே. வேம்பு

கோயமுத்தூர்
எடிஸன்

*

திருச்சினுப்பள்ளி
ராமகிருஷ்ணு

*

சேலம்
பிரபாத்

*

பாண்டிச்சேரி
ராமகிருஷ்ணு

*

காரைக்குடி
நடராஜா

*

தூத்துக்குடி
பாலகிருஷ்ணு

ஸ்ரீ ராம்,
ரஜனி,
எம் வி. மணி,
ரங்காச்சாரி
வி. குமார்.
வி. டி.
கல்யாணம்
பி. எஸ்.
வீரப்பா,
டி.எஸ்.ஜய
வி. ராஜலக்ஷ்மி
எஸ். ஆர்.
ஜானகி,

முதலியோர
நடித்தது.

கூடிய சீக்கிரத்தில்:

பங்களூர்-சாரதா, மைசூர்-பிரபுதேவ்,
மதுரை-ஸிடி சினிமா, விருதுநகர்-ஸெண்ட்ரல்.

விவரங்களுக்கு **தமிழ்நாடு டாக்கீஸ்** 16, மவுண்ட்ரோட். சென்னை.